
# தமிழரசு



1.5.1995 ரூ.3

கோவை மாவட்டச் சிறப்பிதழ்

## எட்டாம் உலகத்

## தமிழ் மாநாடு

## இசையரங்கம்




திரு துர்காபிரசாத்-வீணை இசை



திரு விசுவேசுவரன்-சந்தூர் இசை

திருவாளர்கள்
சி.கே. பதஞ்சலி,
சி.வி. மகாலிங்கம்
புல்லாங்குழல் இசை



## இந்த இதழில்...



# மே திருநாள்!

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு சிகாகோ நகரில் ஆண்டாண்டு காலமாகக் கொத்தடிமையாக உழைத்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் சிந்தித்து ஒன்று கூடிப் போராடி, ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் பணி நேரமாக வரையறுக்கப்பட்டு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, உழைக்கும் வர்க்கம் அடிமை விலங்கை ஒடித்து நொறுக்கி விடுதலை பெற்று வீறு கொண்டு, எழுந்த நாள் 1889 'மே' முதல் நாள் ஆகும். அந்தநாள், ஆண்டுதோறும் 'மே' தினத் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆதிக்க வெறியர்களின் ஆணவத்தை அழித்து அன்று முழங்கிய உழைப்பாளாகளின் உரிமைகீதம் தான், இன்று வாழ்வில் வசந்தமாகப் பல உரிமைகளைத் தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தந்துள்ளது.

சாதி, மதம், இனப்பாகுபாடு இன்றி உலகத்தில் உள்ள அனைத்துத் தரப்புத் தொழிலாளர்களும் ஒன்று கூடி, தங்களது உரிமைக்காகப் போராடிப் பெற்ற வெற்றியாகக் கொண்டாடும் மகிழ்ச்சியான திருநாள் இந்த 'மே' திருநாளாகும்.

*– மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி*
*டாக்டர் ஜெ.ஜெயலலிதா*


☆ கேபிள் டிவி. உரிமையாளர்கள் சங்க மாநில நன்றி அறிவிப்பு மாநாடு - மாண்புமிகு முதலமைச்சர் உரை. . . 3
☆ திரைப்படத் தொழிலாளர்கள் குடியிருப்பு அடிக்கல் நாட்டு விழா - மாண்புமிகு முதலமைச்சர் உரை. . . 9
☆ காடம்பாறை மின்திட்டம் . . . . . . . 17
☆ சிறுவாணி குடிநீர்த் திட்டம் . . . . . 19
☆ வளர்ச்சியுறும் திருப்பூர் . . . . . . . 23
☆ வேளாண்மை வளர்ச்சி. . . . . . . . 25
☆ கல்லாறு கனித்தோட்டம் . . . . . . . 29
☆ கோவை மாவட்டச் சுற்றுலாத் தலங்கள் . . . . . . . . . 33
☆ உடுமலை நாராயண கவி . . . . . . 37
☆ கோவை மருத்துவக் கல்லூரி . . . . 40
☆ கோரா பட்டுச்சேலை. . . . . . . . . 43
☆ கோவை மாவட்டத் தொழில் மையம் . . . . . . . . . . . 49
☆ உள்ளங்கவரும் உடுமலைப்பேட்டை . 59
☆ சிவாஜிக்கு செவாலியே விருது வழங்கும் விழா. . . . . . . . . . 65
☆ மருதமலை மாமணியே முருகையா . 73
☆ கோவை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் . . . . . . . . 77


**கோவை மாவட்டச் சிறப்பிதழ்**

### இதழ்தோறும் ஓர் இனிய குறள்:




*நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்*
*வான்இன்று அமையாது ஒழுக்கு. (20)*

* எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.


தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு: 2026
சித்திரைத் திங்கள்: 18
மலர்: 25 இதழ்: 21
1.5.1995 விலை: ரூ. 3

# கோயம்புத்தூர் மாவட்டம்




மாவட்டத்தின் பரப்பளவு: **7,469** சதுர கிலோ மீட்டர்.

மாவட்டத் தலைநகரம்: கோயம்புத்தூர்.

மாவட்டத்தின் எல்லைகள்: வடக்கெல்லை பெரியார் மாவட்டம், கர்நாடக மாநிலம். தெற்கெல்லை மதுரை மாவட்டம், கேரள மாநிலம், மேற்கு எல்லை கேரள மாநிலம், நீலகிரி மாவட்டம், மைசூர் மாநிலம். கிழக் கெல்லை சேலம் மாவட்டம், திருச்சிராப் பள்ளி மாவட்டம்.

இதில் அடங்கியுள்ள 7 வட்டங்கள்: கோவை தெற்கு, கோவை வடக்கு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, உடுமலை, வால்பாறை, திருப்பூர், அவினாசி, பல்லடம்.

ஊராட்சி ஒன்றியங்கள் **24;** அவை: கோவைப் பிரிவில் மதுக்கரை, தொண்டா முத்தூர், பேரூர், பெரியநாயக்கன் பாளையம், சர்க்கார் சாமகுளம், காரமடை பொள்ளாச் சிப் பிரிவில் பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு, கிணத்துக்கடவு, குடிமங்கலம், மடத்துக்குளம், உடுமலைப் பேட்டை, ஆனைமலை, வால்பாறை திருப்பூர் வட்டத்தில் அன்னூர், அவினாசி, திருப்பூர் பல்லடம், பொங்கலூர், சுல்தான் பேட்டை, சூலூர்.



திருப்பணி வேலை நடைபெற்றுவரும் - மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் (பழைய தோற்றம்)

# 'புதிய விடியல்'

**18.4.1995 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழகக் கேபிள் டி.வி. உரிமையாளர்கள் சங்க மாநில நன்றி அறிவிப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை**

மூலைக்கு ஒன்றாகச் சிதறிக் கிடந்த, கேபிள் டி.வி.ஆபரேட்டர்கள், உரிமையாளர்கள் அனைவரும், ஒற்றுமை உணர்வோடு ஒன்று சேர்ந்து, ஒரு சக்தி மிக்க இயக்கமாக




உருப்பெற்று, நடத்துகின்ற மாநில நன்றி அறிவிப்பு மாநாட்டில், பங்கு கொள்வதில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

கேபிள் டி.வி. உரிமையாளர்களை, ஒரு பாச மிக்க குடும்பத்தின் அங்கத்தினர்களாக, என் முன்னே இங்கே காண்பதில், என் மகிழ்ச்சி இரட்டிப்பு ஆகிறது.

தொலைக்காட்சியும், செயற்கைக் கோள் வழி ஒளிபரப்பும், இந்த இருபதாம் நூற்றாண்டின், ஈடு இணையற்ற அறிவியல் அற்புதங்கள். நமது வாழ்க்கையின் அடிப் படைகளிலே, மாபெரும் மாறுதல்களை ஏற்படுத்தும் ஆற்றலும், மக்களின் கண்ணையும், கருத்தையும், ஒருங்கே கவரக் கூடிய ஈர்ப்புச் சக்தியும், தொலைத்தொடர்புச் சாதன மான, தொலைக்காட்சிக்கு உண்டு என்பது, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பேருண்மை ஆகும். Seeing is believing; எதைக் காண்கிறோமோ அதைத் தான் நம்புகிறோம் என்பதன் அடிப்படையில், கண்ணுக்கு எட்டாதவைகளையும், கருத்துக்குப் புலன் ஆகாதவைகளையும், நமது கண்களாலே நுகர்ந்து, புரிந்து கொள்ள வைக்கின்ற, ஒரு சக்தி மிக்க சாதனம் தான். விண்கோள் வழித்

தொலைக்காட்சி ஒளிபரப்பு என்கிற அறிவியல் அற்புதம் ஆகும். நாம் வாழ்ந்து வருகின்ற பூமி, பரந்து விரிந்து கிடந்தாலும், பூமியின் இதரப் பகுதிகளில், நிகழ்கின்ற நிகழ்ச்சிகள், நொடிப் பொழுதில் நம் கண்ணுக்கு முன்னே, சின்னத்திரையில் ஒளிரும்போது, உலகம் மிகவும் குறுகியதாக மாறி, உலக மக்கள் அனைவரும், ஒரு குடும்பத்தவரே, என்கின்ற உயர்ந்த எண்ணத்தை, இந்தச் செயற்கைக் கோள் ஒளிபரப்பு ஏற்படுத்தி வருகின்றது.

நமது கலாச்சாரம், பண்பாடு ஆகியவை. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவு வதற்கும், இந்திய நாட்டின் தொன்மைச் சிறப்பை, உலகத்தின் அனைத்துப் பகுதி வாழ் மக்களும், உணர்ந்து கொள்வதற்கும், இதே சாதனம், ஒரு கருவியாக விளங்கும் என்பதில் ஐயம் இல்லை. நமது கலைகள், கலாச்சாரம், பண்பாடு ஆகியவை, மேலை நாடுகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி, ஒரு புதிய திருப்பு முனைக்கு, வழி வகுக்கும் என்று, உறுதியாக நம்புகிறேன்.

அத்தகைய ஓர் அரிய, அறிவியல் அற்புதத்தை, ஒவ்வொரு வீட்டிற்கும், ஏன், ஒவ்வொரு தனி மனிதன் முன்னாலும், கொண்டு செல்கின்ற, ஒரு மாபெரும் சமுதாயப் பொறுப்பும், கடமையும் உள்ள, வல்லவர்களின் கூட்டம் தான், இங்கே என் முன்னே அமர்ந்து இருக்கின்ற, கேபிள் டி.வி. உரிமையாளர்கள். இந்த உண்மையை, மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும், என்னைப் பொருத்த வரையில், உங்களது சமுதாயக் கடமையையும், முக்கியத்துவத தையும், நான் அங்கீகரிக்க விரும்புகிறேன்.

பொழுதுபோக்குக்கு மட்டும் இன்றி, மக்களின் நல்வாழ்விற்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஏற்ப, தொலைக்காட்சி ஒளிபரப்பை, மக்களுக்கு வழங்குகின்ற சமுதாயத் தொண்டர்களாகத் தான், உங்களை நான் காண்கின்றேன். உங்கள் வாழ்க்கை வளம் பெற்றால், மற்றவர்களின் வாழ்க்கையும் வளம் பெறும், என்ற உந்துதலின் அடிப்படையில், எங்கள் அரசு, இந்தத் தொழிலின் முக்கியத்துவத்தை, அங்கீகரிக்கும் வகையில் பல சலுகைகளை அறிவித்துள்ளதை, இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கேபிள் டி.வி. உரிமையாளர்கள், இயக்குபவர்கள், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற, ஒரு விஞ்ஞான அற்புதத்தை, இனிய தமிழக மக்களின் இல்லங்களில், கொண்டு செல்லும் தொண்டர் படை, என்கின்ற எண்ணத்தை, மக்கள் மனதில் நீங்கள் அனைவரும், உருவாக்க வேண்டும் என்று, இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்தச்செயற்கைக் கோள் ஒளிபரப்பு, வியாபார ரீதியில் நடத்தப்படும். ஒரு வர்த்தகம் என்றும், மக்களின் நேரத்தை வீணடிக்கின்ற ஒரு சாதனம் என்றும், பல இடங்களில், அபிப்பிராயங்கள் நிலவுவதை, நான் அறிவேன்.

அந்த எண்ணம் மறைய வேண்டும் என்றால், செயற்கைக் கோள் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்கள். தங்கள் சமுதாயக் கடமைகளைச் சரிவர ஆற்ற வேண்டும். சமுதாயத்தின் பலமுனை வளர்ச்சிக்கு வித்திடுகின்ற, புதுமைக் கருத்துக்களையும், தகவல்களையும், உலகின் பல்வேறு மூலை களிலிருந்து, கொண்டு வந்து வழங்க வேண்டும். கண்ணுக்கும் கருத்துக்கும் விருந் தாகும் நிகழ்ச்சிகளையும், நம் அறிவையும்,திறமையையும், வளர்ப்பவை களாவும் அமைக்க வேண்டும், என்கின்ற ஒரு வேண்டுகோளை, இந்தக் கூட்டத்தின் வாயிலாக, முன் வைக்க விரும்புகிறேன்.

## மூவேந்தர் ஆண்ட நாடு

பசும்பூண் பாண்டியன் சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் - சேரன் பல்யானைச் செங்கெழு குட்டுவன், இளஞ் சேரல் இரும்பொறை, சேரன் செங்குட்டுவன் ஆகிய மூவேந்தரும் கொங்கு நாட்டை வென்றதாக வரலாறு இருக்கிறது. ஆனால், யாரும் நீண்டகாலம் நிலையாக ஆண்ட தில்லை!



செயற்கைக்கோள் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையே, ஒரு பாலமாகத் திகழ்பவர்கள், இந்தக் கேபிள் டி.வி. உரிமையாளர்கள், மக்களோடு நெருங்கிப் பழகி, அவர்களின் உள்ளக் கிடக்கையை, அறியும் வாய்ப்பும், ஆற்றலும் பெற்றவர்கள். இந்த விஞ்ஞானத் தின் அற்புதம், மனிதகுல வளர்ச்சிக்கு, எந்த வகையில் உறுதுணையாகச் செயல்பட வேண்டும் என்று பொதுமக்கள் கருது கிறார்களோ, அந்த எண்ண ஓட்டத்தைச் செயற்கைக் கோள் ஒளிபரப்பாளர்களுக்குக் கொண்டு செல்லுகின்ற மாபெரும் கடமையும், பொறுப்பும், உங்களுக்கு உண்டு.

கருத்துப் பரிமாற்றத்திற்கும், புதிய முற்போக்குச் சிந்தனைக்கும், வழி வகுக்கும் வகையில், சமுதாயத்தில் பணி ஆற்ற வேண்டிய கடமை, உங்களுக்கு உண்டு என்பதை, நீங்கள் ஒரு கணமும் மறக்கலாகாது.

வணிகம், வர்த்தகம் என்ற உணர்வு, ஒரு புறம் இருந்தாலும், நாம் மேற்கொள்ளுகின்ற பணி, சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், அடிப்படையாக விளங்குகிறது என்ற உணர்வும், பெருமிதமும், மறுபுறம் இருக்க வேண்டும். இந்தச் சமுதாயம் உயர்வதற்கு, நாம் ஒரு கருவி என்ற எண்ணம், உங்கள் ஆழ்மனதில், நிச்சயமாக வேரூன்ற வேண்டும்.

எனது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, நீங்கள் அனைவரும் இந்தப் பணியை, ஒரு புனிதப் பணியாக மேற்கொள்வீர்கள் என்று, நான் உறுதியாக நம்புகின்றேன். அத்தகைய ஒரு லட்சிய உணர்வுடன், இந்தப் பணியை மேற்கொள்ளும்போது, நீங்கள் எதிர்கொள்ள வேண்டிய இன்னல்களையும், இடையூறுகளை யும், தீர்த்து வைக்க, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, எப்போதும் தயாராக இருக்கும் என்பதையும், தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற கொள்கையின் அடிப்படையில், நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டிருக்கிறீர்கள்.

உங்களது வாழ்க்கையில, ஒரு புதிய விடியல், உங்களுக்காகக் காத்துக் கொண் டிருக்கிறது. உங்கள் தொழிலுக்கு, ஒரு புதிய அங்கீகாரம் கிடைத்துள்ளது, உங்கள் வாழ்க் கையில், புது வசந்தம் நிலவப் போகிறது. எதிர்காலத்தில், இத்துறையின் வளர்ச்சிக்கு,, எங்கள் அரசு, உற்ற துணையாக என் றென்றும் விளங்கும்.

பொதுவாக, பாராட்டு விழா நிகழ்ச்சி களில், நான் பங்கு கொள்வது இல்லை. ஆனால், உள்ளார்ந்த ஈடுபாட்டுடன், நன்றி கூற விரும்புகிறவர்களின், மனிதாபி மானத்தை, நான் பாராட்ட வேண்டும், என்ற ஓர் எண்ணத்துடன், இத்தகைய விழாக்களில் நான் பங்கேற்று வருகிறேன். உங்கள் அனைவரின் ஆர்வத்தையும், ஈடுபாட்டையும், கண்ட பின்பு தான், நான் இந்த நன்றி பாராட்டு விழாவில் கலந்து கொள்ள ஒப்புக்கொண்டேன்.

தங்கள் சொந்த இச்சைகளை முன்னி றுத்தி, மக்கள் நலனைக் காற்றிலே பறக்கவிட்டு, சிலர் தமிழகத்தில், செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில், நீங்கள் அனைவரும் ஒன்று கூடி, எனக்குத் தெரிவித்த பாராட்டுதல்களுக்கும், ஆதரவுக் கும், எனது உளமார்ந்த நன்றியை உரித் தாக்கிக் கொள்கிறேன்.

பொது வாழ்வில் ஈடுபடுவோர்கள், மக்கள் நலன் ஒன்றையே, தங்கள் குறிக்கோளாகக்

கொண்டு செயலாற்ற வேண்டும், என்கின்ற அடிப்படை சித்தாந்தத்தில், எனக்கு உறுதி யான நம்பிக்கை உண்டு. ஆனால், தமிழ் நாட்டில், சமீப காலத்தில், நடைபெற்று வரு கின்ற சில சம்பவங்கள், அந்த சித்தாந்தத்தின் அடிப்படைகளையே, தகர்த்து எறிந்து விடுமோ, என்ற அஞ்ச வேண்டி உள்ளது.

என்னைப் பொறுத்த வரையில், மக்கள் சக்தி ஒன்றையே, நான் நம்பி இருக்கிறேன். இங்கே குழுமி இருக்கின்ற, அத்தனை அன்புச் சகோதர, சகோதரிகள், ஆகியோரின் ஆதரவையும், நல்லெண்ணத்தையும், மாபெ ரும் சொத்தாகக் கருதுகிறேன்.

தமிழக மக்களின் பேராதரவும், நம்பிக் கையும், மக்கள் பணி ஆற்ற, எனக்கு உறு துணையாக இருக்கும், மாபெரும் சக்தி என்றால், அது மிகையாகாது.

அவதூறு கூறுவதற்கென்றே, சிலர் அவ தாரங்கள் எடுத்து வந்துள்ளனர். நல்லவர் களுக்கு மேலே, வட்டமிடும் வல்லூறு களைப் போல், திட்டமிட்டு தீயவைகளைத் திக்கெட்டும் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். விஷவித்துக்களை வியாபாரம் செய்யும், அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காரர்கள், மலிந்து விட்டார்கள்.

தமிழகத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு ஆட்சியை, சில மனிதர்கள் ஒன்று கூடி, சதித் திட்டங்கள் தீட்டி, மக்களின் விருப்பத்திற்கு எதிராகக் கலைத்து விட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறார்கள். சில குறுகிய அரசியல் லாபங்களுக்காக, சிலர் என் மீது களங்கம் கற்பிக்க, தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது, தமிழகத்து மக்களுக்கு நன்கு தெரியும்.

தனி நபர்களின், விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில், பிறப்பிக்கப்படுகின்ற ஓர் ஆணை, மக்கள் மாமன்றத்தின் முன்னே, வைக்கப்படும்போது, தீயின் முன் வைக்கப் பட்ட வைக்கோல் போல், எரிந்து சாம்பலாகி விடும்.

மக்கள் சக்தியைப் புரிந்தவர்களுக்கு, இந்தப்பேருண்மை புலனாகும் • இருப்பினும், இத்தகைய நேரத்தில், தங்கள் மனதில் உள்ள கருத்துக்களை, மறைக்காமல், துணிவுடன் வெளியிட்டு, தர்மம் என் பக்கம் தான், என்பதைத் தெளிவாக்கி, எனக்கு ஆதரவு தெரிவித்த, மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் திரு.என்.டி.ராமா ராவ், மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு.தேவ கவுடா, மாண்புமிகு பீகார் மாநில முதலமைச்சர் திரு லல்லுபிரசாத் யாதவ், பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் திரு வெங்கய்யா மற்றும் மாண்புமிகு நாடாளு மன்ற எதிர்க்கட்சித் தலைவர், திரு ஏ.பி. வாஜ்பாய், ஒரிசா மாநில முன்னாள் முதலமைச்சர் திரு பிஜு பட்நாயக், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர், திரு கி. வீரமணி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் பொதுச் செயலாளர், திரு அப்துஸ் சமது ஆகியோர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒதுங்கிப் போவதற்கும், பயந்து போவதற் கும், வேறுபாடுகள் உள்ளன. தீயவைகளை யும், தீயவர்களையும் கண்டு நாம் ஒதுங்கிப் போனால், நாம் பயந்து விட்டவர்களாக ஆக மாட்டோம் மாறாக, அறிவுடையவர்களாகத் தான் ஆவோம், இந்தத் தீயவர்களால், தீயவை தான் ஏற்படும் என்பதால் தான், ஒதுங்கிப் போகிறோமே தவிர, அவர்களுக்குப் பயந்து அல்ல.

ஒரு நேரத்தில், தீயவர்களை எதிர்க்க

## முதல் பரிசு

**அண்மையில், சென்னையில் முடிவுற்ற 21-வது சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் எல்லா மாவட்டங்களின் சார்பிலும் அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன; அவற்றில் மிகச் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் பரிசு பெற்றது கோவை மாவட்ட அரங்கு!**

வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் நல்லவர்களின் படைகள் அனைத்தும், ஒரு தர்ம யுத்தத்திற்கு, அணி திரண்டு நிற்கும், என்பது தான் வரலாறு.

தமிழகக் கலைத் துறையைச் சேர்ந்த பலர், எனக்குத் தங்களது ஆதரவைத் தெரிவித்ததோடு, நான் முதலமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டிய அவசியமும் இல்லை. என்று கருத்து தெரிவித்துள்ளனர். அந்த அன்பு நெஞ்சங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சகோதரர் திரு சரத்குமார் தயாரிப்பாளர்கள் திரு கே.ஆர்.ஜி. திரு டி. ராமானுஜம், திரு ஏவி.எம். சரவணன், நடிகர் சங்கத் தலைவர் திரு ராதாரவி, தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர், திரு மோகன் காந்திராமன் என்று எண்ணற்றவர்கள் எனக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

எத்தனையோ சங்கங்கள், சமூகநல அமைப்புகள், எனக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டார்கள். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

எத்தனையோ தனிப்பட்ட நபர்களின் ஆதரவும், பாராட்டுதல்களுமே, இந்த நாட்டின் மிக உயரிய ஜனநாயக மரபுகள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவிக்கின்றன.

மாநிலங்களில், எத்தகையதொரு ஜனநாயகம், தொடர வேண்டும் என்று, அண்ணல் காந்தி, பண்டிட் ஜவகர்லால் நேரு, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆகியோர் விரும்பினார்களோ, அந்த ஜனநாயகம் இன்று, குழி தோண்டிப் புதைக்கப்பட்டு வருகின்றது. **Today Democracy itself is at stake,** ஜனநாயகவாதிகள், என்கின்ற போர்வைக்குள் இருந்துகொண்டு, ஜனநாயகத்திற்கே வேட்டு வைக்க வந்துள்ள, ஒரு கும்பலை எதிர்த்து, நடைபெறும் தர்மயுத்தம், மக்கள் ஆதரவுடன், நிச்சயமாக வெற்றி பெறும்.

மக்கள் தேர்ந்தெடுத்த ஒரு அரசாங்கத்தை, ஒரு சில சதிகாரர்கள், ஒன்றுகூடிக் கலைத்து விட முடியாது என்பதையும் அப்படிச் செய்தால், எத்தனை அவதாரம் வேண்டுமானாலும் எடுத்து மக்களாட்சித் தத்துவத்தின் மகிமை, அவர்களுக்கு உணர்த்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், ஜனநாயக உணர்வு, மக்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும். மக்களிடையே ஜனநாயக உணர்வை வளர்க்க, கேபிள் டிவி. உரிமையாளர்கள், ஜனநாயகக் கருத்துக்களை, மக்களிடையே பரப்ப வேண்டும். ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதை ஒரு இயக்கமாக அகில இந்திய அளவில், கொண்டு வர வேண்டும் என்பதே, எனது அவா. இந்தத் தர்மயுத்தத்தில், கேபிள் டிவி ஆபரேட்டர்கள் அனைவரும் ஜனநாயகத்தின் பக்கம் தர்மயுத்தத்தின் பக்கம் என்றும் துணையாக இருப்பார்கள் என்று, உறுதியாக நம்புகிறேன்.

செயற்கைக் கோள் ஒளிபரப்பில், புதிய எல்லைகளைக் கண்டு, வரலாறு படைத்திடப் புறப்படும் உங்களுக்கு, எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள். கருத்துப் பரிமாற்றத்திற்கு, ஒரு புதிய பரிமாணத்தை அளித்திட, நீங்கள் மேற்கொள்ளும் இலட்சியப் பயணம் வெற்றி பெறட்டும்.

கேபிள் டி.வி. உரிமையாளர்களின் சார்பில் உரையாற்றிய அன்புச் சகோதரர் D.G.V.P. சேகர் அவர்கள் கேபிள் டிவி. உரிமையாளர்கள் வைத்துள்ள இணைப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் A,

"அடுத்தவனை அனுப்பினால் அத்துவம். மகனை அனுப்பினால் மத்துவம். தானே போவதுதான் உத்தமம்!"

**- வால்பாறைப் பகுதியில் வழங்கும் ஒரு பழமொழி.**

B, C, D, என்று அவர்களை வகைப்படுத்தி, அதன் அடிப்படையில் வரி விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை என்முன் வைத்தார்கள். உங்கள் கோரிக்கையில் உள்ள நியாயம் எனக்குப் புரிகிறது. எனவே, கொள்கை அடிப்படையில் (In Principle) . அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறேன் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் கோரிக்கை விரிவாகப் பரிசீலனை செய்யப்பட்டு, விரைவில் நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு T.R. லங்காராம் அவர்கள் இங்கே உரையாற்றும்போது, கேபிள் டி.விக்கு இரண்டாண்டு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தார்கள். ஏற்கெனவே சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்ததைப் போல் இப்போது சட்டமன்றக் கூட்டத் தொடர் அதுவும், வரவு செலவுக் கூட்டத் தொடர் நடைபெற்று வருவதால், இது குறித்து உடனடியாக எந்த முடிவையும் இங்கே அறிவிக்க இயலாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கை மட்டும் இன்றி மேலும் நீங்கள் என் முன் வைத்த கோரிக்கைகள் அனைத்தையும், நான் கனிவுடன் பரிசீலனை செய்து உங்கள் வாழ்க்கைக்கு ஏற்றம் அளிக்கும் வண்ணம் முடிவுகளை அறிவிப்பேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே தம்பி வெங்கடேஷ் அவர்கள் உரையாற்றுகின்றபோது, ஒரு தாய் பிள்ளைக்கு, சாக்லேட் கொடுத்தால் அந்தத் தாயிடம் இன்னும் நிறைய சாக்லேட்டுகள் உண்டு என்பதைத் தெரிந்து கொண்டு இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்று அந்தப் பிள்ளை கேட்கும் என்று குறிப்பிட்டார். அதைப் போலவே இங்கு உரையாற்றிய என்னுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒருவிதமான சாக்லேட்டைக் கேட்டார்கள். ஒருவர் மில்க் சாக்லேட் கேட்டார். ஒருவர் புரூட் நெட் (Fruit Nut) சாக்லேட் வேண்டும் என்றார். ஒருவர் டாபி

★ **குருட்டு நம்பிக்கையை அறவே விட்டுவிட்டுப் பகுத்தறிவைக் கொண்டு பார்ப்பதனால், ஒரு மதமும் நிலைக்காது !**

**— தந்தை பெரியார்**

(Toffy) வேண்டும் என்றார். ஒருவர் பாரிஸ் ஸ்வீட் (Parrys Sweet) வேண்டும் என்றார். இன்னொருவர் நியூட்ரின் (Nutrine Sweet) வேண்டும் என்றார். ஆனால், பேரவைத் தலைவர் அவர்கள் நினைவுபடுத்தியதைப் போல இப்பொழுது பேரவைப் பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே நீங்கள் கேட்கின்ற அத்தனைச் சாக்லேட்டுகளையும் வழங்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு. இன்னும் நீங்கள் கேட்காத அளவுக்கு 'பைவ் ஸ்டார் பார்' (Five Star Bar) வழங்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உள்ளது. ஆனால், சட்டம் இந்த நேரத்தில் என் கையைக் கட்டிப் போட்டிருக்கிறது. கையை அல்ல, வாயைக் கட்டிப் போட்டிருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும்.

உங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்ற உள்ளம், ஆசை எனக்கு இருந்த போதிலும், நான் சட்டப்படி பட்ஜெட் நடைபெறுகின்ற நேரத்தில் பேரவையில் உங்களுக்கெல்லாம் என்னென்ன சாக்லேட்டுகள் வழங்க உள்ளேன் என்பதை அங்கே உள்ளவர்களுக்குத் தெரிவித்துவிட்டு அதன் பின்னர்தான் வழங்க முடியும் என்ற ஒரு விதி இருப்பதால் நீங்கள் சற்றுப் பொறுத்திருக்க வேண்டும். விரைவிலேயே உங்களுக்கெல்லாம் நீங்கள் எதிர்பார்த்தபடி சாக்லேட்டுகள் வழங்கப் படும். Five Star Bar- வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக கேபிள் டிவி. உரிமையாளர்கள் சங்கம், ஆல் போல் தழைத்து, அறம் போல் வளர்ந்திட வேண்டும், என்று நெஞ்சார வாழ்த்துகிறேன். உங்கள் நன்றியினை, உளமார்ந்த அன்புடன் ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் அனைவரும், எல்லா நலன்களும், வளங்களும் பெற்று; சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும், என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

# "என் கனவு ஈடேறுகிறது!"

## 85 ஏக்கர் நிலத்தில் திரைப்படத் தொழிலாளர் குடியிருப்புக்கு, அடிக்கல் நாட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை




**திரைப்படத் தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கான அடிக்கல் நாட்டு விழா சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 20.4.95-இல் நடந்தது. அடிக்கல் நாட்டுவித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பேசியதாவது:**

என்னை வளர்த்து ஆளாக்கி விட்ட, பாசமிகு கலைக் குடும்பத்தின், பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த, உங்கள் அனைவரையும் இங்கே ஒருங்கே காண்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆயிரக்கணக்கான திரைப்படத் தொழிலாளர்களின் மனம் குளிரும் வண்ணம் 85 ஏக்கர் நிலப்பரப்பில், புதிய குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டி, கலை உலகத்தின், அன்பு நெஞ்சங்களின் மகிழ்ச்சியில் பங்கு கொள்வதில், நான் பேருவகை அடைகிறேன்.

என்றும் என் நெஞ்சத்தை விட்டு அகலாத, பாசமிகு கலைக்குடும்பம் நடத்துகின்ற இந்த விழாவில், ஒரு குடும்பப் பாச உணர்வு இழையோடுவதை மகிழ்ச்சியுடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கடுமையாக உழைத்து, திரைப்படங்களை உருவாக்கித் தரும், திரைப் படத் தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு, ஏதேனும் செய்யவேண்டுமே என்று, கலை உலகில் நான் பணியாற்றிய போதே, நினைத்துப் பார்ப்பது உண்டு. வாய்ப்புக் கிடைத்தால், இவர்கள் வாழ்க்கையில் ஏற்றம் பெற, சில திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று, உள்ளூர நினைப்பது உண்டு. நீறு பூத்த

நெருப்பாக இருந்த அந்த உணர்வு. நான் பொது வாழ்க்கையில் ஈடுபட ஆரம்பித்த பின்பு, ஒரு பெரிய இலட்சியமாக உரு வெடுத்தது.

### இரட்டிப்பு மகிழ்ச்சி

நான் கலையுலகச் சகோதர, சகோதரி களின் அன்புடனும், தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவுடனும், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, திரைப்பட உலகின் பல பிரச்சினைகளைத் தீர்த்துவைத்து, திரை உலகத்தின் வளர்ச்சிக்குப் பல பணிகளை மேற்கொள்ளக் காரணமாக இருந்தது, இந்த உணர்வு தான் என்பதைத் தெரிவிப்பதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த உணர்வுகளுக்குச் சிகரம் வைத்தது கலைத் துறையை எளிதாக எடைபோட்டு விட முடியாது. ஒவ்வொரு பிரச்சினையும், ஒவ்வொரு விதமாகத்தான் இருக்கும் என்பதே, அதன் அடிப்படை ரகசியம். என்னைப் பொறுத்தவரையில் கலை உல கத்தின் தனித்தன்மைகளை அனுபவபூர்வமாக நன்கு புரிந்து வைத்திருப்பதால்தான், கடந்த நான்கு ஆண்டுகளாகக் கலை உலகில் ஏற்பட்ட பல பிரச்சினைகளுக்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்போடு, என்னால் எளிதில் தீர்வுகளைக் காணமுடிந்தது என்று கருதுகிறேன்.

### இலட்சியக் கதை

அந்த வகையில்தான் திரைப்படத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஒரு ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தி அவர்களுக்கு




போல, இன்று திரைப்படத் தொழிலாளர் களின் குடியிருப்பிற்கு அடிக்கல் நாட்டியதில், என் மனம் பூரிப்பு அடைகின்றது.

இதுவரை எவரும் செய்யாத ஒரு சாதனை யாகத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 25 சகோதர, சகோதரிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப் போவ திலும் என் மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது.

கலை உலகம் இன்னும் பலரால் புரிந்து கொள்ள முடியாத ஒரு விசித்திர உலகம் ஆகும். மற்ற தொழில் துறைகளைப் போல, சமூகப் பாதுகாப்பை அளிக்க வேண்டும் என்ற எனது ஆரம்ப கால இலட்சியக்கனவு, இன்று நிறைவு பெற்று உள்ளது. திரைப்படத் தொழிலாளர்களின் நல்வாழ்க்கைக்கு நலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தும் போதெல்லாம், என் மனம், ஒருவிதமான நிறைவைக் காண்பதை நான் உணர்கிறேன். திரைப்படத் தொழிலாளர்களும், அவர்தம் வாழ்க்கையில், ஏற்றம் பெறவேண்டும் என்ற உள்ளுணர்வு என் மனதில் பரிபூரணமாகப் படர்ந்திருப்பதே அந்த மன நிறைவுக்குக் காரணம் என்றால் அது மிகையாகாது.



கடந்த நான்கு ஆண்டுக்காலத்தில், தமிழ்த்திரை உலகம் நசிந்து விடாமல் இருக்க, தமிழக அரசு பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். கேளிக்கை வரியில் சலுகை, திரை அரங்குகளுக்குக் கட்டணம் நிர்ண யிக்கும் சுதந்திரம், வீடியோ திருட்டை ஒழிக்கத் தனிக் காவல் படை, மாநில அரசு வழங்கும் திரைப்பட விருதுகளின் மதிப்பு உயர்வு, குறைந்த செலவில் எடுக்கப்படும் தரமான படங்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்வு, மானிய உதவித் தொகை பெறும் படங்களின் எண்ணிக்கை 50 லிருந்து 75 ஆக உயர்வு, திரைப்படத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் திரைப் படக் கல்லூரியில் இட ஒதுக்கீடு, திரைப் படத் தொழிலாளர்களுக்கு விபத்துக் காப்புறுதித் திட்டம் மற்றும் நலிந்த தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் என்று பல சாதனைகளை என்னால் சுட்டிக் காட்ட முடியும்.

**சமரசப் பேச்சு**

*1993*-ஆம் ஆண்டில், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர் களுக்கு இடையே தொடங்கிய மனக்கசப்பு ஒரு பெரிய தொழில் பிரச்சினையாக மாறி, தமிழ்த் திரைப்படத் தயாரிப்பே நின்று விடுமோ, என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை நீங்கள் அறிவீர்கள்; கலை உலகின் மீதும், திரைப்படத் தொழிலாளர்களின் மீதும் எனக்கிருந்த ஆர்வத்தின் காரணமாக அனைத் துத் தரப்பினரையும் கூட்டி, நான் நடத்திய பேச்சு வார்த்தை பல நெருடலான பிரச் சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளை ஏற் படுத்தியதை எனது கலையுலக நன்றிக் கடனாகக் கருதுகிறேன்.

பின்னர் தெலுங்குத் திரைப்படத் தயாரிப் பாளர்களுக்கும், தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்களுக்கும் இடையே அண்மை யில் ஏற்பட்ட மனக்கசப்பை அகற்றி, ஒற்றுமை உணர்வுடன் செயலாற்ற வழி வகுத்ததையும், மனநிறைவோடு எண்ணிப் பார்க்கின்றேன்.

தமிழக அரசு Video Piracy ஐத் தடுத்து நிறுத்த ஒரு சட்டத்தைக் கொண்டு வந்ததோடு, அந்தச் சட்டத்தைச் செயல்படுத்தத் தனிக் காவல் படையையும் அமைத்துள்ளது. கேபிள் டி.வி.யை முறைப்படுத்த ஒரு சட்டத்தையும் கொண்டு வந்து, எந்த ஒரு தொழிலும் நசிந்து விடாமல், அதே நேரத்தில் எல்லாத் தொழில் களும், ஒன்றோடொன்று சேர்ந்து வளர்ச்சி பெற வழி வகுத்துள்ளது. உங்கள் அன்புச் சகோதரியின் அரசு.

**விபத்துக் காப்புறுதி**

திரைப்படத் தொழிலாளர்களின் நல் வாழ்விற்காகச் சமீபத்தில் விபத்துக் காப் புறுத்தித் திட்டத்தையும் திரைப்படத் தொழி லாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தையும் நான் அறிவித்தேன்.

விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ், திரைப்படத் தயாரிப்பின்போது, விபத்திற்கு உள்ளாகும் தொழிலாளருக்கு 50,000 ரூபாய் வரை காப்புறுதித் தொகை வழங்கப்படும்.

திரைப்படத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், 60 வயதைக் கடந்த நலிவுற்ற திரைப்படத் தொழிலாளருக்கு, *300* ரூபாய் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும்.

ஆண்டு ஒன்றுக்கு 1000 முதல் 1500 திரைப் படத்தொழிலாளர்கள் பயன்பெறும் இந்தத் திட்டம், வசதியற்ற திரைப்படத் தொழிலாளர் களின் குடும்பங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

தென்னிந்தியத் திரைப்படத் தொழி லாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் எனது அருமைச் சகோதரர் மோகன் காந்தி ராமன் அவர்கள், திரைப்படத் தொழிலாளர்களின், நல்வாழ்விலும், கலையுலக வளர்ச்சியிலும்

எனக்குள்ள ஈடுபாட்டை நன்கு அறிந்தவர். எனவேதான் ஆரம்பத்தில் நிலம் மட்டும் வழங்கினால் போதும் என்று கேட்டவர், அந்த நிலத்தைத் தமிழக அரசு இலவசமாகவும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை என் முன் வைத்துள்ளார்.

'கிடைக்கின்ற இடத்திலேதான் கேட்டுப் பெறவேண்டும்' என்ற அடிப்படை உண்மை இத்தனை நாள் கலைத்துறையில் பணிபுரியும் அவருக்கு, நிச்சயமாகத் தெரியும்.

**விதிவிலக்குடன் அரசு நிலம்**

அரசு நிர்ணயிக்கும் குறைந்த விலையில், அரசு நிலங்கள் வழங்கப்பட்டு வந்தாலும், ஆயிரக்கணக்கான திரைப்படத் தொழிலாளர்களின் நலன் கருதி, தமிழக அரசு பள்ளிக்கரணையில் வழங்கியுள்ள 85 ஏக்கர் நிலத்திற்கு விதி விலக்கு அளித்து முழுமையாக கட்டிக் கொள்ள உங்களுக்கு வழங்கப்படும் இடத்திற்கு நீங்கள் எந்தக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு திரைப்படத்தின் வெற்றிக்கு மிகக் கடினமான உழைப்பை நல்குகின்ற, திரைப்படத் தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு, நாங்கள் மேற்கொண்டு வரும் நலப்பணிகளின் ஒரு தொடக்கம்தான் இந்தத் திரைப்படத் தொழிலாளர்கள் நகரம்; மேலும் தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொள்ளக் கடனைப் பெறுவதற்கும், வீடுகளைக் கட்டித் தருவதற்கும், கூட்டுறவுத் துறையின் மூலமாகவும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும், ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.






இலவசமாக வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இடத்தின் மதிப்பு ரூ.10 கோடிக்கு மேலாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலவசமாக உங்களுக்கு வழங்கப்படும் வீட்டு மனை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, திரைப்படத் தொழிலாளர்களுக்கு அளித்த அன்புக் காணிக்கையாக என்றென்றும் விளங்கும் என்பதை எண்ணிப் பார்க்கும் போது, என் மனம் பூரிப்பு அடைகின்றது. எனவே இந்தக் குடியிருப்பில் நீங்கள் வீடு

இந்த நேரத்தில் உங்களுக்கு ஒரு உண்மையைத் தெரிவிப்பது எனது கடமையென்று கருதுகிறேன். இந்த 85 ஏக்கர் நிலத்தைத் திரைப்படத் தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டும் என்று அரசு அதிகாரிகளுடன் நான் பேச்சு வார்த்தை நடத்திய போது, இதைப் பல அதிகாரிகள் விரும்பாமல் இது நடைபெறக் கூடாது என்பதற்காகப் பல காரணங்களைச் சொல்லி பல தடங்கல்களை ஏற்படுத்திக் கொண்டே இருந்தார்கள். ஆனால் எப்படியும் திரைப்படத் தொழிலாளர்களுக்கு இதை நான் செய்தே ஆகவேண்டும் என்ற உறுதியுடன் எல்லா எதிர் வாதங்களையும் தகர்த்தெறிந்து நான் இந்த

முடிவில் உறுதியாக நின்றேன்.

எதைச் செய்தாலும் குற்றம் குறை கூறுவதற்காகவே இந்த உலகில் சிலபேர் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

திரைப்பட நகரையே எடுத்துக் கொள்ளுங்கள், இந்தத் திரைப்பட நகருக்கு 86 ஏக்கர் நிலம் கொடுத்து, அதற்கு மேல் அதன் விரிவாக்கத்திற்காகச் சும்மா கிடந்த நிலத்தை, எத்தனையோ வருடம் யாரும் பயன்படுத்தாத நிலத்தை எடுத்துக்கொடுத்தால், அதற்கு உள்நோக்கம் கற்பித்துப் பல பேர் குற்றம் சாட்டிப் பேசினார்கள். விமர்சித்துப் பேசினார்கள்.

அதைப் போலவேதான் திரைப்படத் தொழிலாளர்களுக்கு இந்த நிலத்தைக் கொடுத்திருப்பது பற்றி நாளை சிலபேர் விமர்சனம் செய்து பேசக்கூடும். இதையும் சில பேர் 'கிரிடிசைஸ்' செய்து பேசக்கூடும். ஆனால் நான் கேட்கிறேன். இப்படியெல்லாம் திரைப்படத் தொழிலாளர்களின், வளர்ச்சிக்கு எதைச் செய்தாலும் குற்றம்குறை பேசுகிறார்களே, இந்தத் திரைப்பட விரிவாக்கத்திற்கு நிலத்தைக் கொடுத்ததைக் குறை கூறுகிறார்களே, திரைப்பட விரிவாக்கத்திற்கு நிலத்தைக் கொடுத்ததைக் குறை கூறுகிறார்களே, திரைப்படத் தொழிலாளர்களுக்கு நிலம் வழங்கவேண்டும் என்று எண்ணியபோது அதற்குத தடங்கல் ஏற்படுத்திப் பார்த்தார்களே, இவர்களெல்லாம் சினிமா எப்போதும் பார்ப்பதே இல்லையா? இவர்கள் யாரும் திரைப்படம் பார்த்ததே இல்லையா? எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒரு நிம்மதியை, ஒரு மகிழ்ச்சியைத் தருவது இந்தத் திரைப்படத் துறைதான்.

இப்படித் திரைப்படத் துறையைப் பற்றிக் குறை கூறிப் பேசுபவர்கள் சொல்லட்டும், நாங்கள் திரைப்படங்களைப் பார்ப்பதே இல்லையென்று. திரைப்படம் பார்க்காமல் இருப்பார்களா? இந்தத் திரைப்படம் எப்படி வந்தது, யாருடைய உழைப்பில் வந்தது? தயாரிப்பாளர்களால் வந்தது உண்மை தான். இயக்குநர்கள், இயக்கினார்கள் உண்மைதான். அதில் நடிக்கின்ற கலைஞர்கள், மற்ற கலைஞர்கள் அவர்களுடைய பங்கும், உழைப்பும் அதில் இருக்கின்றது உண்மை தான். அதை வெளியிடுகிற 'எக்ஸிபிட்டர்கள்'

Phone : 04255...62490

# B.V.S. INDUSTRIES

*Government approved licensced electrical and*

*Power Pump Contractor*

Church Building

Trichy Road, Palladam 641 664

Undertake repair works and erection works of all Electric Motors, Pumpsets, Air Compressors, Jets, Submersible Motor Pump sets, Open Well Motor, Hanging Crane Bed, Well Covers, Others Welding Works and Wiring works with good condition.

***Proprietor***

**M. ESWARAN B.SC,D.E.E.**




அவர்களுடைய பங்கும் இருக்கிறது உண்மை தான். அதை வெளியிட ஏற்பாடு செய்கின்ற விநியோகஸ்தர்களின் பங்கும் இருக்கிறது உண்மை தான். அதையும் மறுப்பதற்கும் இல்லை. இந்த எல்லாவற்றிற்கும் மேலாக - இந்தத் திரைப்படம் எப்படி உருவானது?

**திரைக்குப் பின்னால்...**

திரைக்குப்பின்னால் இருக்கின்றார்களே ஆயிரக்கணக்கான திரைப்படத் தொழிலாளர்கள் அவர்கள் இல்லாமல், அவர்களுடைய உழைப்பு இல்லாமல், திரைப்படம் உருவாக முடியுமா? ஆகவேதான் நான் எண்ணிப் பார்த்தேன், நான் நடிக்கின்ற காலத்திலேயே இந்த எண்ணங்களெல்லாம் என் மனதில் வருவது உண்டு. திரைப்படங்கள் எடுக்கின்றார்கள். அதில் பல பேர் பங்கு கொள்கிறார்கள். அதில் தயாரிப்பாளர்களுக்குப் பெருமளவில் இலாபம் உண்டு. இயக்குநர்களுக்கும் பெருமளவில் லாபம் உண்டு.

நடிகர், நடிகையர்களுக்குக் கேட்கவே வேண்டாம் பெருமளவில் இலாபம் உண்டு. விநியோகஸ்தர்களுக்கும் இலாபம் உண்டு. எக்ஸிபிட்டர்ஸ்களுக்கும் இலாபம் உண்டு. ஆனால் காலை முதல் இரவு வரை சில சமயம் 20 மணிநேரத்திற்கும் மேலாக உழைக்கின்றார்களே, வேர்வையை சிந்தி, இரத்தத்தைச் சிந்தி, திரைப்படத் தொழிலாளர்கள் - அவர்கள் இதனால் என்ன இலாபத்தைக் காணுகிறார்கள்? அவர்கள் வாழ்க்கைக்கு என்ன உத்தரவாதம்? அவர்களுக்கு என்ன சமூகப் பாதுகாப்பு? அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமே என்று அப்போதே எண்ணினேன்.

ஆனால் அப்போது எனக்கு வழிதான் தெரியவில்லை. எப்படிச் செய்வது என்று புரியவில்லை. பின்னர் இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தார். அதன் பின்னர் உங்கள் அனைவரின் அன்போடும் ஆதரவோடும் குறிப்பாக - தமிழகத்தின் ஏழை, எளிய மக்களின் ஆதரவோடு நீங்கள் எல்லோரும் எனக்கு வழங்கிய பொறுப்பு, தமிழக முதலமைச்சர் பதவி, இதன் மூலம் தமிழ்த் திரைப்பட உலகிற்கு, குறிப்பாகத் தமிழ்த் திரைப்படத் தொழிலாளர்களுக்கு என்னுடைய நன்றிக் கடனைச் செலுத்த எனக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தமைக்குக் காலமெல்லாம் உங்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புச் சகோதரர் மோகன் காந்திராமன் அவர்கள் தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்தின் பணிகளை நன் முறையில் மேற்கொள்ளப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிலம் வழங்கவேண்டும் என்று முன்பும் கேட்டார், இன்றும் அந்தக் கோரிக் கையை என் முன் வைத்துள்ளார். கோடம்

பாக்கம் பகுதியில் அரசுக்குச் சொந்தமான இரண்டரை கிரவுண்டு நிலம் சம்மேளனத் திற்கு வழங்கப்படும் என்பதையும், அதற்குரிய ஆணைகளை இன்று நான் பிறப்பித் துள்ளேன் என்பதையும் மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அகமும், முகமும் மலர்ந்து மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கும் திரைப்படத் தொழிலாளர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தில் நானும் பங்கு கொள்கிறேன். அவர்களின் வாழ்க்கை உயர்வுக்கு நான் மேற்கொள்ளும் பணிகள் எனது பொது வாழ்க்கைக்கு ஒரு புதிய அர்த்தத்தையும், பரிமாணத்தையும் அளித் துள்ளது என்றால், அது மிகையாகாது. இந்தக் குடியிருப்புகள், விரைவில் கட்டி முடிக்கப் பட்டு, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒன்று கூடி வாழும், ஒரு மாபெரும் நகரம் உருவாகும் என்பதை எண்ணிப் பார்க்கும் போது என் மனம் ஆனந்தம் அடைகின்றது.

**புரட்சித்தலைவர் பெயர்**

மோகன் காந்திராமன் அவர்கள் பேசும் போது இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது பெயரைக் கோடம் பாக்கம் மேம்பாலத்திற்கும், கோடம்பாக்கம் நெடுஞ்சாலைக்கும் சூட்டவேண்டும் என்று கோரினார்கள். அவரது கோரிக்கைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். இதற் கான ஆணைகள் விரைவில் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பழம் பெரும் ஒளிப்பதிவாளர் நிமாய் கோஷ், பெயரை ஒரு சாலைக்கும், பழம்பெரும் இசையமைப்பாளர் அமரர் எம்.பி. சீனி வாசன், பெயரை ஒரு சாலைக்கும் சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இந்தக் கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து விரைவில் நல்ல முடிவுகள் அறிவிக் கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரி வித்துக்கொள்கிறேன்.

பிரச்சினைகளைத் துணிவுடன் எதிர் கொண்டு, சமாளிக்கின்ற ஒரு மனப்பக்கு வத்தை, எனது கலை உலக அனுபவம், எனக்கு நிறையவே தந்துள்ளது. நல்லவை களைச் செய்ய முனையும்போது, இன்னல் களும், இடையூறுகளும் எண்ணற்றவை வரும் என்பது பொது வாழ்வின் ஆரம்ப கால அரிச்சுவடி. தமிழ்நாட்டில் கடந்த சில வாரங்களாக நிலவி வருகின்ற ஒரு வெறுக் கத்தக்க சூழ்நிலை அதைத்தான் தெளிவு படுத்தி வருகின்றது. என் மீது களங்கம் ஏற் படுத்த கெடுமதி படைத்த சிலர் மேற் கொண்டு வரும் முயற்சிகளை முறியடிக்க உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் உங்கள் அனைவரின் ஆதரவுடனும், அன்புடனும் மக்கள் சக்தியின் துணையுடனும், ஒரு தர்மயுத்தத்தைத் தொடங்கியுள்ளேன்.

**தர்ம யுத்தம்**

தர்மத்தை நிலைநாட்ட, நான் தொடுத்துள்ள தர்ம யுத்தத்திற்குக் கலையுல கின் அன்புச் சகோதரர்கள், சகோதரிகள் பலர் மனம் திறந்து தங்களது நல்லாதரவைத் தெரிவித்துள்ளதைச் சுட்டிக் காட்டி அவர் களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

சம்மேளனத்தின் சார்பில் உரிமைக் குரல் கொடுத்த சகோதரர் மோகன் காந்தி ராமன் அவர்களுக்கும், இந்தச் சம்மேளனத்தின் உறுப்பினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

கலை உலகம், எனக்கு அளித்து வருகின்ற ஆதரவு, நான் தொடர்ந்து மக்கள் பணியைப் புதிய முனைப்புடன் மேற்கொள்ளத் தூண்டும் சக்தியாக என்றென்றும் விளங்கும் என்பதில் ஐயமில்லை, தமிழக மக்களின் நல்வாழ்க்கையும், தமிழகத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியுமே எனது இலட்சியம்.

அந்த இலட்சியத்தை அடையவிடாமல், தடுக்கும் தீய சக்திகளை உங்கள் ஆதரவுடன் துணிவுடன் எதிர்கொண்டு வென்று காட்டு வேன் என்பது மட்டும் உறுதி.

கலையுலகக் குடும்பத்தைச் சேர்ந்த உங் களில் ஒருத்தி என்று நீங்கள் அனைவரும் என்

**★ தமிழ் மொழி மீது பற்றுக்கொண்டிருப்பது பிறமொழி துவேஷம் ஆகாது. தன் குழந்தையை எடுத்து ஒரு தகப்பன் முத்தம் கொடுத்தால், அதனாலேயே அவன் மற்ற குழந்தைகள் மீது துவேஷம் காட்டுவதாகச் சொல்ல முடியுமா?**

**- அறிஞர் அண்ணா**

மீது வைத்துள்ள அன்பிற்கும், பாசத்திற்கும் நான் என்றென்றும் கட்டுப்பட்டவள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் நாம் அனைவரும் கண்டு களித்த அற்புதமான நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்து வழங்கிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

அன்புச் சகோதரர் ராதாரவி அவர்கள், நடிகர் சங்கத்தின் கடனைத் தீர்ப்பதற்காக ஒரு பிரம்மாண்டமான கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், அதற்கு நான் தலைமை தாங்கி அதற்காக ஒரு தேதியை ஒதுக்கித்தர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இன்று அவர் பேசும்போது நான் நடிகர் சங்கத்தின் ஆயுள் கால உறுப்பினர் என்றார். அவர் என்னை எப்போது பார்த்தாலும் அதைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார். ஏதோ நான் மறந்துவிட்டதைப் போல அவர் எனக்கு நினைவுபடுத்திக்கொண்டு இருக்கிறார்.

நான் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் ஆயுள் கால உறுப்பினர் என்பதை ஒரு போதும் மறக்க மாட்டேன். மறந்ததில்லை. இந்தச் சங்கம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் எப்படியும் நான் இந்தக் கலைத்துறையில் ஒரு அங்கத்தினர் என்பதை நான் என் ஆயுள் காலம் முழுவதும் நினைவில் வைத்திருப்பேன். இந்தச் சங்கம், மேன்மேலும் வளர வேண்டும். நடிகர் சங்கத்திற்கு ஏற்பட்ட கடன்களைத் துடைக்க வேண்டும் என்ற ஆர்வம், ஆசை எனக்கும் உள்ளது.

ஆகவே ஆகஸ்ட் மாதத்திற்குள்ளாகத் தேதி வேண்டும் என்று கேட்டார். அதற்கு முன்பாகவே ஒரு தேதியை உங்களுக்கு நான் தெரிவிப்பேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். எந்த ஒரு நல்ல காரியம் செய்யவேண்டும் என்றாலும் தனிப்பட்ட ஒருவரால் அது முடியாது. அதில் பலரது பங்கும் இருந்தால் தான் அந்தப் பணி சிறக்கும், மென்மேலும் வளர்ச்சி அடையும்.

இன்று அடிக்கல் நாட்டப்பட்ட திரைப் படத் தொழிலாளர்களின் குடியிருப்பில் ஒரு இலவச மருத்துவமனையைத் தொடங்கப் போவதாக அறிவித்த அன்புத்தம்பி டாக்டர் ராஜசேகர் அவர்களுக்கும், அங்கே இலவசமாக ஒரு பள்ளிக் கூடம் தொடங்கப்படும் என்று அறிவித்த அன்புச் சகோதரர் ரஜினிகாந்த் அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படித்தான் எல்லோரும் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக ஒன்றுபட்டு அவரவருடைய பங்கைச் செலுத்தவேண்டும். இங்கே இந்த நல்ல விழாவில் பங்கு கொள்வதற்காக வருகை புரிந்திருக்கும் நீங்கள், வாழ்க்கையில் எல்லா வளமும், நலமும் பெற்று, ஏற்றமிக்கதோர் வாழ்க்கையை வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, விடை பெறுகின்றேன், நன்றி வணக்கம்.

- கோயம்புத்தூர் என்பது கோசர் பெயரால் ஏற்பட்ட ஊர். கோசர் என்பது கோயர் என்றாகி கோயம்புத்தூர் என்று வழங்குகிறது. கோயன் - புத்தூர் - கோயன்புத்தூர். பிறகு இப்பெயர் கோயம்புத்தூர் என்றாயிற்று.

- இம்மாவட்டத்தில் உள்ள காடுகளின் பரப்பளவு 1,54,974 எக்டேர். இந்த மாவட்டத்தில் உள்ள ஆனைமலை விலங்குகள் சரணாலயம் டாப் ஸ்லிப் 1,400 மீட்டர் உயரத்தில் சுமார் 948 சதுர கிலோமீட்டர் பரப்பளவில், கோவைக்கு 90 கி.மீ. தொலைவில், பொள்ளாச்சி வட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வருகை தருகின்றனர்.

- சிவில் விமானப் போக்குவரத்துத் தளம், கோயம்புத்தூர் அவிநாசி சாலையில், கோவை நகரிலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது.

நன்றி: 'கோயம்புத்தூர் மாவட்டம்' மணிமேகலை பிரசுரம்.



# ஒளிகூட்ட வழிகாட்டும்

# காடம்பாறை மின்திட்டம்

நெடிதுயர்ந்த மலைகளும், ஆங்காங்கே சலசலத்தோடும் அருவிகளும், விரிந்து பரந்து விளங்கும் பசுமைப்பரப்புகளும் நிறைந்து விளங்குகிறது கோவை மாவட்டம். மலைப்பகுதியிலுள்ள நீர்வளம் வழிந்தோடி வீணாவதைக் கட்டுப்படுத்தி, அதை வளர்ச்சிப் பணிகளுக்குத் திருப்பிவிட்டால் வளமும் பெருகும் அதனால் நலமும் பெருகும் என்ற நன்நோக்கில் அமைக்கப்பட்டதே காடம்பாறை நீரேற்று நீர் மின் திட்டம்.

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மேல் ஆளியாறு அணையின் மேற்பகுதியில் ஓடிவரும் ஆளியாறு நிரைக் கொண்டு மின் உற்பத்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1878 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று இத்திட்டம் தொடங்கப்பட்டது.

காடம்பாறை நீரேற்று நீர் மின்திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி உட்கோட்டத்திலுள்ள ஆனைமலைப் பகுதியில் அமைந்துள்ளது. கோயம்புத்தூரிலிருந்து 95 கி.மி. தொலைவிலும், பொள்ளாச்சியிலிருந்து செல்லவேண்டுமெனில் வால்பாறைக்குச் செல்லும் சாலையில் 55 கி.மீ. தொலைவிலும் காடம்பாறை அணைத்திட்டம் அமைந்துள்ளது.

## நீராதாரம்

இத்திட்டத்தில், நீர்ப்பிடிப்புப் பகுதி 83 ச.கி.மீ. வரை பரந்துள்ளது. இது ஆளியாற்றின் மேற்பகுதியிலும் அதன் துணை ஆறுகளான காடம்பாறை ஆறு, தேவியாறு ஆகிய ஆறுகள் பாயும்பரப்பையும் கொண்டுள்ளது. இந்த ஆறுகளின் பிறப்பிடம் 2495 மீட்டரிலிருந்து 2282 மீட்டர் வரையிலான உயரத்தில் அமைந்துள்ளது.

இப்பகுதி தென் மேற்கு பருவ மழைமண்டலத்தில் அடங்குவதால் ஆண்டுக்கு சராசரி 381 செ.மீ. முதல் 508 செ.மீ. வரை மழை பெறுகின்றது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு 105 மில்லியன் கனமீட்டர் நீரைக் கட்டுப்படுத்தி பயன்படுத்த முடிகிறது.

## திட்டம் செயல்படும் விதம்

ஆளியாறு நீரைக் கொண்டு வழக்கம் போல் மின் உற்பத்தி செய்வதோடு, நாள்தோறும் ஏற்படும் உச்சகட்ட மின் தேவையை ஓரளவு சரி செய்ய இத்திட்டம் விசையேற்ற நீர் மின் திட்டமாக அமைக்க திட்டமிடப்பட்டது.

இவ்விசையேற்ற நீர்மின் நிலவறை (Underground Power hou se Caveru)வின் நிலையத்தையுடையதாகும்.

இத்திட்டத்தில், ஒவ்வொன்றும் 100 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட 4 ஜெனரேட்டர்கள் உள்ளன. இந்த ஜெனரேட்டர்கள் பின்னோக்கிச் சுழலுகையில் நீர் விசையேற்றங்களாகச் (மோட்டர் பம்பு) செயல்படுகின்றன. இப்போது தமிழகத்தில்


இயங்கும் அனல்மின் நிலையங்களிலிருந்து கிடைக்கும் மின்சக்தி இரவு நேரத்தில் முழுவதும் பயன்படாமல் உபரியாக உள்ளது. இந்த உபரி மின்சாரத்தைப் பயன்படுத்தி மேல் ஆளியார் தேக்கத்திலிருந்து காடம்பாறை மின் தேக்க அணைக்கு நீர் விசையேற்றங்களால் நீரை மேலேற்றி, மின்தேவையின் உச்ச கட்ட நேரங்களில் இந்த நீரைக்கொண்டு ஜெனரேட்டர்களை இயக்கி மின்சக்தியை உற்பத்தி செய்து உதவுகிறது. இதுவே காடம்பாறை நீரேற்று நீர் மின் திட்டத்தின் சிறப்பாகும்.

ஒரு நீர்த் தேக்க அணையும், திருப்புச் சிற்றணைகளும் அதனை இணைக்கும் 7,80 மீ. நீளமுள்ள வெட்டோடையும், 18 சுரங்களும், இரண்டு பொங்கு கிணறுகளும் இத்திட்டத்தில் உள்ளன.

காடம்பாறை அணை 808 மீ. நீளமும், 67.50 மீ. உயரமும், 457 மீ. அகலமும் கொண்டது. இவ்வணையை ஒட்டி அமைந்துள்ள நிலத்தடி மின் நிலையம் நிலமட்டத்திற்குக் கீழே 204 மீ. ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மின் நிலையம் 128.5 மீ. நீளமும், 20.5 மீ அகலமும், 38.0 மீ. உயரமும் கொண்டது. இதன் தரைமட்டம் 722.128 மீ. பரவியுள்ளது. இது வினாடிக்கு 150 கனமீட்டர் நீரை வெளியேற்றும் திறன் கொண்டதாகும்.

இத்திட்டத்தின் மூலம் 400 மெகாவாட் மின்சக்தி கிடைக்கிறது. இது உடுமலைப்பேட்டையில் தமிழ்நாட்டு, மின் இணைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

காடம்பாறை நீரேற்றுத் திட்டத்தின் இன்னொரு



சிறப்பம்சம் 1130. மீ. நீளத்திற்கு மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட சுரங்கம் ஆகும். இந்த சுரங்கத்தின் உள்ளே நூற்றுக்கணக்கான குழல் விளக்குகள் பொருத்தி வெளிச்சத்தை ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. 1979ஆம் ஆண்டு நிலவரப்படி காடம்பாறை நீரேற்றுத் திட்டத்தின் மொத்த செலவீடு ரூ 180.50 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு நூற்றாண்டைக் கடந்து, தொய்வின்றித் தொடர்ந்து பணிபுரியும் இந்தக் காடம்பாறை அணைத்திட்டம், நாட்டில் இருளைக் களைவதோடு, இயந்திரங்களையும் இயக்கி, நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டி ஒளிகூட்டுவதாக விளங்குகிறது.



★ **தீ நாற்றம் நறுநாற்றத்தைவிட விரைவாகப் பரவுகிறது. கெட்ட வம்புப் பேச்சும் அப்படித்தான் உண்மையைவிட வேகமாகப் பரவுகிறது.**

**அறிஞர் அண்ணா**



# சிறுவாணி குடிநீர் மேல்நிலைத் தொட்டி


**உலகிலேயே சுவையான குடிநீர் என்று கணக்குப் பார்க்கிறபோது மூன்றாவது இடம் வகிக்கிறதாம், சிறுவாணி குடிநீர் கோவை மாவட்டத்திற்குப் பெருமை தரும் இந்த நீர் நகரெங்கும் முறைவைத்து வழங்கப்பட்டு வருகிறது. இந்நீருக்காக அமைக்கப்படவிருக்கிறது புதியதோர் மேல்நிலைத் தொட்டி.**

**கோ**வை மாவட்டம் குனியமுத்தூர் பேரூராட்சிக்குட்பட்டது சுகுணாபுரம். இந்தப் பகுதியின் தற்போதைய மக்கட்தொகை 6,100 ஆகும். இப்பகுதி மேடான இடத்தில் அமைந்துள்ளதாலும், குனியமுத்தூரிலிருந்து வெகுதூரத்திலிருப்பதாலும், இப்பகுதிக்குச் சிறுவாணி நீர் சீராக வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு பேரூர் சட்டமன்ற உறுப்பினர் இப்பகுதிக்குச் சிறுவாணி நீர் வழங்குவதற்காகத் தனியாக இரண்டு இலட்சம் லிட்டர்கள் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியைக் கோவைப் புதூர் பிரிவில் கட்டித் தருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

பேரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் ஏற்றுக் கொண்டு தற்கிணங்க, சுகுணாபுரம் பகுதி மக்கள் பயன் பெறும் வகையில் ரூ.13.17 இலட்சம் செலவில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்ட உத்தேசிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, குளத்துப்பாளையம் அருகே பதிக்கப்பட்டு உள்ள 80 எம்.எம். 'ஏசி' குழாயிலிருந்து சிறுவாணி நீர் பிரித்தெடுக்கப்பட்டு, தரைமட்டத் தொட்டியில் சேகரிக்கப்பட்டும், பிறகு, நீர் உந்து மூலம் 90 மி.மீ. பி.வி.சி. குழாய்கள் 1300 மீட்டர் நீளத்திற்குப் பதிக்கப்

★கோவை மாவட்ட வளத்திற்கு பவானி, நொய்யல், அமராவதி, ஆளியாறு போன்றவை மட்டுமல்ல, மாவட்டத்தின் கிழக்கெல்லை போல் பாயும் காவிரி நதியும், முக்கியக் காரணமாகும். ஏராளமான அணைக்கட்டுகள் உள்ள மாவட்டம் கோயம்புத்தூர் மாவட்டம். இது தவிர ஏரிகள், குளங்கள், கிணறுகள் அதிகமிருப்பதாலும் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் எப்போதும் பசுமையோடு காணப்படுகின்றன.





பட்டு, கோவைப் புதூர் பிரிவில், பத்ரகாளியம்மன் கோவில் அருகில் கட்டப்பட உள்ள 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுக்கு மேல்நிலைத்தொட்டிக்குக் கொண்டு செல்லப் படும்.

பிறகு, ஏற்கெனவே பாலக்காடு நெடுஞ்சாலையில் பதிக்கப்பட்டு உள்ள குழாயில் இணைக்கப்பட்டு, சுகுணாபுரம் பகுதிக்குச் சிறுவாணி நீர் வழங்கப்படும்.

இத்திட்டம் முடிக்கப்பட்ட பிறகு சுகுணாபுரம் பகுதி மக்களுக்குச் சீராகச் சிறுவாணி நீர் விநியோகிக்கப்படும்.

★கோவை நகரைக் குடிநீர்த் தட்டுப்பாடின்றிக் காப்பது மட்டுமல்ல, வேறெந்த மாவட்டத்திலும் கிடைக்காத அளவுக்குச் சுவையான நீர் வழங்கும் சிறப்பும் உடையது சிறுவாணி நீர்த்திட்டம் "நெல்லித்தோப்பு வழியே ஓடிவருவதாலும், நீர்த் தேக்கத்தில் ஏராளமான நெல்லிக்காய்கள் விழுந்து மிதப்பதாலுமே சிறுவாணி சிறுவாணி நீருக்கு இந்தத் தனிச் சுவை" என்கிறார்கள் சிலர். "மலை மேல் அடர்ந்துள்ள மூலிகைகள் இடையே வருகிற தண்ணீர் இது. அதனால்தான் இத்தகையச் சுவை" என்கிறார்கள் மற்றும் சிலர். எது உண்மையோ!

இத்திட்டத்திற்குப் பேரூராட்சி நிதியிலிருந்து ரூ7.17 இலட்சமும் பாராளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூ.6 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.13.17 இலட்சம் செலவழிக்கப் பட உள்ளது.


சலியாத உழைப்பின் சின்னம் இலாபத்தை அளிப்பது திண்ணம்

# ஸ்வராஜ் டிராக்டர்கள்

☆ வறண்ட மற்றும் நீர்ப்பாசனமுள்ள நிலங்களின் வேளாண் நிலமைகளுக்கு மிகவும் உகந்தது.

☆ செங்குத்தான சரிவுகளிலும் எளிதாக இரு ட்ராலிகளை எடுத்துச் செல்லும்


☆ சிறந்த எரிபொருள் சிக்கனம் குறைந்த பராமரிப்புச் செலவு.

☆ பணம் ஈட்டும் வாடகைக்கு உபயோகிக்க உகந்தது. சிறந்த மறு விற்பனை மதிப்பை வழங்குகிறது.

கோவை மாவட்ட அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள்

**செந்தில் டிராக்டர்ஸ்**
39, D6, பாலசுந்தரம் செட்டியார் ரோடு
விற்பனை வரி மற்றும் R.T.O. அலுவலகச் சாலை
கோயம்புத்தூர் - 641 018
போன் 213424 P.P.
Res 866379 & 866390

**வட்டார அலுவலகம்**
19/2 மரப்பேட்டை
உடுமலை ரோடு
பொள்ளாச்சி
போன் 4626.



# காற்றாலைகளால் மின் உற்பத்தி

'எங்கெங்குக் காணினும் சக்தியடா ஏழுகடல் அவள் வண்ணமடா என்றார் பாவேந்தர். அளப்பரிய நீர், நிலம், வான், நெருப்பு, காற்று என்ற ஐந்து சக்திகளையும் தன்னாற்றலால் கட்டுப்படுத்தி, தன்னுடைய நலனுக்காகப் பயன்படுத்தும் பேராற்றல் கொண்டது மனித சக்தி. அந்த வகையில், வீணாகும் காற்றுச் சக்தியை, ஆற்றுப்படுத்தி, மின்சக்தியாக மாற்றும் பல வழிமுறைகளில் காற்றாலையும் ஒன்று. நீண்ட கடற்கரையும், நெடிய குன்றுகளும் கொண்ட நமது நாட்டில் காற்றாலை மூலம் 20 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யமுடியும். இதில் தமிழ்நாட்டில் மட்டும் 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

தமிழ்நாட்டில் முட்பந்தல், கயத்தாறு, ஆரண்குளம், புளியங்குளம் என்ற இடங்களிலும், கோவை மாவட்டத்தில் கேத்தனூர், பூலாவாடி, இடையர்பாளையம் போன்ற இடங்களிலும் காற்றாலைகள் அமைக்கப்படுகின்றன. தற்போது பாலக்காடு கணவாய் பகுதிகளில் வீசும் காற்றின் வேகத்தை வைத்து சுமார் 20 மெகாவாட் அளவுள்ள மின் காற்றாடி மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

காற்றாலைகள் ஒலமாகத் தயாரிக்கப்படும் மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்சார வாரிய கிரிட்டில் இணைப்புக் கொடுப்பதற்குத் தகுந்த மின்நிலையங்கள் நிறுவப்படவேண்டும். இதற்காக ஏற்கனவே கேத்தனூரில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது, பல்லடம் அருகே இடையர்பாளையத்தில் 43 காற்றாலைகள் அமைக்கப்பட்டு இயங்குகின்றன. இவைகளில் உற்பத்தியாகும் மின்சாரத்தைத் தமிழ்நாடு கிரிட்டில் இணைக்கும் துணை மின் நிலையம் ஒன்று ரூ.5.76 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இது இவ்வாண்டு இறுதிக்குள் செயல்படத் தொடங்கும்.

★★★★★★★★★★★★★★★★

# மலைகள்

★கோவை மாவட்டத்தின் தெற்கில் உள்ள ஆனைமலையும், அண்ணா மாவட்டத்தில் உள்ள பழனி மலையும் கைகோத்து நிமிர்ந்து நின்று மாவட்டத்திற்குப் பாதுகாப்பும், பல்வேறு வளங்களும் அளிக்கின்றன.

இவ்வ தவிர வெள்ளிங்கிரி மலையும், சோழக்கரை பொலம் பட்டி மலைகளும், அசனூர்-பர்கூர், பாலமலைக் குன்றுகளும், லேம்ப்டன் சிகரமும் இம்மாவட்டத்தில் உண்டு.

ஆனைமலைக்கு மேல்பரப்பில் 6000 அடி உயரத்தில் மைக்கேல் பள்ளத்தாக்கு என்று ஒன்று உள்ளது. அதற்கு இப்பெயர் வரக் காரணம், மேயர் மைக்கேல் என்பவரே அதை முதலில் கண்டுபிடித்தார்.

**கங்கா 70mm A/c. யமுனா A/c. காவேரி A/c.**

# KARPAGAM CINE COMPLEX

100 Feet Road,

COIMBATORE - 641 012.

Complex : 48629 Res : 47676, 45747



குழாய் இணைப்புகள் வழங்கத் திட்டம் தீட்டப்பட்டது. இதுவரை 9,000 இணைப்புகள் கொடுத்தாகிவிட்டது. இதற்காக 91 கி.மீ. நீளமுள்ள குழாய்கள் நிலத்தில் அமைக்கப்பட வேண்டும். இதில் 70 கி.மீ. நீளம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 124 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு விட்டது.

தமிழ்நாட்டில் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வளர்ந்துவரும் நகரங்களில் 8 நகரங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே நகர வளர்ச்சிப் பணிகளை அமைத்திட தமிழ்நாடு அரசு ரூ.25 கோடி செலவிடவுள்ளது. அந்த நகர்களில் திருப்பூரும் ஒன்றாகும்.

# வளர்ச்சியுறும் திருப்பூர்

பனியன் என்றவுடன் சட்டென நினைவுக்கு வருவது திருப்பூர் நகரம். கோவை மாவட்டத்தின் சுறுசுறுப்பான தொழில்நகரம். இந்தியாவிலேயே பனியன் உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் திருப்பூர் நகரிலும் அதன் சுற்றுப புறங்களிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. பெருகி வரும், தொழிலகங்கள், மக்கள் தொகை இவைகளைக் கருத்தில் கொண்டு திருப்பூர் பேரூராட்சி பல நகர் வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

**புதிய பேருந்து நிலையம்**

திருப்பூர் நகருக்கு மேலும் புகழ்ச் சேர்க்க நவீன, தினசரிச் சந்தை மற்றும் வணிக வளாகம் ஆகியவை முதல் அடுக்கிலும், 25 பேருந்துகள் நிறுத்துவதற்கான வசதி கொண்ட புதிய பேருந்து நிலையம் அடித்தளத்திலும், ரூ.67.70 இலட்சம் செலவீட்டில் அமைக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளன. இதன் மற்றொரு பகுதி ரூ.160.13 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது.

இந்த நவீன இரண்டடுக்குகள் கொண்ட பேருந்து நிலையம் செயல்படும் போது, பொது மக்களுக்கும், வணிகர்களுக்கும் கூடுதலான போக்குவரத்து வசதிகளும், வணிக வசதியும் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திருப்பூர் நகரக் குடிநீர்த் திட்டம்**


திருப்பூர் நகரில் குடிநீர் வசதி வழங்குத் திட்டத்தின்கீழ் 21 ஆயிரம் வீடுகளுககுக்

இத்திட்டத்தின் கீழ் திருப்பூர் நகரில் கால்வாசி நகரப் பகுதிகளில், தெருவிளக்குகள் மற்றும் சாலைகள் அமைக்கப்பட விரிவான திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

சென்றாண்டில் (1994-95)திருப்பூர் நகரில் ரூ.1.86 கோடி செலவீட்டில் சாலைகள் மேம்படுத்தவும் மற்றும் சாலைப்புற கழிவுநீர் வடிகால்கள் அமைக்கவும் செலவிடப்பட்டது.

**புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்**

திருப்பூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் அனைத்து வசதிகளையும் அமைத்து மேம்படுத்த, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் என்ற அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இக்கழகத்தில் தமிழ்நாடு நகர் கட்டமைப்பு வளர்ச்சிக் (Tamil Nadu Corporation for Infrastructure Development) கழகமும், நகர் கட்டமைப்பு லீசிங் மற்றும் நிதிவழங்கு பணிகள் கழகமும் (Infrastructure Leasing and Finance Service Corporation Ltd.) திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் பங்குதாரர்களாக உள்ளார்கள்.



இக்கழகத்தின் முதல் திட்டமாகத் திருப்பூர் குடிநீர் வழங்குத் திட்டம் ரூ.150 கோடி மதிப்பீட்டில் தீட்டப்பட்டுச் செயல்படுத்த சர்வதேச நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும்போது இந்திய நாட்டுக்கே ஒரு முன்னோடித் திட்டமாக இருக்கும் என்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார்.

**திருப்பூர் நகரிய அபிவிருத்தித் திட்டம்**

ஏற்கெனவே நூற்றுக்கணக்கான பின்னலாடை தொழிற்கூடங்கள் இருப்பதோடு, மேலும் புதிய தொழிற்சாலைகள் நிறுவவும் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிலுவையில் இருக்கின்றன. இது தவிர, ஒரு சில பகுதிகளில் குறைந்த மின்னழுத்தமும் காணப்படுகிறது. எனவே, பி.எப்.சி. (Power Finance Corporation) நிதியுதவியுடன் ரூ. 4.24 கோடி செலவில் திருப்பூர் துணை மின் நிலையத்தில் புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்தி மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் உயர்மின் அழுத்த நிலத்தடி மின்பாதை (Underground Cable) 26 கி.மீ. அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மேம்பாட்டுத் திட்டங்களினால் திருப்பூர் நகரில் நிலவிடும் குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்யவும், புதிய தொழில் கூடங்களுக்கு மின் இணைப்புகள் வழங்கிடவும் வாய்ப்புகள் உள்ளன. இப்படி, பல வளர்ச்சிப் பணிகள் திருப்பூரில் நடைபெற்று வருகின்றன.

இந்தியாவிலேயே பின்னலாடை உற்பத்தியில் சிறப்புப் பெற்ற திருப்பூர் நகரம் மேலும் பல புதிய வசதிகளைப் பெறுவது மூலம் இந்திய பொருளாதாரத்தின் அயல்நாட்டுச் செலாவணியை ஈட்டுதரும் ஒரு கற்பகத்தருவாக விளங்கும் என நம்பலாம்.

With Best Compliments From

*SAROJ CORPORATION*

*Distributors & Stockists of*

*Bus Body Components and Accessories*

Address:
85/6, Petechannappa Industrial Estate,
Sajjepalya, Magadi Road, Bangalore 560 079.
Phone : 3307806

## கோவை மாவட்டம்



# வேளாண்மை வளர்ச்சி

'சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழன்றும் உழவே தலை'

- என்றார் உலகப் பொதுமறை தந்த உயர் தமிழ் வள்ளுவர். கோயம்புத்தூர் மாவட்டம் இந்த வகையில் பெரிதும் ஏற்றம் பெற்றிருப்பதை நாம் காண முடிந்தது. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் ஒன்றாக விளங்குகிறது இம்மாவட்டம்.

நீர்வளமும் நிலவளமும் மிக்கதாக விளங்கும் கோவை மாவட்டத்தில், வேளாண்மை வளர்ச்சியில் பல்வேறு திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தியதன்மூலம் வியத்தகு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

**அரிசி உற்பத்தி மெ.டன்னில்**

1991-92-இல் 85,762 டன்,
1992 -93-இல் 1,07,225 டன்,
1993-94-இல் 1,20,103 டன்

இவ்வாறாக, உற்பத்தி ஒவ்வோர் ஆண்டும் உயர்ந்து கொண்டே வருகிறது. இதற்கு முக்கியமான காரணங்கள், அதிகப் பரப்பைச் சாகுபடியின் கீழ் கொண்டு வருதல் உயர் விளைச்சல் தரும் நல்ல தரமான விதைகளை வேளாண் பெருமக்களுக்கு வழங்குதல் நவீன தொழில் நுட்பங்களைச்சாகுபடியில் பின்பற்றுதல் ஆகிய அம்சங்களைப் பின்பற்றிச் செயலாக்கம் செய்யப்பட்டது.

சிறு குறு விவசாயிகளைச் சாகுபடியில் ஊக்குவிக்கும் பொருட்டு விதை விநியோகம், உயிர் உரங்கள் வழங்குதல், களைக்கொல்லி விநியோகம், பயிர்ப் பாதுகாப்புக் கருவி விநியோகம், வேளாண் கருவிகள் விநியோகம், விசை உழவு இயந்திரங்கள் விநியோகம் ஆகிய அம்சங்களுக்கு 55.55 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதற்குத் துறை அலுவலர்களது விடாமுயற்சியும், தொடர்ந்து விவசாயிகளைச் சந்தித்து தொழில்நுட்பத்தைத் தக்க தருணத்தில் எடுத்துரைத்ததுமேயாகும்.



### சிறுதானியங்கள்

சிறுதானியங்கள் கீழ்க்கண்ட வாறு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது:

*1991-92-இல் 1,30,000,*
*1992-93-இல் 1,43,000,*
*1993-94-இல் 2,89,200*

இப்படிச் சிறுதானிய உற்பத்தியும் ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே வந்துள்ளது. இதற்கு முக்கியமான காரணங்கள் உற்பத்தித்திறனை அதிகரிக்கப் பல்வேறு தொழில்நுட்பங்களை விவசாயிகளின் வயல்களில் செயல்படுத்தியது உயர் விளைச்சல் தரும் ரகங்களைத் தெரிவு செய்தது இதற்கு மேலாகச் சிறு குறு விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு மானிய விலையில் விதைகள், களைக் கொல்லி மருந்து, பயிர்ப் பாதுகாப்பு மருந்து, செயல் விளக்கத் திடல், கருவிகள், பயிற்சி ஆகிய அம்சங்களுக்கு மானியங்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது ஆகியவையாகும்.

மேலும், சிறுதானியப் பயிர்கள் பெரும்பாலும் மானாவாரிப் பயிர்களேயாகும். மானாவாரி நிலங்களை மேம்படுத்தும் பொருட்டு, மாவட்டத்தில் இரண்டு ஒன்றியங்கள் நான்கு திடல்கள் தெரிவுசெய்து அதில் கோடை உழவு ஊட்டமேற்றிய தொழு உரம், இருபயிர்த் திட்டம், மேலுரமிடுதல், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புப் பயிற்சி ஆகிய அம்சங்களுக்கு மானியங்கள் 31.50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

### பயறு உற்பத்தி

பயறு உற்பத்தியில் கீழ்க்கண்டவாறு சாதனை செய்யப்பட்டுள்ளது: மெ. டன்னில்.

*1991-92-இல் 21,412, 1992-93-இல் 28,695, 1993-94-இல் 39,707*

பயறு உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்துகொண்டே வந்துள்ளது.

பயறு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, தேசியப் பயறு அபிவிருத்தித் திட்டம் செயலாக்கப்பட்டது. சிறு குறு விவசாயிகளுக்குப் பயறு உற்பத்தியில் பயிற்சி, விதை விநியோகம், செயல் விளக்கத் திடல்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், வேளாண் கருவிகள் ஆகியவைகளுக்கு ஊக்குவிக்கும் பொருட்டு, மானியங்கள் வழங்கப்பட்டன. அதற்காக ரூ.25 இலட்சம் செலவிடப்பட்டது.

### பருத்தி உற்பத்தி

*1991-92-இல் 47,225,* பேல்ஸ்.
*1992-93-இல் 51,200,* பேல்ஸ்.
*1993-94-இல் 39,500,* பேல்ஸ்.

இவ்வாறு பருத்தி உற்பத்தியில் 1993-94-ஆம் ஆண்டு குறைந்துள்ளது. 1992-93-ஆம் ஆண்டு பருத்தி விலை வீழ்ச்சியின் காரணமாகப் பரப்புக் குறைந்தும் அதனைத் தொடர்ந்து உற்பத்தியும் குறைந்துவிட்டது. இருப்பினும் தொழில்நுட்ப ரீதியில் அனைத்து வழிமுறைகளும் வழங்கப்பட்டு, சிறுகுறு விவசாயிகளுக்கு 28.26 இலட்சம் ரூபாய் கீழ்க்கண்ட அம்சங்களுக்கு மானியம் கடந்த ஆண்டு வழங்கப்பட்டது.

1. விதைகள் விநியோகம், 2. பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் தெளிப்பு நீர்க். கருவிகள். நடப்பு ஆண்டில் பருத்தி உற்பத்தி 50,000 பேல்கள் அடைய அனைத்து நடவடிக்கைகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

---

## மாவட்டப் பிரிவினை

1804-இல் கோயம்புத்தூரைத் தலைநகராகக் கொண்டு தனி மாவட்டம் பிரிந்தது. பின்னர், நிர்வாக வசதிக்கென 1979-இல் கோவை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அப்படிப் பிரிக்கப்பட்ட மாவட்டமே பெரியார் மாவட்டம் ஆகும்.

---

*With Best Compliments From*

**Leela Industries**

And

P.R.P. Computer Forms Private Ltd.,
100/B LMW Road,
Athipalayam Post
Coimbatore - 641 110

**Suppliars of**
**PNEUMAFIL & CARDING**
**under Casing in Stainless Steel.**

**Phone: 892687**

எண்ணெய் உற்பத்தித் திட்டம்- மெ.டன்னில்.

1991-92-இல் 61,290,
1992-93-இல் 70,350,
1993-94-இல் 74,680

இதேபோல், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில், ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டே வருகிறது. முக்கியப் பயிர்கள் நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு, சோயா மொச்சை.

கடந்த ஆண்டு முதல் எண்ணெய்வித்து உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

விதை விநியோகம், விதை கொள்முதல், செயல் விளக்கத் திடல்கள், சிறுதழைகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், உயிர் உரங்கள், ஜிப்சம், தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள், வேளாண் கருவிகள் ஆகியவைகளுக்குக் குறிப்பாக, சிறு-குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. மொத்த மானியத்தொகை 52 இலட்சம்.

பள்ளி மாணவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கும் திட்டத்தின் கீழ், அடியிற்கண்ட அளவுகளில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

1991-92-இல் 4,500 எண்கள்,
1992-93-இல் 7,500 எண்கள்,
1993- 94-இல் 7,500 எண்கள்

அவற்றில் மானியமாக ரூபாயில்.

1991-92-இல், ரூ. 41,250,
1992-93-இல், ரூ. 1,12,500,
1993-94-இல் ரூ. 1,12,500.

சிறு-குறு விவசாயிகளின் பிள்ளைகள் – ஆறாம் வகுப்புப் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டு, இத்திட்டம் அதிக அளவில் செயல்படுத்தப்பட்டு 26,000 பள்ளிக் குழந்தைகளுக்கு ரூ.5.20 இலட்சம் மானியத்தில் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

### தீவனப் பயிர்த் திட்டம்

கோவை மாவட்டத்தில் தீவன அபிவிருத்திக்காக 1992-93-ஆம் ஆண்டு 2,26,800 ரூபாயும், 1993-94-ஆம் ஆண்டு 1,29,077 ரூபாயும், சிறு-குறு விவசாயிகளுக்குத் தீவன மக்காச்சோள


விதைகள், சோள விதைகள், புல் கரணைகள் தட்டை, கொள்ளு விதைகள் முழு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் ஆதி திராவிடர் விவசாயிகளுக்கு 50 சதவிகித விலையில் வேளாண் இடுபொருட்கள், வேளாண் கருவிகள் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

*1991-92*-இல் ரூ. *2,33,000*,
*1992-93*-இல் ரூ. *1,93,075*,
*1993-94*-இல் ரூ. *3,65,000*
மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**வேளாண் காடுகள் தரிசு நிலம் மேம்பாட்டுத் திட்டம்**

தரிசு நிலம் மேம்பாட்டிற்கு 500 எக்டேர் பரப்பில் மரக் கன்றுகள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டன. இதற்கான மானியம் ரூ.*12,50,000* வழங்கப்பட்டது.



**தேசிய நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டம்**

இம்மாவட்டத்தில் மதுக்கரை, அன்னூர், அவிநாசி மற்றும் திருப்பூர் வட்டாரங்களில் 4 இடங்களில் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. தேசிய நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் சிறு-குறு விவசாயிகளுக்கு மண்வளம் காத்தல், வேளாண் கருவிகள், கால்நடைப் பராமரித்தல், தீவனப்புல் உற்பத்தி ஆகியவைகளுக்குக் கீழ்க்கண்டவாறு மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன:

*1991-92*-இல் ரூ. *1.84* இலட்சம்,
*1992-93*-இல் ரூ. *22.16* இலட்சம்,
*1993-94*-இல் ரூ. *27.20* இலட்சம்.

**பயிர் விளைச்சல் போட்டி**

உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, விவசாயிகளுக்குப் பயிர் விளைச்சல் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது. போட்டிகள் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடைபெற்று வருகின்றன.

மாவட்ட அளவில் அதிக நெல் உற்பத்தி செய்யும் முதல் விவசாயிக்கு ரூ.7,000-மும் இரண்டாம் பரிசாக ரூ.*3,000*-மும் வழங்கப்படுகின்றது. மாநில அளவில் நடத்தப்படும் போட்டியில் பரிசு பெறும் உழவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசாக வழங்கப்படுகின்றது.



## *The goodness of a name*

**A name is a good thing to have. It tells people who you are and establishes your identity. All names have meanings. Some of these meanings are self-indicative, like Rose; and Shanti for Peace; and ACC for quality cement. Some names have become famous because they have been made so by illustrious men and women who bore them in the past. Others have achieved fame by association over the years with a product and a tradition, like ACC, which is a household word for cement of the highest quality. You may be sure that such people take great care to guard their good names by the consistent excellence of their products. So when you are buying cement next, you can specify ACC in the fullest confidence that you are buying not only a good product with a good name, but the tradition that goes with the name.**

# *ACC*

is a good name. You can depend on ACC

THE ASSOCIATED CEMENT COMPANIES LIMITED
MADUKKARAI CEMENT WORKS




பாறைகள் மலிந்த கல்லாறு

# கல்லாறு கனித்தோட்டம்

*பல வண்ணப் பூக்கள் அழகு காட்டுகின்ற பூந்தோட்டம் பார்த்திருப்பீர்கள். பலவகைக் கனிகள் குலுங்கும் பழத்தோட்டம் பார்த்திருக்கிறீர்களா? இல்லையென்போர், கல்லாறு தோட்டக் கலைப் பண்ணைக்குச் செல்லுங்கள்!*

கோயம்புத்தூரிலிருந்து மேட்டுப்பாளையம் வழியே உதகைக்குச் செல்லுகிறவர்கள், ஊர்க் கடைசியில் 'இங்கே மலைப்பாதை ஆரம்பம்' என்கிற அறிவிப்புப் பலகையைக் காணலாம். பயணத்தை அதற்குமேல் நேரே தொடராமல், கீழே இடப்புறமாகச் சரிந்து குறுகலாகச் செல்லும் சாலையில் போனால், சிறிது தூரம் சென்றதுமே பழவாசம் அப்படியே நம்மைத் தூக்குவதை உணரலாம்.

ஆம், கல்லாறு எனப்படும் அங்கேதான் 1900-இல் அமைக்கப்பட்டிருக்கிறது அரசு தோட்-



எலுமிச்சை

டக்கலைப் பண்ணை. 8.92 ஏக்கர் நிலப்பரப்பில் இப் பண்ணை வெறும் ஆராய்ச்சி நோக்கோடுதான் உருவாக்கப் பட்டிருக்கிறது. இப்போது வெளி நாட்டுப் பழவகை உட்படப் பலவகைப் பழமரங்களும் அடர்ந்து வளர்ந்து பழக் கன்றுகள் விற்பனை செய்கிற அளவிற்கு, அரசின் அரவணைப்பால் தழைத்துச் செழித்துள்ளது.



பலாமரம்

## மக்கள் கூட்டம்

மிதமான வெப்ப சீதோஷ்ண நிலை கொண்ட பகுதியிலே அமைக்கப்பட்டிருக்கும் இப் பண்ணையில் பலவிதத் தோட்டக் கலைப் பயிர்கள், வாசனைத் திரவியங்களுக்கு உதவும் பயிர்கள், அலங்காரச் செடி வகைகள், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்களெல்லாம் இருக்கின்றன.

ஏராளமான மக்கள், இந்தப் பழப் பண்ணையைப் பார்க்கக் கூட்டம் கூட்டமாக நாள் தோறும் வருகை தருகிறார்கள்.

## குறிப்பிடத்தக்க பழங்கள்

பப்பாளிப் பழம், கருவைக் கலைத்துவிடும் சக்தியுள்ளது என்கிறார்களல்லவா?... 'நீண்ட காலம் பிள்ளை இல்லாதவர்களுக்குக் கரு உண்டாக்கும் சக்தி மிக்க பழம் இது என்று நமக்கொரு அதிசயப் பழத்தைக் காட்டினார்கள் இப் பண்ணையில். அதன் பெயர் துரியன் பழம் என்பதாகும். இது மலேயாவில்தான் விளையுமாம். அதிசயமாக இப்பண்ணையிலும் விளைந்திருக்கிறது.



கிராம்பு

இங்கே விளையும் மங்குஸ்தான் பழம், பழங்களின் அரசி எனப்படுகிறது. அந்த அளவிற்குச் சுவை மிக்கதாம் இப் பழம்.

இவை தவிர, பலாமரம் அதிலும் குறிப்பாகக் கறிப்பலா, சிங்கப்பூர் பலா, வேலிப் பலா, வெல்வெட் ஆப்பிள், திராட்சை, லிச்சி, ரம்பூட்டான், ஜவிரலி, லாங்சாட், புளிச்சங்காய், மா வகைகள், பம்பிளிமாஸ் பழ மரங்களெல்லாம் இங்குள்ளன.

மிளகு, கிராம்பு, கோகோ, பாக்கு, வெனிஸ்ஸா, ஜாதிக்காய், இலவங்கம், ஏலக்காய், பிரியாணி இலை போன்றவைகளும் இங்கே தாராளமாக விளைகின்றன.

கல்லாறு தோட்டக்கலை அலுவலர் திருமதி உமாராணி, அங்கே விளையும் அதிசயப் பூ ஒன்றை நமக்குக் காட்டினார். 'இட்டலிப் பூ'வாம் அதன் பெயர்!

"ஆங்கிலத்தில் இதை IX-ORA என்கிறார்கள்" என்றார், மேட்டுப்பாளையம் ஒன்றிய சமூகக் காடுகள் விரிவாக்க அலுவலரான திரு டி. போஜன்;

இந்தப் பழப் பண்ணைக்காகவே ஓடி வருவதுபோல மலை மீதிருந்து ஓடிவந்து உற்சாகமாக இறங்குகிறது ஒரு சிற்றருவி. பாறைகளே பரவலாகக் கிடப்பதால் இதன் பெயர் கல்லாறாம்!

## நோக்கமும் வளர்ச்சியும்

மேலே நாம் குறிப்பிட்ட மரக்கன்றுகள் யாவும் இங்கே குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன.

பல்வேறு வகையான பழங்கள், வாசனைத் திரவியப் பயிர்கள் பற்றியெல்லாம் வேளாண்மைத் தாவரவியல் பயிலுகின்ற மாணவ மாணவியர் இங்கே வந்து பல அரிய செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம்.



மிளகு -

பொதுமக்களுக்கு இது ஒரு மணக்கும் சுற்றுலாமையம் போல் திகழ்கிறது. ஆனால், கட்டணம் ஏதுமில்லை.


அங்கே வந்து செல்வோர் கூட்டத்தைக் கவனித்த பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்தபோது, "நுழைவுக் கட்டணம் ஏதாவது வைத்து, அதன்மூலம் இப்பண்ணைப் பராமரிப்புச் செலவை ஈடுகட்டலாமே?" என்றோம் நாம்.

"நல்ல யோசனை, பரிசீலிக்கிறேன்" என்றார்.


With best compliments from:

**ROOTS INDUSTRIES LIMITED**
ULAVAGAM, GANAPATHY
COIMBATORE 641 006 TEL:532100

- Leaders of Automotive Horns
- Meets the continuous and specific requirement of major original equipment manufacturers.
- Far and foremost exporters of Quality Horns to meet International Standards.
- First Horn Manufacturer to get ISI approval in India.
- The First Indian Company to get European Homologation approval for Electric Horn by TUV, Rheinland, Germany.
- Prestigious winner of the American International Quality Award by Fulham Geissler Associates, USA.
- ISO-9001 certified company.
- Now sharing technical expertise with world leaders M/s. Robert Bosch, Spain on Electric Horns.



**With best compliments from**

- Surya Theatre
- Dhanalakshmi Theatre
- Selvaraja Theatre

Tirupur

# கோவை மாவட்டம்



# சுற்றுலாத் தலங்கள்

**கோயம்புத்தூரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள சுற்றுலாத் தலங்கள் எண்ணற்றவை; எழில் மிக்கவை; காண வருவோரைக் களிக்கச் செய்பவை; திகைக்க வைப்பவை! அவற்றின் பட்டியல் போன்றது இந்தக் கட்டுரை:**

**கோ**வை நகரம், மாவட்டத்தின் தலைமையிடமாகவும், தமிழகத்தின் 3-வது பெரிய நகரமாகவும் திகழ்கிறது. இம்மாவட்டத்தில் மிக அதிகமான பஞ்சாலைகள் இருப்பதால், இதனைத் "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என அழைக்கின்றனர்.

இது தவிர, பலவிதப் பொறியியல் தொழிற்சாலைகள் அதிக அளவில் அமைந்துள்ளன. இம் மாவட்டம் கைத்தறித் துணிகளுக்கு மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு கைத்தறித் துணித் தொழில் மேம்பாட்டிற்காகப் பல நிறுவனங்கள் அமைந்துள்ளன.

இம்மாவட்டத்தில் சுற்றுலாச் சிறப்பு மிக்க இடங்கள் பல உள்ளன. அவை பற்றிய விவரங்கள் வருமாறு:

## பேரூர் கோயில்

கரிகால் சோழனால் கட்டப்பட்ட பேரூர் ஆலயம் நொய்யல் நதிக்கரை அருகாமையிலும், கோவையிலிருந்து 7 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இது ஒரு சிவாலயமாகும். இதன் மூலஸ்தானத்தில் அருள்மிகு பட்டீஸ்வரரும், மற்றும் அருள்மிகு பஞ்ச நாயகியும் வீற்றுள்ளனர். இத்திருக்கோயிலில் மிகவும் அழகிய கலைநயம் வாய்ந்த சிற்பங்கள் கொண்ட கனக சபை அமைந்துள்ளது. இது 'மேல் சிதம்பரம்' என்றும் அழைக்கப்படுகிறது.

## மருதமலை

கோவை நகரிலிருந்து மருதமலை அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் 12 கி.மீ. தொலைவில் அமைந்

**எம். பாலச்சந்திரன்**
மாவட்டச் சுற்றுலா அலுவலர்

துள்ளது. முருகக் கடவுளின் அறுபடை வீடுகளுக்கு அடுத்து, இதனை 7-வது வீடாகக் கருது கின்றனர். ஏற்ற வழிபாடுகள் நடைபெறுகின்றன. இத்திருக் கோயிலில், பண்டிகைக் காலங் களிலும், விழாக்காலங்களிலும் பக்தர்களின் வழிபாடு மிக அதிகம்.

## திருமூர்த்தி மலைக் கோவில்

கோவை-பழநி நெடுஞ்சாலை யில் உடுமலைப்பேட்டையி லிருந்து 20 கி.மீ. தொலைவில் திருமூர்த்திமலையின் அடிவாரத் திலும், திருமூர்த்தி அணையில் அருகாமையிலும் அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக் கோயில் அமைந்துள்ளது. தமிழ் நாடு அரசு சுற்றுலாத் துறை மூலம் அமணலிங்கேசுவரர் திருக்கோயிலிலிருந்து பஞ்லிங்க ஸ்தலம் (நீர்வீழ்ச்சி அருகில்) வரையில் சுமார் ரூ.3.56 இலட்சம் செலவில் நடைபாதை செப் பனிடப்பட்டுள்ளது. மேலும் இது மாவட்ட உலாத் தலமாகத் தேர்வு செய்யப்பட்டு, முன்னேற் றப் பணிகள் செய்யப்பட்டு உள்ளன. தற்பொழுது இவ் வணையருகில் ஒரு நீச்சல்குளம் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. மேலும் படகுக் குழாம் அமைக் கப்பட்டு சுற்றுலாப் பயணி களுக்குப் படகுச் சவாரி செய்ய வும் வசதி செய்யப்பட்டுள்ளது.

## கோவைக் குற்றாலம்

அனைவராலும், 'கோவைக் குற்றாலம்' என அழைக்கப்படும் 'சிங்குபதி நீர்வீழ்ச்சி' கோவையி லிருந்து சிறுவாணி செல்லும் நெடுஞ்சாலையில் 30 கி.மீ. தொலைவில், பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் அமைந்துள் ளது. இது கோவை மாவட்டத் தில் சிறந்த சுற்றுலா இடமாக அமைந்துள்ளது.

இந்நீர்வீழ்ச்சியைக் காணச் செல்லும் பயணிகள் போளுவம் பட்டி சோதனைச் சாவடியில் நுழைவுக் கட்டணமாக ரூ.5 (ரூபாய் ஐந்து மட்டும்) செலுத்தி அனுமதி பெற்ற பின்னர் செல்லலாம்.

இந்நீர்வீழ்ச்சியை அடைய சாலை வசதி மற்றும் குளிப்பதற் கான வசதிகள் செய்யப்பட்டு உள்ளன. யானை, சிறுத்தை, கடமான், காட்டாடு போன்ற வன விலங்குகள் உள்ளன, இப்பகுதியில்.

## தொள்ளாயிரம் மூர்த்தி கண்டி

கோவையிலிருந்து 30 கி.மீ. தொலைவிலும் நரசிபுரம் கிரா மத்திலிருந்து, 6 கி.மீ. தொலை விலும் இந்த நீர்வீழ்ச்சி அமைந் துள்ளது. 'தொள்ளாயிரமூர்த்தி கண்டி' என்று அழைக்கப் படுகிறது, இந்த நீர்வீழ்ச்சி. இந் நீர்வீழ்ச்சியை அடைய வெள்ளி மலைப் பட்டிணத்திலிருந்து நடைப் பயணமாகச் செல்ல வேண்டும். எனவே, அங்கு செல் லும் சாலையைத் தார் இட்டு, சிறந்த சாலையாக அமைக்கவும் மற்ற வசதிகளுக்கும் மேம்படுத்த ரூ.66 இலட்சம் செலவில்



திருமூர்த்தி அணை படகுத்துறை

திட்டங்கள் தீட்டப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. தற்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதை நாம் எல்லோரும் அறியச் செய்ய சீரிய முயற்சி மேற்கொண்டுள்ளார்.


## இந்திராகாந்தி வனவிலங்கு உய்விடம்

'இந்திராகாந்தி வனவிலங்கு உய்விடம்' எனப்படும் ஆனைமலைப் பகுதி, கடல் மட்டத்திலிருந்து 1400 மீட்டர் உயரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில், பொள்ளாச்சிக்கு அருகில், கோவையிலிருந்து 90 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 958 ச.கி.மீ. கொண்டதாகும். குரங்கருவி, அருகிலுள்ள ஆதாயம்மன் கோயில், புல்மலை (Grass Hills), சின்னார், கோடந்தூர் போன்ற சிறந்த பகுதிகள் அடங்கும். இந்தச் சரணாலயத்தில், காட்டு யானைகளும், காட்டு எருமைகளும், புலிகள், சிறுத்தைகள், மான்கள், செந்நாய், இராஜநாகம் போன்றவைகளும் பலவிதப் பறவைகளும் உண்டு. இச்சரணாலயத்தைக் காண ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் தவிர அனைத்து மாதங்களும் உகந்தவை பொள்ளாச்சியில் அமைந்திருக்கும் "வனவிலங்குப் பாதுகாவலர்" மீன்கரைச் சாலை, போன் 25358, பொள்ளாச்சி அவர்களிடம் அனுமதி பெற்று, பொள்ளாச்சியிலிருந்து 30 கி.மீ. தொலைவு கொண்ட 'டாப்சிலிப்ஸ்' சென்று சரணாலயத்தைக் கண்டுகளிக்கலாம். இங்கு யானையின் மீதும், வேனிலும் சென்று (காலை 6 மணி முதல், 8.30 மணி



With Best Compliments From

RMP

Air Compressor



Borewell Compressor



R.M.P. AGENCIES,
111, Angappa Naicken Street,
Madras - 600 001 Ph : 5231468



சிறுவர்க்கு வசதியாய் நீச்சல் குளம்

வரையிலும், மாலை 5.00 மணி முதல் 6.30 மணி வரையிலும்) யானை, புலி, சிறுத்தை, கரடி சில நேரங்களில் இராஜ நாகம், போன்ற வன விலங்குகளையும் கண்டுகளிக்கலாம். இங்கு தங்கி கண்டுகளிக்க தங்கும் விடுதிகள் வனத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இங்கு செல்லும் வழியில் ஆனை மலை என்ற இடத்தில் புகழ் பெற்ற மாசாளியம்மன் கோயில் உள்ளது.

## வால்பாறை

தொழில் வளத்தில், முன்னேற்றம் அடைந்துவரும் கோவை மாவட்டத்தில் மலைப்பிரதேசமாக அமைந்துள்ளது வால்பாறை. வற்றாத வளங்கொழிக்கும் வால்பாறை மலை, இன்று இயற்கை அன்னையின் எழில் மிகுந்த ஏற்றமுடன் விளங்குகிறது. இம்மலையினைச் சுற்றிக் காணப்படும் சோலைகள், கண்ணைக் கவரும் அருவிகள், கம்பளம் விரித்தாற்போல் காணப்படும் தேயிலைத் தோட்டங்கள் மற்றும் அணைக்கட்டுகள் அருகில் அமைந்துள்ளது. 'இந்திரா காந்தி வன விலங்குச் சரணாலயம்' போன்ற இடங்கள் இம்மலைக்கு மிகுந்த அழகைச் சேர்க்கிறது. இவ்வழகிய மலைப் பிரதேசத்தைச் சுற்றுலாப் பயணிகளின் உல்லாச இடமாக அமையும் வகையில் தங்க வசதியளிக்க வால்பாறை நகரியம் சுமார் ரூபாய் ஒரு கோடியே இருபது இலட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதல் பெற உள்ளது. மேலும் இம்மலையில் சிறுவர்களின் விளையாட்டு மைதானம் (Children's Playground) அமைக்க இடம் தேர்வு செய்து, பணிகள் மேற்கொள்ள கோவை மாவட்ட ஆட்சியரின் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, சுமார் ரூபாய் 30 இலட்சம் செலவில் திட்டம் வகுக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. வால்பாறை செல்லும் வழியில் ஆளியார் அணை அமைந்துள்ளது.

## அமராவதி அணை

கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள அமராவதி அணை கோவையிலிருந்து மூணாறு செல்லும் வழியில், உடுமலைக்கு அருகில் அமைந்துள்ளது. அமராவதி அணை அருகில் இந்திரா காந்தி வனவிலங்குக் காப்பாளரால் கண்காணிக்கப்பட்டு வரும் முதலைப் பண்ணை அமைந்துள்ளது. மேலும், இவ்வணையின் அருகில் பல வன விலங்குகளைக் காலை, மாலை வேளைகளில் கண்டுகளிக்கலாம்.

மேற்கண்ட சுற்றுலாச் சிறப்பு மிக்க இடங்களைத் தவிர, கோவை நகரில் பார்க்க வேண்டிய இடங்கள் பல. வேளாண்மைப் பல்கலைக் கழகம், வ.உ. சிதம்பரனார் பூங்கா, வனக் கல்லூரி, ஜி.டி. நாயுடு தொழில் நுட்பப் பொருட்காட்சி ஆகியவை அவற்றுள் சில!



# உடுமலை நாராயணகவி

**த**மிழ்த் திரைப்பட உலகில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு முன்பே 'வாத்தியார்' என்று சிறப்பித்து அழைக்கப்பட்ட சிறப்பினர் உடுமலை நாராயணகவி அவர்கள்.

அந்நாளையப் படவுலகின் திரைப் படப் பாடல்கள் இவராலேயே ஏற்றம் பெற்றன.

'ஆகும் நெறிஎது ஆகா நெறிஎது அறிந்துகொள்வீரே! நன்றாய்ப் புரிந்துகொள்வீரே!'

'மனிதனாகிப் போனேன்-புது மனிதனாகிப் போனேன்!...'

'குடிச்சுப் பழகணும்-நல்லா குடிச்சுப் பழகணும்...'

'ராஜா மகள் ராணி புது ரோஜா மலர் மேனி...'

- அந்தக் காலத் திரைப்படப் பாடல்கள் சிலவற்றின் தொடக்கங்கள் இவை. இந்தக் காலப் பாடல்களெல்லாம் கேட்ட சிறிது நேரத்திலேயே மறந்து போய்விடும் இந்நேரத்தில், என்றும் சிரஞ்சீவியாக விளங்கும் அந்தப் பாடல்களை எழுதிய பெருமையாளர் உடுமலை நாராயணகவியை நாம் நினைவு கூரத்தானே வேண்டும்?

கோவை மாவட்டச் சுற்றுப் பயணத்திலிருந்த நாம் அவரைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளுவதற்காக, அவர் பிறந்த ஊரான பூளவாடி கிராமத்திற்குச் சென்றிருந்தோம். அவருடைய தலை மகன் திரு பி.என் இராமகிருஷ்ணனே கிடைத்தார். அவர் மூலம் நாம் பெற்ற செய்திகள் இவை:

திரு கிருஷ்ணசாமி செட்டியார் திருமதி முத்தம்மாள் தம்பதியருக்கு **25.9.1899**-இல் பிறந்தவர்தான் உடுமலை நாராயணகவி அவர்கள்.

இளமைக் காலத்திலேயே, தமிழ் மீது தளராத பற்றுக் கொண்டிருந்த அவரது தந்தையார் மாண்டு போனார். உடுமலைச்சரபம் முத்துசாமிக் கவிராயர் என்பாரிடம் பத்தாண்டுகளுக்கு மேல் முறைப்படி தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுக் கொள்வாரானார் உடுமலை நாராயணகவி. அதன்பின், முத்துசாமிக் கவிராயரின் நண்பரும், நாடகத் தமிழ் வளர நல்ல'வண்ணம் பாடுபட்டவருமான திரு சங்கரதாஸ் சுவாமிகள் மூலம் இரண்டாண்டுக் காலம் நல்ல தமிழ் நாடகம் உருவாக்கும் பயிற்சி பெற்றார்.



**கழுகுப் பார்வையில் வால்பாறை**

★கோவை மாவட்டத்தில் **உள்ள** ஆனைமலை, வால்பாறை, பேரூர், திருமூர்த்தி, சிறுவாணிக்கு அருகேயுள்ள கோவைக் குற்றாலம் ஆகிய பகுதிகள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களாகத் திகழ்கின்றன. வால்பாறையில் சென்ற ஆண்டு கோடை விழா நடத்தப்பட்டது தொடர்ந்து நடத்த அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

திருமணம் முடிந்தபின், தம் குடும்ப முறைப்படி வியாபாரத்தில் ஈடுபட்டார். மனம் தமிழ் மீதிருந்த தால், வியாபாரம் கையைக் கடித் தது. மதுரைக்குச் சென்றார். நாடகத் துறையில் புகழ்பெற்றுவந்த திரு எம்.எம். சிதம்பரநாதனின் நட்புக் கிடைத்தது. தேசிய இயக்கக் கருத் துக்களை வலியுறுத்தும் வகையில் இசைப் பாடல்கள், நாடகங்கள் எழுதிடலானார். தமிழ் நாடக ரசிகர்களின் கவனம் அவர்மீது திரும்பியது.

இவ்வாறு, கலைத்துறையில் உடு மலை நாராயணகவியின் புகழோங் கியது. 'மதுரை ராயல் டாக்கி' என்கிற திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் முதன்முதலாகத் 'தூக்குத் தூக்கி' என்கிற தமது தயாரிப்புக்குக் கதை, வசனம், பாடல்கள் எழுத ஒப்பந்தம் செய்துகொண்டது.

அதைத் தொடர்ந்து சந்திர மோகனா, விப்ர நாராயணா, தமிழறியும் பெருமாள் போன்ற பல படங்களுக்குப் பாடல்கள் எழுத வாய்ப்பளிக்கப்பட்டது. இதை அடுத்து, ஏறத்தாழ நான்காண்டுக் காலம் சென்னையில் உள்ள எச்.எம்.வி. கிராமபோன் நிறுவனத் தார் ஒப்பந்த அடிப்படையில் பாடல்கள் எழுத ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

இதன்பின், தமிழ்ப்பட உலகில் உடுமலை நாராயணகவி, நல்ல வரவேற்பைப் பெற்றார். கண்ணகி, மகாமாயா, கிருஷ்ணபக்தி, வேலைக் காரி, சொர்க்கவாசல், பராசக்தி போன்ற பல படங்களுக்குப் பாகு நிகர் பாடல்களை எழுதிக் குவித்தார்.

இந்தக் காலகட்டத்தில்தான் அவருக்கு அறிஞர் அண்ணா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். போன் றோரின் தோழமை கிடைத்தது. உடுமலை நாராயணகவி பாடல்கள் இல்லாத படமே இல்லை என்ற நிலை திரையுலகில் ஏற்பட்டது.

★கோவை மாவட்டத்தில் உள்ள அடர்த்தியான காடுகள் எட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளன. மூங்கில், தேக்கு, கனி வகை போன்ற பயன்படு குடும்பப் பொருட்களெல்லாம் அவற்றால் வழங்கப்படுகின் றன.

கலைவாணரின் 'கிந்தனார்' கதாகாலட்சேபம் புத்துணர்ச்சி யும் எழுச்சியும் ஏற்படச் செய்தது.

**22.4.1967**-இல் சங்கீத நாடகச் சங்கத்தின் சார்பில், கவிராயருக்குச் *'சாகித்ய ரத்னாகர'* என்கிற விருது வழங்கப்பட்டது. அப்போது, திரு பு.ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் அவ்வமைப்பின் தலைவராக இருந் தார்.

சென்னையில், 'பாலர் அரங்கம்' 'கலைவாணர் அரங்கமாகப்' பெயர் மாற்றம் பெற்ற விழாவிற்குச் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தலைமை தாங்கினார் **(29.1.1974)**. அவ்விழா வில், உடுமலை நாராயணகவிக்கு திரு எம்.ஜி.ஆர். அவர்களால் பொன்னாடைப் போர்த்திச் சிறப் பிக்கப்பட்டது. பொற்கிழி வழங்கப் பட்டது. அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் கவிஞர் கண்ணதாசன், அவ்வை தி.க. சண்முகம், திரு நாரண துரைக்கண்ணன் போன் றோரெல்லாம் உடுமலையாருக்குப் புகழாரம் சூட்டினார்கள்.

மகாகவி பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார், நாமக்கல் கவிஞர், திரு வ.ரா., திரு சுத்தானந்த பாரதியார், டாக்டர் மு.வரதராச னார், திரு தண்டபாணி தேசி கர், திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை ஆகியோருடனெல்லாம் அன்புள்ளத்தோடு பழகிப் பண் பட்டவர் உடுமலை நாராயணகவி அவர்கள்.

'பாட்டுக்குள்ளே நல்ல பாட்டு
பாரதி பாட்டு"...

என அவர் எழுதிய பாடல் ஒன்று தற்போதைய பி.ஏ., பி.காம்., பி.எஸ்ஸி., தமிழ்ப் பாட நூல்களில் இணைக்கப்பட்டுள்ளது.

திரு கி. வீரமணி அவர்களால் 'பெரியார் பெருந்தொண்டன்' என்கிற பட்டம் கவிராயருக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

இவ்வாறாகத் தமிழ்த் திரைப் படப் பாடல் உலகில் முடிசூடா மன்னராக விளங்கி வந்த உடு மலை நாராயணகவி அவர்கள் தமது முதுமைக் காலத்தே சொந்தக் கிராமமான பூளவாடிக்கே சென்று வாழலானார். அவருடைய செவிகள் கேட்புச் சக்தியை இழந்தன. **1981**-இல், தமது **82**-ஆவது வயதில் கவிஞர் அவர்கள் கன்னித் தமிழ்க் கவிதையுலகமே கலங்கியழும்படி இறந்து போனார்.

இப்போது அவர் நினைவாகப் பூளவாடி கிராமத்தில் உள்ள அரசு மேனிலைப்பள்ளியில் ரூ.50,000 செலவில் உடுமலை நாராயணகவி நினைவுக் கலையரங்கம் ஒன்று உருவாக்கப்பட்டு உள்ளது. உடுமலை பகுதித் தொழிலதிபரான டாக்டர் கெங்கு சாமி நாயுடு அவர்கள் அதை **5.4.1992**-இல் திறந்து வைத்தார்.

உடுமலை நாராயணகவி அவர் களின் நினைவு நாளன்று இப் போதும் அங்கே இனிய தமிழ் விழா ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

# அறிவொளியின் நிறம் பச்சை



**கோ**யம்புத்தூர் மாவட்டம், மலைமுகடுகளும், அவைகளுனூடே சில்லிட்டு ஓடும் அருவிகளும், நிறைந்த மாவட்டம். அங்கே, சாடிவயல் என்ற ஒரு குக்கிராமம். எங்கும் மலைவாசிகள். பறவைகள் கிறீச்சிடும் மாலை நேரம். ஆதிவாசிகள் குவிந்திருக்கிறார்கள். குழல் விளக்கு மின்னொளியில் சிறிய மேடை. மாவட்ட ஆட்சித்தலைவர் உற்சாகமாய் பேசிக்கொண்டிருக்கிறார்.

கூட்டத்தில் சிறு சலசலப்பு, அதுவும் பெண்கள் பகுதியில், துறுதுறுவென ஒரு இளம்பெண் கூட்டத்தைக் கையால் விலக்கியபடி மேடையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தாள். ஆதிவாசிகளுக்கு உரிய உடையணிந்திருந்தாள். கூட்டத்திலுள்ள பெண்களின், விழிகள் அகலமாக, ஆச்சரியம் குடிகொண்டது. காவலர் ஒருவர் அந்தப்பெண்ணைத் தடுத்து நிறுத்த, மாவட்ட ஆட்சியர் அவரைக் கையமர்த்தினார். அந்தப்பெண் நேரே மேடைக்கு வர அனுமதியளிக்கப்பட்டாள்.

மேடைக்கூச்சமும் அவைக்கூச்சமும் அந்த இளம்பெண்ணை முற்றுகையிட்டது. மிரள விழித்தாள்.எதுவும் பேசமுடியாமல், வாயடைத்துப்போனாள். முகமெங்கும்முத்துமுத்தாய் - வியர்வை அரும்பியது. சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, விளக்கொளியில் தன்னுடைய முழங்கையை மாவட்ட ஆட்சியரிடமும், கூட்டத்தினரிடமும் உயர்த்திக் காட்டினாள். அதில் பெரிய பெரிய எழுத்துக்களால் பச்சை குத்தப்பட்டிருந்தது. தைரியமாய், ஒவ்வொரு எழுத்தாக எழுத்துக் கூட்டிப் படித்து முடித்தாள். எவரெஸ்ட் சிகரத்தையே எட்டிப் பிடித்து விட்ட மகிழ்ச்சி அவள் முகத்தில்.

ஏன், அந்த மலைவாசிகள் அனைவரிடமுந்தான். அவளுடைய முயற்சியை அங்கீகரித்து, கூட்டம் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தது. மேடையில் இருந்த அனைவரும் அமைதியாகவும், அதே நேரத்தில் உற்சாகமாகவும் இருந்தார்கள்.

மாவட்ட ஆட்சியர் அந்தப் பெண்ணிடம் கேட்டார், அம்மா, பச்சைக் குத்தப்பட்ட பெயர் உன்னுடையதா?"

அந்த இளம்பெண்ணோ வெகுளியாய், ஒரு பெரிய அதிகாரியிடம் பேசுகிறோம் என்ற சிறு அச்சம் கூட இல்லாமல், அதா, அது எனக்கு எழுதப்படிக்கக் கத்துக் குடுத்த எங்க அறிவொளி ஆசிரியை பேருங்கோ" என்று வார்த்தைச் சதங்கைகளைக் கொட்டியதுபோல் சொல்லிவிட்டு உடனே மேடையிலிருந்து இறங்கி கூட்டத்துக்குள் கலந்துவிட்டாள்.

அனைவரும் ஒரு கணம் மெய்சிலிர்த்துப் போனார்கள்.

கோவை மாவட்ட அறிவொளி இயக்கம் எந்த அளவுக்குப் பாமரர்களையும், அடித்தட்டு மக்களையும் பாதித்துள்ளது என்பதற்கு, இது ஒரு சான்று என்று கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் சொன்னார்.



## திறமைகளின் விளைநிலமாகத் திகழும்

# கோவை மருத்துவக் கல்லூரி

**த**மிழ்நாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் கல்விப் பணியில் முன்னணி வகிக்குமளவுக்குச் சீரிய சிறப்பாகச் செயலாற்றி, சிறந்த மருத்துவர்களை உருவாக்கும் மாபெரும் சமூகப் பணியையும் செய்து வருகிறது கோவை மருத்துவக் கல்லூரி.

ஆண்டுக்கு 110 மாணவர்கள் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்புக்காக இக்கல்லூரியில் அனுமதிக்கப்படுகிறார்கள். தற்போது 1994-95 எம்.பி.பி.எஸ். அனைத்து நிலைகளிலும் 561 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

இக்கல்லூரியில் எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்புத் தவிர, எம்.டி. பொது மருத்துவம், எம்.எஸ். அறுவையியல், டி.ஜி.ஓ. மகப்பேறு மருத்துவம், டி.சி.எச். குழந்தை நலம், டி.ஏ. மயக்க மருந்தியல் போன்ற மேல்பட்டப் படிப்பு வகுப்புகளும் நடைபெறுகின்றன. இக்கல்லூரி மாணவர்கள் படிப்பிலும், பலதுறைகளிலும் முன்னணிபெற்று விளங்குகிறார்கள். அவற்றுள் சில.


- தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கிடையே நடந்த எம்.பி.பி.எஸ். தேர்வில் கோவை மருத்துவக் கல்லூரி மாணவர் பாலாஜி சுந்தரேசன் முதன்மையாக வென்று 7 தங்கப்பதக்கங்களையும் பெற்று எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் 1994 - 95 ஆண்டின் முதல் மாணவனாகத் தேர்ச்சியடைந்துள்ளார். மேலும் இரண்டாவது இடத்தை, கோவை மருத்துவக் கல்லூரி மாணவி வி. சித்ரா பெற்று, 6 தங்கப்பதக்கங்களையும் வென்றுள்ளார்.
- அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட சௌரப் 95 என்ற பொது அறிவுப் போட்டியில் கோவை மருத்துவ மாணவர்கள் பங்கு பெற்று, சுழற் கேடயத்தைப் பெற்றுள்ளனர்.
- பாண்டிச்சேரி ஜிப்மர் வளாகத்தில் நடைபெற்ற அகில இந்திய அனைத்து மருத்துவக் கல்லூரி பங்குபெற ஸ்பான்டன் '94 என்ற போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்று சுழற் கேடயத்தைப் பெற்றிருக்கிறது இக் கல்லூரி.

திறமைகளின் விளைநிலமாகத் திகழ்ந்திடும் கோவை மருத்துவக் கல்லூரி, மருத்துவ அறிவியலில் நாளைய சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் இளம் மருத்துவர்களை உருவாக்கும் சக்திமிக்க பாசறையாக விளங்குகிறது. மனித சமுதாயத்திற்கு மரண பயம் விளைவிக்கும் எய்ட்ஸ் போன்ற அபாயகரமான நோய்களிலிருந்து சமூகத்தைக் காக்கும் மாபெரும் பொறுப்புமிக்க மருத்துவர்களை இக்கல்லூரி உருவாக்கி வருகிறதென்றால் அது மிகையல்ல!


### திப்புவின் ஆட்சி

பிற்காலத்தில் திப்பு சுல்தானின் பிரதிநிதியாகக் கோவையில் மாதையன் என்பான் எல்லா அதிகாரமும் பெற்று ஆட்சி செலுத்தினான். அவனைச் சூழ்ச்சியால் வென்றே ஆங்கிலேயர்கள் இங்கே காலூன்றினார்கள் என்கிறது வரலாறு.

**அண்மையில், கோயம்புத்தூரில் ரூ. 9.88 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்ட பிரம்மாண்டமான வடகோவை மேம்பாலம்.**



PHONE: 53327
RESI: 52927



SRI MURUGAN ENGINEERING WORKS

50, NORTH CAR STREET
AVANASHI - 641654 COIMBATORE DISTRICT

☆ WE HAVE UNDERTAKING SUPPLY AND SERVICE OF SUBMERSIBLE MOTOR-PUMP SETS, CENTRIFUGUAL MOTORS, AIR-COMPRESSER PUMPSETS & OPEN WELL GRAN SETS.

☆ ALL KIND OF LATH & WELDING WORKS.

PROP: C. MANI & BROS.

# கோரா பட்டுச் சேலை!



கோவை மாவட்டம் நூற்பாலைகள் மலிந்தது என்பது பலருக்கும் தெரியும். ஆனால், ஒருவகைச் சேலைத் தயாரிப்பிலும் அம்மாவட்டம் புகழ்பெற்று விளங்குவது மிகச் சிலருக்கே தெரியும்.

'சின்னச் சின்ன இழை
பின்னிப் பின்னி வரும்
சித்திரக் கைத்தறிச் சேலையடி...

- என்ற பாடல் கேட்டிருப்பீர்களே!

அப்படிப்பட்ட அழகுமிக்கதான 'கோரா' பட்டுப் புடவைதான் கோவைக்கு மேலும் புகழ் சேர்க்கும் சிறப்புமிக்கது ஆகும்.



குறிப்பாக, கோயம்புத்தூர் ம்ாவட்டத்தில் உள்ள அன்னூர் ஒன்றியத்தைச் சேர்ந்த திம்மநாயக்கன் பாளையத்தில்தான் ஏறத்தாழ வீட்டுக்கு வீடு இந்த வகைப் புடவைத் தயாரிப்புப் பணிகள் நாள் முழுவதும் இடைவிடாமல் நடைபெற்று வருகின்றன.

சின்னஞ்சிறு கிராமந்தான் என்றாலும், இவ்வகைச் சிங்காரச் சேலைத் தயாரிப்பில் அங்குள்ள இருபது வீட்டுப் பெண்மணிகள் 'டோக்ரா' திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்று வேலைபார்த்து வருகிறார்கள்.

கோவை நகரின் முக்கிய வீதிகளில் உள்ள பெரிய பெரிய துணிக் கடைகளிலெல்லாம் தொங்கிய 'கோரா' பட்டுப்புடவைகளைக்கண்டு கண்பூத்துப் போன நாம், அதை இத்தனை எழிலோடு எப்படித் தயாரிக்கிறார்கள் என்பதை அறிவதற்காகத் திம்மநாயக்கன் பாளையத்திற்குச் சென்றோம்.

திரு கே.என். பரமேசுவரன் என்பார் நம்மை வரவேற்று அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

அங்கிருந்த இரண்டு மூன்று தறிமேடைகளிலும் அவருடைய தாயார், மனைவி, மகள் அனைவருமாக நெசவுத் தொடர்பான ஒவ்வொரு வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"இதுதான் சைனா சில்க் புடவையா?" என்று, கொடியில்

கிடந்த ஒன்றைப்பார்த்துக் கேட்டோம், நாம்.

"இது கோரா பட்டுப் புடவைங்க" என்று சிரித்தபடி சொன்னார், அவர் மனைவி.

"சைனாவிலேர்ந்து வர்ற நூல்ல நெய்யிறம்னு அப்பிடிக் கேட்டிங்களாக்கும்? இப்பல்லாம் சிலுக்குப் பொடவை, பட்டுப் பொடவை எல்லாத்தையுங்காட்டிலும் இதுக குத்தாங்க ஏகப்பட்ட கிராக்கி" என்றார், ராட்டை முன்னிருந்த மூதாட்டியொருவர்.

"சைனாவுக்குப் போயே நூல் வாங்கறீங்களா என்ன?"

"இல்லிங்க. சூரத்திலிருந்து ஜரிகை வாங்கறம். சிலுக்கு நூலு... மத்ததெல்லாம் கோயம்புத்தூர்லயே கிடைக்கிது..."

நெய்து முடிக்கப்பட்ட ஒரு புடவையை எடுத்து விரித்துக் கட்டினார், ஒருவர். அழகழகான பூக்கள் அதன் உடம்பெங்கும் கண்ணைக் கவரும் வகையில் கவினுற இழைக்கப்பட்டிருந்தன. இந்தப் புட்டா வனப்பு மட்டுமல்ல, அதன் முந்தியில் அடர்த்தியான பூந்தோட்டம் ஒன்று சுமார் இரண்டு அடி அகலத்திற்குக் காட்சியளித்தது. புடவையை அப்படியிப்படி புரட்டுகிறபோது தெரிந்த ஒரு வகை மினுமினுப்பு, நம் நெஞ்சைக் கொள்ளை கொண்டது.

"இது நல்லாருக்கா?"

"இந்தப் புடவையைப் பாருங்க!"

"இதெப்படி?"

என்றெல்லாம் சில சிறுமிகள் ஒவ்வொரு சேலையைத் தம் மீது எடுத்துப் போட்டு அழகு காட்டினார்கள்.

"ஒரு புடவை நெய்யறதுக்கு எவ்வளவு காலம் பிடிக்கும்க?" என்றோம் நாம்.

"இதே வேலையா ஒக்காந்தம்னா... ஒரு நாள், ரெண்டு நாள்ல முடிச்சிறுவம். நடுவால வீட்டுவேலைங்களையும் நாங்களே பார்த்துக்கறதால... ஒரு சேலை நெய்து முடிக்க மூணு நாள் ஆவுதுங்க!" என்றார்,

ஒருவர்.

"வெளீலயெல்லாம் தறிபோடறதில்லீங்களா?"

"வேலை அதிகமா வந்தா போடறது தானுங்க. இன்னிக்கு ஒண்ணும் கண்ணுல்படலியேன்னு கேட்கறிங்களா? திங்கட்கிழமை

*With Best Compliments From :*

**Sri Baba Theatres Private Limited**

**Archana 70mm A/c. Darsana 35mm A/c.**

16/24, Devanga High School Road

Coimbatore - 641 002.

Phone : 444235 & 444335

**Sri Baba Films**

No.2, Gopalapuram 2nd street

Coimbatore - 641 018.

Phone : 217557

*With best compliments from*



**D.S.P. PROCESS**

Karaipudur Panjayat
Palladam Union,
Tirupur - 5.


பாருங்க" ஊர்ல ரொம்பபேரு சந்தைக்குப் போயிட்டாங்க!"

முன்பெல்லாம் சாதாரணச் சேலைகளுக்குத் தறிபோட்டுக் கொண்டிருந்தவர்கள் இவர்கள். பிறகு அரசு கடனுதவி வழங்க முன்வரவே, இந்த வகை கோரா பட்டுச் சேலை தயாரிக்கும் பணியில் முழுமூச்சோடு குடும்பம் குடும்பமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு குடும்பம் ஒரு மாதத்தில் சுமார் 12 அல்லது 15 சேலைகளை நெய்து முடித்துவிடுகிறது. இந்தச் சேலை நெசவில் போடப்படும் 'பாவு'க்குப் பெயர்தான் 'கோரா' என்பதாகும்.

"ஜரிகையெல்லாம் கறுத்துப் போயிடாமே இருக்குமுங்களா?" இது நம் கேள்வி.

"அவங்கவங்க உபயோகிக்கற விதத்தைப் பொறுத்ததுங்க அது. டிரைகிளீனிங் பண்ணினா ஜரிகை மட்டுமில்லே, புடவையே ரொம்பகாலம் நல்லபடியா இருக்கும்!" இது ஒரு பெண்மணியின் பதில்.



திம்மநாயக்கன் பாளையத்தில் மட்டும் இவ்வகைச் சேலைத் தயாரிப்புக்கென ஐம்பது அறுபது தறிகள் போடப்பட்டிருக்கின்றன.

'தொகுப்பு வீடுகள்' திட்டத்தின்கீழ், இந்த ஏழை நெசவாளர் குடும்பங்களுக்கும் 35 வீடுகள் கட்டி வருகிறது, அரசு. விரைவிலேயே 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் அந்தப் புது வீடுகளில் புதிய பொலிவோடு 'கோரா பட்டுப் புடவை' தயாரிப்புப் பணிகள் புதிய வேகத்தோடு தொடரும் என எதிர்பார்க்கலாம்!



# காட்டுக்குள்ளே கல்யாணம்!

**வா**ல்பாறை வட்டத்துக்குள் 11 ஆதிவாசிக் குடியிருப்புகள், சங்கரன்குடி, சிங்கோனா, பெல்லிமுடி, கல்லார், வில்லோனி, எத்தகுடி, கவர்தல், கீழ்புனாச்சி, காடம்பாறை, பால்கனார், மண்பாறை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இங்குள்ள ஆதிவாசிகள் முதுவர், காடர், புலையர், மலைசரி என்று வகைப்படுத்தி அழைக்கப்படுகின்றனர். இவர்களில் முதுவரின மக்களைத் தவிர மற்றவர்கள் விஞ்ஞானத்தின் வெளிச்சத்தில் நாகரிகப்பூச்சை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். முதுவரின மக்களிடையே சில பழக்கங்கள், மரபுகள் ஆண்டாண்டுக்காலமாய் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

**சாவடி**

ஆண்களில் 5 வயதுக்கு மேற்பட்ட திருமணம் ஆகாத வாலிபர்கள் மற்றும் மனைவியின்றி வாழும் வயதானவர்கள் இரவில் தங்குவதற்குத் தனி ஆண்கள் சாவடியும், அதேபோல் 5 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மற்றும் கணவனை இழந்த பெண்கள் இரவில் தங்குவதற்குத்தனியான பெண்கள் சாவடியும் உள்ளன. திருமணமான தம்பதிகள் மற்றும் 5 வயதுக் குட்பட்ட குழந்தைகளுடன் வசிக்கும் குடும்பத்தார் மட்டுமே இந்தச் சாவடிகளை விட்டு வெளியில் வசிக்கிறார்கள். இரண்டு சாவடிகளிலும் அங்கே தங்குபவர்களுக்கு காலையும், இரவும் உணவு வழங்கப்படும். பகல் உணவு முதுவரிடையே கிடையாது. உணவு சமைத்தல், இரவு முழுவதும் தூங்காது தொடர்முறையில் பாதுகாத்தல் போன்ற பணிகளை அந்தந்தச் சாவடிக்காரர்களே பார்த்துக் கொள்கிறார்கள்.

**தலைக்கு எண்ணெய் வைக்கும் சடங்கு**

பெரும்பாலும் தீபாவளியன்றோ அல்லது கார்த்திகைத் தீபத்தன்றோ ஆண்கள் சாவடியில் உள்ள 10 லிருந்து 20 வயது நிரம்பிய ஆண்மகனுக்கு அவனுடைய தாய்மாமன் அல்லது நெருங்கிய உறவினர் எண்ணெய் வைக்கும் சடங்கு நடைபெறும். நவதானியத்துடன் ஏதாவதொரு எண்ணெயைக் கலந்து பையனின் உச்சந்தலையில் தேய்த்துவிடுவர். அந்த வாலிபன் எண்ணெய் தேய்த்த ஓராண்டுக் காலத்துக்குத் தலைமுடி வெட்டக்கூடாது. அவன் புதிய மல்வேட்டியைத் தலைப்பாகையாகக் கட்ட வேண்டும். அவ்வாறு தலைப்பாகை கட்டிய நாள் முதல் அவன்

திருமணத்துக்குத் தயார் என்பது பொருள். இதேபோல், பெண்கள் சாவடியிலும் 10 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் (அவள் வயதுக்கு வராவிட்டாலும்) தலையில் நவதானியத்துடன் எண்ணெய் வைக்கப்படும். அவளைவிட வயதில் மூத்த பெண் எண்ணெய் வைப்பாள். எண்ணெய் வைத்துக்கொண்ட பெண் அன்று முதல் கொண்டை போட்டுக்கொள்ள வேண்டும். இந்தக்கோலம், அவள் திருமணத்திற்குத் தயார் என்பதை வெளியுலகுக்குக் காட்டும்.

முதுவரிடையே நான்கு உட்பிரிவுகள் இருக்கின்றன. அவை முறையே, எல்லிக் கூட்டம், தூஸ்திரக்கூட்டம், கணையாட்டுக் கூட்டம், மேலாளக் கூட்டம் ஆகும். ஒரே உட்பிரிவைச் சேர்ந்தவரிடையே திருமணம் நடக்கக்கூடாது என்பது மரபாக்க் கடைப்பிடிக்கப்படுகிறது.

## திருமண நிகழ்ச்சி

பெண்கள் சாவடியில் உள்ள கொண்டையிட்ட பெண்ணும், ஆண்கள் சாவடியில் உள்ள தலைக்கு எண்ணெய் வைத்த பையனும் ஒருவரையொருவர் விரும்பினால் மட்டும் திருமணம் நடந்துவிடாது. ஆண்கள் சாவடியிலுள்ள இளைஞர்களில் மூத்தவர் அல்லது தலைவன், பெண்ணின் பெற்றோரிடம் சென்று அவர்கள் எந்த உட்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று கண்டுபிடித்து, மணமகனின் விருப்பத்தைச் சொல்வார். எந்த உட்பிரிவோடு எந்த உட்பிரிவு உறவு கொள்ள வேண்டும் என்கிற மரபைப் பின்பற்றி, ஒத்துவருகிற பட்சத்தில் மணமகள் முடிவு செய்யப்படுவாள்.

வரதட்சணை என்கிற வார்த்தையே முதுவர் வாழ்வில் இல்லை. மாப்பிள்ளையும், பெண்ணும் முடிவானவுடன் பெண்கள். சாவடியிலுள்ள மணப்பெண்ணின் தோழிகள் மணப்பெண்ணை இரவோடு இரவாகக் காட்டுப்பகுதிக்குள் அழைத்துச் சென்று மறைந்து கொள்வார்கள். அவர்கள் மறைந்துள்ள இடத்தைக் கண்டுபிடிக்க மாப்பிள்ளைத் தோழர்கள் புடவை, கொண்டை ஊசி, மற்றும் சாந்து பொட்டு போன்ற பொருள்களுடன் அலைந்து திரிவார்கள். இந்நிகழ்ச்சி கிட்டத்தட்ட 10 நாட்கள் கூட நீடிப்பதுண்டு. இதில்தான் இருபாலரின் திறமையும் அடங்கியிருக்கிறது. அந்த அளவுக்கு, திறமையானவர்கள் பெண்கள். மணப்பெண்ணின் இடம் தெரிந்தவுடன், நேரிடையாக மணமகனின் கையில் மணப்பெண்ணை ஒப்படைத்து, புத்தாடை அணியச் செய்வார்கள். புதுத்தம்பதிகள் இனி தங்கள் சாவடிகளை விட்டு, தனிக்குடிசையில் வாழத் தொடங்குவார்கள்.

கோவை மாவட்டத்தில் வாழும் மலைவாழ் மக்களுக்கு வீட்டுக்கூரை அமைக்க 500 தகர ஓடுகள் ரூ.40 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளது. 50 குடும்பங்களுக்குக் காளான் வளர்ப்புத் தொழில் நடத்த அரசு நிதியுதவி வழங்கியுள்ளது.


—தகவல்
திரு. கனகராஜ்,
சமூக சேவகர், வால்பாறை.



★ வழியில் முள் இருந்தால் தைக்கும். செருப்பில் ஓட்டை இருந்தால் சுடும். அதைப்போல நம்மிடம் ஜாதிகள் பல இருந்தால் அந்நியர் ஊடுருவல் நேரத்தான் கூடும்!

- அறிஞர் அண்ணா

WITH BEST COMPLIMENTS FROM




# TEXTOOL COMPANY LIMITED

**Ganapathy Post, Coimbatore 641 006**
**INDIA**

**Telex: 0855 353 TXT IN**


**Grams: 'TEXTOLCO'** **Fax: 91-0422-532848**

**Phone: 531271, 531320, 531370, 532230, 532421, 532470, 532475, 532521**

Manufacturers of:

Carding Frames, Draw Frames, Speed Frames, Ring Spinning Frames, Worsted Ring Spinning Frames, Ring Doubling Frames, Semi Automatic Winders, High Speed Cone Winders, Assembly Winders, Hank to Cone Winders, Cots Grinders, Metal Cutting Machines and Agents for Savio Automotic Winders

# மாவட்டத் தொழில் மையத்தின் மகத்தான பணிகள்



★தொழில் வளர, தொழிலாளர் மேம்பட, தொழில் ஊக்குவிப்பு முகாம்கள்!

★சொந்தக் காலில் நிற்க, சுய வேலைவாய்ப்புத் திட்டம்!

★உற்பத்திப் பொருள்களுக்குச் சிறப்பு முதலீட்டு மானியம்!

★கைவினைஞர்கள் மற்றும் மகளிருக்கு வேலைவாய்ப்பு!



**கோ**வை மாவட்டம் தொழில் ரீதியில் பார்க்கிறபோது, தமிழ்நாட்டில் முன்னணியில் உள்ள மாவட்டங்களில் முதன்மையானதாக விளங்குகிறது.

இம்மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு, புதிதாகத் தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டியாக, மாவட்டத் தொழில் மையம், செவ்வனே பணி ஆற்றி வருகின்றது.

**தற்காலிகச் சிறுதொழில் பதிவு மற்றும் நிரந்தரச் சிறுதொழில் பதிவு**

இம்மையத்தின் மூலம் தொழில் முனைவோர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தொழில் தொடங்கத் தேவையான அனைத்து ஆலோசனைகளும் தெரிவித்து, அவர்களுக்குத் தற்காலிகச் சிறுதொழில் பதிவுச் சான்று வழங்கப்படுகிறது.

இவ்வாறு தற்காலிகப் பதிவு பெற்ற இனங்களைத் தொடர்பு கொண்டும் உற்பத்தித் தொடங்கிய பின் அவர்களுக்கு நிரந்தரச் சிறுதொழில் பதிவு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இவ்வாறு, இம்மாவட்டத்தில் 31.3.94 வரை 24,786 நிறுவனங்கள் பதிவு செய்யப் பட்டு இயங்கி வருவதுடன், இந்நிறுவனங்கள் சுமார் 2.5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பும் அளித்து வருகின்றது.

**ஒரு முனைத் தீர்வு**

சிறுதொழில் முனைவோர் தாம் உத்தேசித்துள்ள தொழில்களைத் தொடங்குவதில் உள்ள இடர்ப்பாடுகளை விவாதித்து, உரிமங்கள் துரிதமாகக் கிடைக்கவும், ஒருவழிக் கோட்பாட்டுக் குழு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இக்குழு, பிரதி மாதமும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் கூடி விவாதித்து, விரை

வில் உரிமங்கள் கிடைக்க இம் மையம் தக்க நடவடிக்கை மேற் கொள்கிறது.

**மாவட்ட ஆலோசனைக் குழு**

இக்குழு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் பிரதி மாதமும் கூடி, சிறுதொழில் வளர்ச்சிக்களுக்கான சாத்தியக் கூறுகள் மற்றும் அதன் தேவை களைப் பற்றி ஆராய்ந்து தக்க பரிந்துரை செய்து, தொழில் வளர்ச்சி ஏற்படத் தக்க வழிவகை செய்கிறது.

**தொழில் ஊக்குவிப்பு முகாம்**

இம்மாவட்டத்தில், வட்டார அளவில் 21 வட்டாரத்திலும் தொழில் முனைவோர்களுக்காக இம்மையத்தின் மூலம், தொழில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தப் பட்டு, தொழில்கள் தொடங்க தக்க ஆலோசனைகளும் வழங்கப்படு கின்றன.

**தொழில் தகவல் பரப்புக் கூட்டம்**

தொழில் முனைவோர் நலனுக் காக, மாவட்டத்தில் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு தகவல் பரப்புக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்தக் கூட்டத் தில் தொழில் முனைவோர்க்கான அடிப்படை மற்றும் முக்கியமான தகவல்கள் தெரிவிக்கப்பட்டு, ஆலோசனை வழங்கப்படுகிறது. இத்துறையின் அலுவலர்கள், பிற துறை அலுவலர்கள் வங்கித் துறை அலுவலர்கள், தொழில் வல்லு நர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தொழில் முனைவோருக் கான அனைத்துத் தகவல்களையும் அளிக்கின்றனர். இந்த மாதிரியான கூட்டம், முக்கியமான நகரங்களில் ஓர் ஆண்டில் நான்கு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.



**பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள்**

கோவை மாவட்டத்தில், 187 பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 100 நிறுவனங்கள் வெவ்வேறு அளவுள்ள நூல் உற்பத்தி மற்றும் நூல் நூற்புத் தொழில்களில் ஈடு பட்டுள்ளன. இவைகளில் மதுக் கரையில் அசோசியேட் சிமெண்ட் கம்பெனியாரின் சிமெண்ட் உற் பத்தி நிறுவனம், தனியார் துறை யின் லெட்சுமி மெசின் ஒர்க்ஸ் மற்றும் செயற்கை இழை உற்பத்தி செய்யும் சிறுமுகையில் அமைந் துள்ள சௌத் இந்தியா விஸ்கோஸ் லிட் என்ற குறிப்பிடத்தக்க நிறு வனங்கள் அமைந்துள்ளன.

**விரைவில் செயல்படுத்திட...**

இம்மாவட்டத்தில், புதிதாகத் தொழில் திட்டங்கள் அமைக்கும் பொருட்டு தங்களது தொழில் திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதிக்குப் பதிவு செய்துள்ள புதிய தொழில் முனைவோர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 194 ஆகும். இந்நிறுவனங்கள் விரைவில் தங் களது தொழில் திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கத்துடனும், செயல்படுத்துவதில் ஏற்படும் நடை முறைப் பிரச்சினைகளையும் தீர்க்க மாநில அளவில் உயர்மட்டக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு சென்று, விரைவில் தங்களது தொழில் திட்டங்களைச் செயல் படுத்த இம்மையத்தின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

**சுயமாகத் தொழில் தொடங்கிட...**

2.10.1993-இல் பாரதப் பிரதம ரால் அறிவிக்கப்பட்ட இத்திட்ட மானது, எஸ்.எஸ்.எல்.சி. படித்த 18 வயதிற்கு மேல் 35 வயதிற்குள் உள்ள வேலையற்ற நபர்களுக்குச் சுயமாகத் தொழில் தொடங்க, பாரதப் பிரதமரின் ரோஜ்கார் யோஜனாத் திட்டத்தில் நபர் ஒருவருக்கு அதிகபட்சம் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் தேசியமய மாக்கப்பட்ட வங்கி, வர்த்தக வங்கிகள் மூலமாக நிதி வசதிக்கு இம்மையத்தின் மூலம், உரிய பரிந்துரைகள் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தில் கடந்த 1993-94-ஆம் ஆண்டில் 736 நபர்கள் வங்கிக்குப் பரிந்துரைக்கப்பட்டு ரூ.157.03 இலட்சங்கள் 221 நபர்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளன.

**கூடுதல் கட்டடம் கட்ட...**

தென்னகத்திலேயே கோவை மாவட்டத்தில் மோட்டார், பம்ப் மற்றும் டீசல் பம்ப் ஆகியவைகள் அதிக அளவில் உற்பத்தி செய்வ தால் அதன் தரத்தை உயர்த்தி சர்வதேசத் தரத்திற்கு இணை யாகவும் "பிராசஸ் கம் புராடக்ட் டெவலப்மெண்ட் சென்டர்" ஒன்று மத்திய மாநில அரசுகள் நிதியுடன் தனியார் துறையின் கூட்டு முயற்சியில் ரூ.491 இலட்சத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இதற்காகக் கோவை குறிச்சித் தொழில் பேட்டைக்கு அருகில் தமிழக அரசு ரூ.29.10 இலட்சம் மதிப்புள்ள 1:32 ஏக்கர் நிலம் மற்றும் 922 சதுர மீட்டர் பரப்புள்ள கட்டடங்களை யும் கோவை மாவட்டச் சிறு தொழில்கள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்திடம் ஒப்படைக் கப்பட்டது.

மேலும், இம்மையத்திற்குக், கூடு தல் கட்டும் பணிக்காக மாநில அரசின் பங்காக ரூ.91 இலட்சம் சிட்டார்க் மூலம் செயல்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டு பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகினறன.

**முதலீட்டு மானியம்**

சிறுதொழில் நிரந்தரச் சான்று பெற்ற நிறுவனங்கள் தமிழக அர சால் இம்மாவட்டத்தின் தொழிலில் பின்தங்கிய வட்டங்கள் என அறி விக்கப்பட்ட பொள்ளாச்சி, வால் பாறை, அவிநாசி, பல்லடம் ஆகிய வட்டங்களில் அமைந்திருந்தால், அச்சிறு தொழில் நிறுவனங் களுக்குத் தங்களது நிலையான முதலீட்டில் 15 சதவிகிதத் தொகை யினை மானியமாக அளித்து. இப் பின்தங்கிய வட்டங்களில் நிறுவப் படும் சிறுதொழில் நிறுவனங்களும் ஊக்கமுடன் செயல்பட இம்மையத் தின் மூலம் நடவடிக்கை எடுக்கப் படுகின்றன.

> **காவிரி சூழ் கொங்கு**
>
> வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
> குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - கிடக்கும்
> சுழித்தண் டலைமேவு காவிரிசூழ் நாட்டுக்
> குளித்தண் டலையளவு கொங்கு!
>
> **- பழந்தமிழ்ப் பாடல்**

சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தங்களது நிலையான மூலதனத்தில் 20 சதவிகிதம் ரூ.15 இலட்சத்திற்கு மேற்படாமல் (தோல் தொழிலுக்கு ரூ.20 இலட்சம் வரை) கீழ்க் காணும் உற்பத்திப் பொருள்களுக்குச் சிறப்பு முதலீட்டு மானியம் வழங்கப்படு கின்றது.

மின்னணுப் பொருட்கள், வாகன உதிரிப்பாகம், மருந்துப் பொருட்கள், உணவு பதனிடும் தொழில்கள், சூரிய சக்தியால் இயங் கப்பெறும் உபகரணங்கள் உற்பத்தி, ஏற்றுமதிக்கான தங்கம், வைர நகைகள் உற்பத்தி, மாசுக் கட்டுப் பாட்டு உபகரணங்கள், விளை யாட்டுப் பொருட்கள், அலுமினியம், பி.வி.சி. முதலியவற்றால் தயாரிக் கப்படும் சன்னல், கதவு கட்டடப் பொருட்கள்.

**மின் மானியம்**

இதனைத் தவிர, பதிவு பெற்ற சிறுதொழில் நிறுவனங்கள் தங் களின் தொழிலகத்துச் செலுத்தப் பட்ட மின்சாரக் கட்டணத்தில் முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 40%, 30%, 20% என்ற அடிப்படையில் மின் கட்டணத் தொகையில் மின் மானியமாகவும் அளிக்கப்படுகின்றது.

உயர் அழுத்த மின்சாரம் மற்றும் ஒசையிரி கிளாத் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களுக்குத் தவிர, மீதம் உள்ள அனைத்துப் பதிவு செய்த சிறுதொழில் நிறுவனங்களுக் கும், தங்கள் உற்பத்திக்குத் தேவைப் படும் ஜெனரேட்டர் வாங்குவதற்கு ஜெனரேட்டர் விலையில் 15 சத விகிதம் ஜெனரேட்டர் மானியமாக வும் வழங்கப்படுகிறது.

**தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்**

கோவை மாவட்டத்தில் இயங் கும் பல்வேறு கூட்டுறவுச் சங்கங் களில் தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கும் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும். இம்மாவட் டத்தில் இத்தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையத்தின் கீழ் இயங்கி வருகிறது.

இம்மாவட்டத்தில் 19 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது இயங்கி வருகின்றன. இவ்வகை யான தொழிற்கூட்டுறவுச் சங்கங் களைத் தொடங்கியதன் முக்கிய நோக்கமே வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள திறன் பெற்ற கைவினை ஞர்கள் மற்றும் பயிற்சி பெற்ற பெண்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்பளித்து அவர்களின் பொரு

ளாதார நிலையை உயர்த்துவதே ஆகும்.

இம்மாவட்டத்தில் மோட்டார் வாகனப் பராமரிப்பு, நிலக்கரி விநியோகம், கயிறு, குடை, சிமெண்ட் பொருட்கள், சாக்குப் பைகள் தயாரித்தல், பித்தளை, செம்பு, எவர்சில்வர் பாத்திரங்கள் உற்பத்தி செய்தல், பால் கேன்கள், பாலிதீன் பைகள் தயாரித்தல் ஆகிய தொழில்களில் திறன் பெற்ற கைவினைஞர்களைக் கொண்டு 13 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. தவிர, கோவை மாவட்டத்தைச் சார்ந்த ஊரக ஆயுதப்படை, சிறப்புப் படையைச் சார்ந்த காவலர்களின் குடும்பங்களுக்கெனத் தனியே மூன்று தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன. மேலும், இம்மாவட்டத்தில் பரந்து விரிவுபட்ட தொழில்துறை வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு, சிறு தொழில் முனைவோருக்காகச் சிறிய தொழில்களை உருவாக்கும் நோக்கத்துடன் மூன்று தொழிற் கூட்டுறவுப் பேட்டைகள் பொள்ளாச்சி, கருமத்தம்பட்டி, சோமையம்பாளையம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றன.

மேற்கண்ட 19 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்த உறுப்பினர்கள் 3,204 ஆகும். இந்த தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த பங்குத் தொகை ரூ.30.36 இலட்சம் ஆகும். மேற்கண்ட தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழக அரசுப் பங்குத் தொகைக் கடனாகவும், பங்கு மூலதனமாகவும் நிதி உதவி அளித்துள்ளது. இச்சங்கங்களின் மூலம் 366 உறுப்பினர்கள் நேரடியாகவும், 2,828 உறுப்பினர்கள் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் பெற்று வருகின்றனர்.

பல்வேறுச் சங்கங்கள் தங்களுடைய பொருட்களை உற்பத்தி செய்து அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வெளியாட்கள் ஆகியோருக்கு விற்பனை செய்து வருகின்றன. இந்தச் சங்கங்களானது நடப்பு 1994-95-ஆம் ஆண்டில் பிப்ரவரி 1995 முடிய 176.78 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், நலிந்த பிரிவினர்களுக்கெனத் தனியாகத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும், பெண்களுக்கெனத் தனியாக 5 தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருவது தான்.

மேற்கண்ட கூட்டுறவுச் சங்கங்கள், தமிழக அரசு உதவியுடன் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பளித்து, அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்தி, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருவதை இங்கே குறிப்பிட வேண்டும்.

**நல்வாழ்த்துக்கள்**

# அம்மாருண் பவுண்ட்ரீஸ்,


**80/6 A, இரத்தின கிரி ரோடு,**

**விளாங்குறிச்சி அஞ்சல்,**

**கோயமுத்தூர்-641 035**

**போன்: 866611/2/3** **தந்தி: CAST IRON**

**தயாரிப்பாளர்: தரமான வார்ப்பு இரும்பு கேஸ்டிங்குகள்**




கோவை மாவட்டமெங்கும் பெருந்தொழில்கள் மட்டும்தான் என்பதில்லை. சிறுதொழில்களும் அப்படியும் இல்லாமல் இப்படியும் இல்லாமல் உள்ள தொழில்களும் பரவலாக வளர்ந்து வருவதைத்காணலாம். பொள்ளாச்சியில் இந்த மூன்றாவது ரகத் தொழில் வளர்ச்சியில் முதன்மை பெற்றிருப்பது காயிர் ஆர் COIR-ON தொழிற்சாலை. மென்மையாக்கப்பட்ட தேங்காய் நாரைப் பக்குவமாக்கி மெத்து மெத்தென்று உருவாக்கப்படும் மெத்தைகள், தலையணைகள், சோபா இருக்கைகள் போன்றவை இங்கே தயாரிக்கப்படுகின்றன.

1986-இல் நிறுவப்பட்ட இத்தொழிற்சாலையில் சுமார் முப்பது பேர் பணிபுரிகின்றனர் அவர்களில் அறுவர் பெண்கள்.

# தென்னை நார்த் தொழிற்சாலை


## [காயிர் – ஆன்]



## கோவை ஏடுகள்

**கோ**யம்புத்தூரிலிருந்து சில பத்திரிகைகளும், பல நாளேடுகளும் வெளிவருகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை:

கலைக்கதிர், கோவைச் செய்தி, இந்து (ஆங்கிலம்), இந்தியன் எக்ஸ்பிரஸ் (ஆங்கிலம்) தினமணி, தினத்தந்தி, மக்கள் குரல், தினபூமி, அதிர்ஷ்டம், பிற்பகல், மாலை முரசு, மாலைமலர், ஆப்டர் நூன் (ஆங்கிலம்) தினமலர், தினகரன்.



மூன்று ஷிப்ட் என்கிற முறையில் இங்கே வேலை நடக்கிறது.

பொள்ளாச்சியிலேயே தென்னை நார் அதிகம் கிடைப்பினும், கேரளத்திலிருந்தும் தருவிக்கப்படுகிறது. துணி உறைகள் பம்பாயிலிருந்தும், இரசாயனப் பொருட்கள் சென்னையிலிருந்தும், மதுரை, கொச்சி போன்ற இடங்களிலிருந்தும் வரவழைக்கப்படுகின்றன.

ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் தொடங்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலைக்கு, அரசு மூலம் ஐ.ஆர்.டி.பி. கடனும் அளிக்கப்பட்டுள்ளது. எல்லோருமே ஊக்கத்தோடு பணிபுரிகிறார்கள்.


PARK SCHOOL

# பார்க் ஸ்கூல் (RESIDENTIAL)

(மெட்ரிக்குலேஷன் & ஹையர் செகண்டரி)


சின்னக்கரை, திருப்பூர் – 641 605. கோவை மாவட்டம். போன் : 710223

INTERNATIONAL EDUCATION AT INDIAN RATES

## தமிழகக்கல்வித்துறையின் முன்னோடிகள்

ஆங்கிலம் மீடியம், தமிழ், இந்தி முதல் மொழிகள்

அனுமதி : நர்சரி முதல் 11–ம் வகுப்பு வரை மாணவ, மாணவியர்





- தென்றல் தவழும் இயற்கையுடன் இணைந்த அழகிய கட்டிடங்கள்.
- அன்பான பராமரிப்பு, அறுசுவை உணவுடன் மிகச் சிறந்த தங்கும் விடுதி.
- நீச்சல் குளம், குதிரையேற்றம், தடகளப்பயிற்சி இன்னும் . . . இன்னும் . . . விளையாட்டுகள்.
- பொதுத் தேர்வுகளில் 100% வெற்றி.
- பள்ளிகள், தொழில்நுட்ப பயிலகம், கல்லூரிகள் என கல்வித்துறையில் கால் நூற்றாண்டுகள் மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்ற கல்வியாளர்களால் நடத்தப் பெறுகிறது.
- விண்ணப்பம், விளக்கவுரை பெற ரூ 100/– M.O. செய்யவும்.
- அட்மிஷன் துவக்கம் 1–3–1995 முதல்.


Dr. P.V. ரவி, M.A., M.Phil., B.Sc., B.Ed., Ph.D.,
நிறுவனர்

Mrs. K. பிரேமாரவி, B.A., B.Ed., C.P.Ed.,
தாளாளர்







# மண்வளம்

கோவை மாவட்டத்தில், பலவகைப் பயிர்களும் விளைகிற அளவுக்கான மண்வளம் உள்ளது. ஆங்காங்கே சின்னஞ் சிறிய அல்லது பெரிய பெரிய மலைகள் தலை தூக்கியிருந்த போதிலும் நெல், கரும்பு, சோளம், பருத்தி, எள், சூரிய காந்திப் பூ, முல்லை, திராட்சை எனப் பலவகைப் பயிர்களும் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவலாக விளைந்திருப்பதைக் காண முடிகிறது.

இரண்டடி உயரம் மட்டுமே உள்ள கறிவேப்பிலைச் செடிகள், வயல்காடுகளில் சாரிசாரியாகப் பச்சைப் பசேலென் அணிவகுத்து நிற்கின்றன. இது ஒரு புதுவகைப் பயிராக நமக் குப்பட்டது. 'கம்'மென்று மணம் வீசும் இந்தக் கறிவேப்பிலையின் வயது மூன்றாண்டுகளாம். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இதன் தழையை வெட்டி வியாபாரத்திற்கு அனுப்புவார்களாம்.

இவ்வகைக் கறிவேப்பிலை, ஒரு ஏக்கருக்குச் சராசரி 3 டன் வரை விளையுமாம். கிலோ மூன்று ரூபாய்க்கும் விற்கும் ஆறு ரூபாய்க்கும் விற்கும்" என்றார் ரங்கசாமி என்கிற ஒரு விவசாயி. "சில நேரங்களில் தேவைக்கு மேலேயும் தழைக்கும் அப்படிப்பட்ட நேரங்களில் இதை வெட்டிக் கீழே போடுவதைவிட வேறு வழியில்லை!" என்றும் அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

திம்மம்பாளையம் புதூர் பகுதியில் அதிகம் முல்லை விளைகிறது ஆகவே, அப்பகுதியில் மணக்கும் செண்ட் பாக்டரி நிறுவ, பிற மாநிலத்தார் சிலர் முயன்று வருகிறார்கள்.

3.51 ஏக்கர் பரப்பளவில், 'டிக்' நிதியுதவியோடு 'சிக்மா எஸ்ஸென்ஸ் அண்ட் ஆரோமேடிக்ஸ் பி.லிட்.' என்கிற நிறுவனத்தை அமைத்து மாதிரி 'செண்ட்' வரை தயாரித்து விட்ட ஒருவர் "அரசு அனுமதிக்காகக் காத்திருக்கிறோம்" என்றார், நம்மிடம்.



*With best compliments from*

**☆ Theatre - Ragam 70mm A.C.**

**☆ Theatre - Thanam 35mm A.C.**

**☆ Theatre - Pallavi 35mm A.c.**

**☆ Theatre - Anupallavi 35mm A.C.**

# K G ARTS CENTRE (P) LTD

*(Props. of : K.G. Theatre Complex*

Bungalow Road

Coimbatore - 641 018

Phone : 211213, 211214, 211215

# கோவை மாவட்டம்

✦ கொங்குநாடு, தமிழ்கூறும் நல்லுல கின் தொன்மைப் பெருமை கொண்ட ஒரு பகுதியாக சேர, சோழ, பாண்டிய நாடுகளைப் போன்ற தனித்ததொரு நாடாக மிகமிகப் பண்டைக் காலத்திலிருந்தே இருந் தது என்பதற்குப் பழந்தமிழ் இலக் கியங்கள் பலவும் ஆதாரங்களைத் தந்துள்ளன.

தமிழ்ச் சங்கங்களை நாம் மிகவும் பண்டைக் காலத்திலிருந்தே மொழி வளத்துக்காக இயங்கிடும் பெரு மன்றங்களாகவே கருதுகிறோம். இச் சங்கங்களின் காலத்திற்கு முன்னரே கொங்குநாடு தனித்தியங்கிய தமிழ கப் பகுதி என்பதை எட்டுத்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை மற்றும் தேவார நூல்கள், சிலப்பதி காரம், திருப்புகழ் போன்றனவும், கொங்குமண்டலச் சங்கம், சோழன் பூர்வ பட்டயம், கொங்குதேச ராசாக்கள் போன்ற பண்டைய ஏட்டுச் சுவடிகளும், பேரூர் தல புராணம் போன்ற அண்மைக் காலக் காவியங்களும் உறுதிப்படுத்து கின்றன.

✦ கொங்குநாடு இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே மேலை நாடு களுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது. இதை நிரூபித்திட பண்டைய அயல்நாட்டு நாண யங்கள் தமிழ்நாட்டின் இதரப் பகுதிகளைக் காட்டிலும் அதிகமாகக் கொங்கு நாட்டில்தான் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்பது குறிப் பிடத்தக்கது.

✦ கொங்கு நாட்டுப் பழங்குடிகள், கோங்கர், கோசர், வேளிர், ஓவியர், ஆவியர், இருளர், குறும்பர், கங்கர், காடர், வேடர் எனப்படுவர்.

✦ கொங்கு நாட்டின் நிலவியல் நிலைப் படி அப்பகுதி சுற்றிலும் மலைத் தொடர்கள் கொண்ட ஒரு சமநிலைப் பீடபூமியாகும். வடக்கே தலைமலை, மேற்கே வெள்ளிமலை, தெற்கே வராகமலை, கிழக்கே கொல்லி மலைத் தொடர்களை எல்லையாகக் கொண்டதே கொங்கு என்பதை ஒரு பழைய தமிழ்ப்பாடல் நினைவுப் படுத்துகிறது.

✦ சங்க காலப் பெருமை பெற்ற கொங்கின் குறுநில மன்னர்களான - பேகன், ஆய், அண்டிரன், நன்னன், பழையன், விச்சிக்கோன் ஆகியோர் மூவேந்தர்களுக்கீடான பெருமை பெற்றோர்.

✦ அக்காலக் கொங்கு நாட்டின் உட்பகுதிகள் 24 நாடுகள் ஆகும். அதாவது ஆரை நாடு, நெடுவங்க நாடு, வாரக்க நாடு, பொங்கலூர் நாடு, காங்கய நாடு, குறும்ப நாடு, காஞ்சிக்கோயில் நாடு, வடகரை நாடு, பூந்துரை நாடு, அரய நாடு, தென்கரை நாடு, மண நாடு, வெங்கால நாடு, வையாபுரி நாடு, நல்லுருக்க நாடு, காவடிக்கா நாடு, ஆனைமலை நாடு, பூவாணி நாடு, வாழவந்தி நாடு, ராசிபுர நாடு ஆகிய இருபத்து நான்கே அவை.



**ஆதாரம்:**
**'கொங்குநாட்டு வரலாறு'**
**யா. லட்சுமி நாராயணன் எழுதியது.**

*With Best compliments from*

## RANGAMMA STEELS AND MALLEABLES

**8-D, Post Office Road**
**Krishnasamy Nagar,**
**COIMBATORE 641 045.**

Manufacturers **Of Quality Autoparts.**



With Best Compliments From

## M/s.Kitply Industries Ltd.

150, Sydenhams Road
Phone : 586599, 585153
Fax : 91-44-588708 Cable-Kitply
Telex : 041-6843 KITIM

'கன்னித் தமிழ்ச் சாலையோரம்' பாடலால் நம் மனதையெல்லாம் கவர்ந்திழுத்த உடுமலை நாராயணகவி பிறந்த அந்த வட்டத்தில் நம் பார்வை படர்ந்தது. தேவையான விவரங்களை நாம் பெறப் பெரிதும் உதவினார் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு வி. தட்சணாமூர்த்தி அவர்கள். பேச்சை நிறுத்தி அவர் மூச்சு விட்டுக்கொள்ளும் போது, நூலெடுத்துக் கொடுத்தார் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு என்.எம். பிரசாத் அவர்கள். இருவரும் தெரிவித்த செய்திகளின் சுருக்கமே இந்தக் கட்டுரை.

# உள்ளங்கவரும் உடுமலைப்பேட்டை

**பு**கழ்பெற்ற ஈச்சநாரி விநாயகர் கோயிலொன்று - 122 சதுர மைல் பரப்புள்ள இந்த வட்டாரத்திற்கு அனைவரையும் அருள் பெற அழைக்கிறது. கோவை-பாலக்காடு முக்கியச் சாலையில் அது அமைந்திருக்கிறது.

## அறிவொளி இயக்கம்

மாவட்டத்திலேயே அறிவொளி இயக்கத்தைப் பொறுத்த வரையில் முழு நிறைவு பெற்றிருக்கிறது, பள்ளபாளையம் இந்திரா நகர். அதுமட்டுமல்ல, இந்தக் குடியிருப்பே மிகச் சிறந்த ஆதிதிராவிடர் குடியிருப்புக்கான முதல் பரிசும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பெற்றிருக்கிறது.

பரிசு என்ன தெரியுமா? 20.8.1993-இல் கோவைக்கு வருகை தந்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெஜெயலலிதா அவர்கள், இக்குடியிருப்பிற்காக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியொன்றை வழங்கிப் பாராட்டியிருக்கிறார்.

அப்பகுதியில் 96 தொகுப்பு வீடுகள் சென்ற ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஒரு காலத்தில் இந்த வட்டாரத்தில் மிகச் சிறந்த விடுதலைப் போராட்ட வீரராகத் திகழ்ந்த சர்தார் வேலப்பநாயக்கருக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலேயே சிலையெழுப்பிச் சிறப்பித்திருக்கிறார்கள்.





சுண்ணாம்புக் காளவாய்ப் பணி

## சுற்றுலாத் தலம்

*1991* கணக்கெடுப்பின்படி, உடுமலைப்பேட்டை வட்டத்தின் மக்கட்தொகை ஒரு இலட்சத்து *31* ஆயிரத்து *335* ஆகும். இந்த வட்டத்தில் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக விரிவாகி வருகிறது, 26 கிலோமீட்டர் தொலைவில் உள்ள திருமூர்த்தி மலையின் மடிப் பகுதி. நாகம் படமெடுத்து நிழல் அளிக்கும் அமைப்பில் குளம், உள்ளம் கவரும் உல்லாசப் பூங்கா, அதற்குச் சற்றுத் தள்ளி, பார்க்கவரும் சுற்றுலாப் பயணிகளின் மனதைச் சுண்டியிழுக்கும் படகுத் துறை என்றெல்லாம அமர்க்களப் படுத்தியிருக்கிறார்கள். படகில் எத்தனை ரகம் உண்டோ அத்தனையும் அங்குள்ளன.

நாலரை இலட்சம் ரூபாய் பொது நிதி மூலமும், ஐந்து இலட்சம் ரூபாய் சிறுசேமிப்பு ஊக்குவிப்பு நிதி மூலமும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆதரவோடு இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

அங்குள்ள மிகப் பெரிய நீர்த்தேக்கத்திற்குப் பரம்பிக் குளம் (ஆளியாறு) தண்ணீர் வரத்து, காண்டூல் கால்வாய் வழியே இருக்கிறது.

## அரசின் ஆக்கப் பணிகள்

மடத்துக்குளம், கீழ்மங்கலம், உடுமலைப்பேட்டை வட்டாரத்து மண்ணில் நெல் மட்டுமல்ல கரும்பு, மக்காச்சோளம், கொண்டைக் கடலை, பருத்தி ஆகியவைகளும் வளமுற விளைகின்றன.

இப்பகுதியில் நூல் மில் மட்டுமே 56 இயங்கி வருகிறது.

"இந்த மூன்றாண்டுகளில் மட்டும் முப்பது கிலோ மீட்டர் நீளத்திற்குக் கப்பிரோடு போட்டிருக்கிறோம். பத்துக் கிலோ மீட்டர் தூரத்திற்கு தார் ரோடு போட்டிருக்கிறோம். 72 இலட்சம் ரூபாய் பொது நிதியிலிருந்து, குடிநீரைப் பொறுத்த வரை இப்பகுதியைத் தட்டுப்பாடில்லாத தன்னிறைவுப் பெற்ற பகுதியாக்கும் வகையில் 27 கம்பிரஷர்கள் அமைத்திருக்கிறோம். ஒரு இலட்சத்து எழுபதாயிரம் ரூபாயில் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டி முடித்திருக்கிறோம். அறிவொளி இயக்கத்தைப் பொறுத்து அறுபது சதவிகிதம் பேருக்குக் கல்விக் கண் திறந்தாயிற்று. இரண்டாயிரம் ஆதிதிராவிடர்களை எழுதப் படிக்கச் செய்துவிட்டோம். மற்றவர்களைத் தான் இந்த வகையில் லேசில் எங்களால் இழுக்க முடியவில்லை" என்றெல்லாம் வழிநெடுகச் சொல்லிக்கொண்டே வந்தார் வட்டார வளர்ச்சி அலுவலர்.

போகிற வழியில், உடுமலைப் பேட்டைக்கு வரும் குடிநீரைச் சுத்திகரிக்கும் நிலையம் சுறுசுறுப்பாக இயங்குவதை நம்மால் காணமுடிந்தது.

## அமணலிங்கேசுவரர்

திருமூர்த்தி மலையடிவாரத்தில் உள்ள அருள்மிகு அமணலிங்கேசுவரர் கோயில், புராணப்

### ஊரும் பேரும்

'கோவன்' என்ற இருளர் தலைவனால் உண்டான ஊராதலால் 'கோவன்புத்தூர்' என்று பெயர் ஏற்பட்டதாகும்.

**-'கொங்குநாட்டு வரலாறு'**
**சாந்தலிங்க அடிகளார் கல்லூரி வெளியீடு.**


பதப்படுத்தப்பட்ட தென்னை நார்

புகழ் மிக்கதாகும். ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் பஞ்சலிங்கம் உள்ள அக் கோயிலைச் சில தமிழ்த் திரைப் படங்களில் பார்த்த நினைவு நமக்கு வந்தது.

அத்திரி முனிவர், அனுசூயா தேவியார், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரைக் கதாபாத்தி ரங்களாக்கி கர்ண பரம்பரைக் கதையொன்றும் நமக்குச் சொல லப்பட்டது. "இந்தக் கோயிலில் துலுக்கஞ் செவ்வந்தி, கனகாம் பரம் பூக்கள் - மாலைகள் ஏற் கப்படமாட்டாது" என்று அறி விக்கப்பட்டுள்ளது. அங்கே படர்ந்துள்ள பச்சைப் பசே லென்ற காட்டுப் பகுதியில் யானைகள், மான்கள், வரை யாடுகள், முயல்கள் எல்லாம் உண்டாம்! இந்திரா காந்தி வன உயிரினக் காப்பகம் என்ற இப் பகுதி, தமிழகத்திலேயே மிகப் பெரியதென அங்குள்ள விளம் பரப் பலகை தெரிவிக்கிறது.

## கீற்றுமுடைதல்

தளி நகரியத்தைச் சேர்ந்த திருமூர்த்தி நகர் பங்களாமேடு பகுதியில் மகளிர் குழந்தைகள் மேம் பாட்டுத் திட்டத்தின் (டோக்ரா) கீழ் கீற்றுமுடையும் பணி நடந்து வருகிறது. பத்துப் பெண்கள் ஓய்வில்லாமல் வேலை பார்க் கிறார்கள்.

"நூறு தென்னமட்டை அறு வது ரூபாய்க்கு வாங்கறமுங்க. நாள்பூரா அதை முடைஞ்சம்னா, 25 கீத்து முப்பத்தி ரெண்டரை ரூவா, நூறு கீத்து நூத்தி இருவது ரூவான்னுவிப்பம். அப்பதான்

ஸ்தாபிதம் 1958 போன் 296

**காரமடை கூட்டுறவு விவசாய வங்கி லிமிடெட் No.K.1642**

**காரமடை - 641 104, கோவை மாவட்டம்**

**நமது வங்கி கீழ்க்கண்ட அரிய சேவைகளைச் செய்து வருகிறது.**

**நகைக்கடன் பவுனுக்கு ரூ.2400. அதிகப்பட்சம் ரூ.40,000**

டெபாசிட்

**இதர வணிக வங்கிகளைவிட 1.5 சதவிகித கூடுதல் வட்டி. டெபாசிட்களுக்குத் தமிழக அரசின் உத்தரவாதம்.**

**மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டு வட்டி. இல்லத்தரசிகளுக்கு ஏற்ற ரெகரிங் டெபாசிட். வருமான வரி பிடித்தம் இல்லை.**

**பயிர்க்கடன், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் நியாய விலையில் வழங்கப்படுகிறது. கனிவான எங்கள் சேவை இனிமையான எங்கள் அணுகுமுறை, உங்களுக்குச் சேவை செய்ய எங்களுக்கு வாய்ப்பு அளிக்கவும்!**

**ஜே.வி. சாம் தருமராஜ் M.A., DBA**

தனி அலுவலர் மற்றும் பணியாளர்கள்

வண்டி வாடகை, ஆள்கூலி யெல்லாம் கட்டுப்படியாவும், வியாவாரம் நல்லாருக்கு, அதால தானுங்க, அரசாங்கம் குடுத்த ஆறாயிரம் ரூவா கடனெ காலா காலத்துல பைசல் பண்ணினம்" என்றார் அவ்வமைப்பின் செய லாளராக உள்ள திருமதி மு. ஜோதியம்மாள்.

## சுண்ணாம்புக் காளவாய்

அதேபோல் பெண்கள் மூலம் ஆலாம்பாளையத்தில் செயல் பட்டுவரும் சுண்ணாம்புக் காள வாய்களைப் போய்ப் பார்த் தோம்.

வெள்ளைவெளேர் என்ற புகை மண்டலம் விண்ணுக்கு ஏறிக் கொண்டிருந்தது. அவ் வமைப்பின் செயலாளரான திருமதி தத்தம்பாளிடம் பேசி னோம்.

"இந்த வேலை கஷ்டமாயில்லிங்களா?"

"கஷ்டத்தைப் பார்த்தா வயிறு காஞ்சுப்பூடும்களே!"

"மழைக்காலத்துல என்ன செய்யறீங்க?"

"அப்பத்தானுங்க யாவாரம் இல்லாமெ கஷ்டப்படுவம்!"

"மத்த காலத்துல நீங்க சுடுற சுண்ணாம்பெல்லாம்"...

"நல்லாவே விக்குமுங்க. ஒரு வள்ளத்துக்கு (சுமார் 4 லிட்டர்) அஞ்சு ரூவாய்ங்க. ஒரு கூடை (4 வள்ளம்) இருவது ரூவாய்ங்க. பாக்கிசாக்கியில்லாமெ வாங்குன கடனெ பாங்குல கட்டீற்றம். எங்கள்ள இன்னும் கொஞ்சம் பேருக்கும் அரசாங்கம் கடன் குடுத்து உதவினா நல்லாருக் குமுங்க, கலெக்டரையாகிட்ட சொல்லுங்களேன்".

"கட்டாயம் சொல்றம்" என்ற படி நாம் விடை பெற்றோம்.

## மசாலா பொடி

பள்ளபாளையம் பெண்கள் அதேபோல மசாலா பொடி, ஊறுகாய் செய்து 'பாக்கெட்' பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

"இவங்கள்ளலாம் அறிவொளி திட்டத்தின் மூலம் படித்த வர்கள்" என்றார் வட்டார வளர்ச்சி அதிகாரி.

ஒரு நாளைக்கு இவர்கள் நூற்றுக்கு மேலான மசாலா, ஊறுகாய் பாக்கெட்டுகள் தயா ரிக்கிறார்களாம். 100 கிராம் பாக்கெட் 5 ரூபாய், 50 கிராம் இரண்டரை ரூபாய்.

"விற்பது எப்படி?"

"பள்ளிக் கூடங்கள்ல... சத் துணவு மையங்கள்லயே வாங் கிக்கிறாங்க. வெளியாரும் வாங்கிப் போறது உண்டு" என்றார் இவ் வமைப்பின் செயலாளர்- ஊர் நல அலுவலர் பி. தனம்மாள்.

"இவங்க வேலைபார்க்கிறதுக் குத் தனிக் கட்டடம் எதுவும் இதுவரை இல்லை. அரசாங்கம் நாப்பதாயிரம் ரூபாய் ஒதுக்கி யிருக்கங்க, கூடிய சீக்கிரமே தனியா கட்டீருவம்" என்றார் வட்டார வளர்ச்சி அலுவலர்.

இப்போது அவர்கள் அவற் றைத் தயாரிக்கும் இடம் சமூக நலக்கூடமாம்.

## கொங்கு

### சங்க இலக்கியத்தில்

கொங்கனென விள்ளுங் கோதைநனி யாண்டதொரு
கொங்குவள நாடு.

- கச்சியப்ப முனிவரின் பேரூர் புராணம்

.................................................. இவளோ
கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை..........................

- சிலப்பதிகாரம்

கொங்கரோடு குடபுலத்து மன்னர்

- பெரியபுராணம்

ஆங்கெழு கொங்கர் நாடகப் படுத்த வேல்கெழு தானை
வெருவரு தோன்றல்.

- பதிற்றுப்பத்து

கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்தே

- புறநானூறு


கொங்கர் ஓட்டி நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்

- அகநானூறு.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்

## செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்




## சிறப்பு அம்சங்கள்

- 5 ½ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

**ஆணையர்,** சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

**மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,** சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

**மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,**

**வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.**

**இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,**

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

DIRP/DIS/95

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.



*With best compliments from*

**■ Theatre Nataraj**

**■ Diamond Theatre**

**■ Gajalakshmi Theatre**

**■ Universal Theatre**

**Tiruppur**

# "ஈடு இணையற்ற கலைச்செல்வம்!"

## செவாலியே சிவாஜிக்கு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி புகழாரம்



உலகில் கலைச் சேவையில் சிறந்த சாதனை புரிந்தவர்களுக்காக பிரான்சு நாடு வழங்கும் உயர்ந்த விருதான செவாலியே விருது நடிகர் திலகம் திரு.சிவாஜிகணேசனுக்கு வழங்கப்பட்டது. இவ்விழாவை, திரைப்பட உலகத்தினர் மிகப் பிரம் மாண்டமான முறையில் 22.4.95 அன்று, சென்னை - சேப்பாக்கத்திலுள்ள எம்.ஏ. சிதம்பரம் விளையாட்டரங்கில் சிறப்பாக நடத்தினர். இவ்விழாவின், நிகழ்ச்சிகளை நடிகையும், இயக்குனருமான திருமதி சுகாசினி தொகுத்து வழங்கினார். முதலில், இயக்குநர் திரு.கே.பாலசந்தர் வரவேற்றுப் பேசினார்.

பின்பு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கும் பொன்னாடை அணிவிக் கப்பட்டது. அடுத்து, பிரான்சு நாட்டுத் தூதர் பிலிப் பெடிட் பேசுகையில், இவ் விருது கொடுப்பதில் பிரான்சு நாடு பெருமை அடைகிறது என்று கூறினார். அதன் பிறகு பிரான்சு தூதர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னிலையில், நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு செவாலியே விருதுக்கான பதக்கத்தை அணிவித்தார். அப்போது பொதுமக்களின் மகிழ்ச்சி ஆர வாரம் விண்ணைத் தொட்டது. இச் சமயத்தில் இசையமைப்பாளர் திரு.எம்.எஸ். விஸ்வநாதன் சிவாஜியைப் பற்றிப் புகழ்ந்து பாடி அனைவரையும் பரவசமடையச் செய்தார்.

'பிலிம் நியூஸ்' ஆனந்தன் தயாரித்த சிறப்பு மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, முதல் பிரதியைப் பழம்பெரும் இயக்குநர் கிருஷ்ணன் (பஞ்சு) பெற்றுக் கொண்டார்.

விழாவில் வாழ்த்துரையாக இந்தி நடிகர் திரு.தேவ் ஆனந்த், தெலுங்கு நடிகர்கள் திரு. நாகேஸ்வரராவ், திரு. சிரஞ்சீவி, மலையாள நடிகர்கள் திரு.மது, திரு.மம்முட்டி, நடிகர்கள் திருவாளர்கள் - கமல்ஹாசன், விஜயகாந்த், கார்த்திக், இயக்குநர்கள் திருவாளர்கள் பாரதிராஜா, பி.வாசு, ஆர்.வி. உதயகுமார், இளையராஜா, பிரான்சு தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த பாரிஸ் ஜமால், திருமதி.சரோஜா தேவி, திருமதி



மனோரமா, செல்வி ஸ்ரீதேவி, போன்ற முன்னணி நடிகர், நடிகைகள் வாழ்த்துரைத்தனர். பின்பு, திரை உலகத்தினர் வெள்ளியால் செய்த வீர சிவாஜியை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிவாஜி கணேசனுக்கு வழங்கினார்கள்.

பின்பு, செவாலியே நடிகர் திலகம் சிவாஜி கணேசனைப் பாராட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில், திரைப்பட உலகத்தினரின் கோரிக்கையை ஏற்று, தியாகராய நகரில் உள்ள போக் சாலை பெயர் மாற்றம் செய்து செவாலியே சிவாஜி கணேசன் சாலை என்று அழைக்கப்படும். இதற்கான ஆணைகள் வெகுவிரைவில் வழங்கப்படும் என்றும், செவாலியே சிவாஜி கணேசன் பெயரில் மாநிலத் திரைப்பட விருது ஒன்று நிறுவப்படும் என்றும் அறிவித்தவுடன் திரை உலகத்தினரும், பொதுமக்களும் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தனர். அடுத்து, அனைவரின் பாராட்டுக்கும் நன்றி தெரிவித்து நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உரையாற்றினார். நன்றி உரையாக நடிகர் திரு.ரஜினி காந்த் பேசினார்.

முடிவில், பிரான்சு நாட்டின் தேசிய கீதமும், இந்தியத் தேசிய கீதமும் ஒலிக்கப்பட்டு விழா இனிதே முடிந்தது. இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், திரை உலகத்தினரும், தயாரிப்பாளர்களுமாகப் பலரும் கலந்து கொண்டனர். விழாவின் தொடக்கத்தில் இசையமைப்பாளர் கங்கை அமரன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த வண்ணமிகு விழா ஏற்பாடுகளை, இந்தியத் திரைப்பட சம்மேளனத் தலைவர் திரு. ஏவி.எம். சரவணன், தமிழ்ப்பட அதிபர்கள் சங்கத் தலைவர் கே.ஆர்.ஜி., ஆகியோர் செய்து இருந்தனர்.

ஆசியாக் கண்டத்திலேயே இதுவரை யாரும் பெற்றிராத இவ்விருது, தமிழ்த் திரை உலகின் மூத்த கலைமகனுக்குக் கிடைத்ததில், நாமும் பெருமை கொள்வோம்.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில், 22.4.95 அன்று, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு சொவாலியே விருது வழங்கும் விழாவுக்குத் தலைமை வகித்து தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பேசியதாவது:

"அரை நூற்றாண்டுக்கு மேலாகக் கலைத் துறையின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட, கலைத்தாயின் மூத்த மகனுக்கு, கலைக்குடும்பம் ஒன்று சேர்ந்து எடுக்கின்ற பாராட்டு விழாவைத் தலைமையேற்று நடத்திவைப்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன். என்னை வளர்த்த தாய்வீடான, கலைக் குடும்பத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள் அனைவரையும் ஒருங்கே இங்கே காண்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்த் திரைப்பட உலகிற்கு மட்டுமின்றி, இந்தியத் திரைப்பட உலகிற்கே, இன்று மகிழ்ச்சிகரமான ஒரு பொன்னாள். தமிழ்த் தாயின் தவப்புதல்வன், டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு, பிரான்ஸ் நாடு வழங்

கியுள்ள ‘ஷெவாலியே’ விருது, தமிழ்த் திரை உலகிற்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கு மட்டுமல்ல; இந்தியாவிற்கே பெருமை சேர்த்துள்ளது.

**மாபெரும் அங்கீகாரம்**

இந்த விருது, இந்தியத் திரைப்படத் துறைக்குக் கிடைக்கப் பெற்ற, ஒரு மாபெரும் அங்கீகாரம் என்றால், அது மிகையாகாது.

இந்தப் பாராட்டு விழாக் குழுவின் தலைவர் ஏவி.எம். சரவணன் அவர்கள், இரண்டு மாதங்களுக்கு முன்பு, இந்த விழாவிற்கு நான் தலைமையேற்க வேண்டும் என்று என்னிடம் கேட்டுக்கொண்டார். அவரது அழைப்பினை மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டதோடு, நடிகர் திலகத்தின் பெயருக்கும், புகழுக்கும் பொருத்தமான வகையில் இந்த விழாவினை மிகச் சிறப்பாக நடத்தவேண்டுமென்ற எனது பேரவாவினையும் தெரிவித்தேன்.


இந்த விழா எத்தகையதொரு எழுச்சியோடு கோலாகலமாக நடைபெற வேண்டும் என்று நான் விரும்பினேனோ, அந்த எண்ணம் ஈடேறும் வண்ணம், இந்த விழா இன்று, வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றது.

மேலை நாடுகளில், குறிப்பாக, ஐரோப்பிய நாடுகளில், கலைகளிலும், கலாச்சாரத்திலும், தலை சிறந்து விளங்கும் பிரான்ஸ் நாடு, நடிப்பில் இமயமாக உயர்ந்து விளங்கும் நடிகர் திலகம் அவர்களுக்கு இந்த விருதினை வழங்கி, இந்தியக் கலை உலகத்தைக் கௌரவப் படுத்தியுள்ளது.

**ஒளிவீசும் வைரக்கல்**

டாக்டர் சிவாஜி கணேசன் அவர்கள், நீண்ட நெடிய கலை உலகப் பயணத்தில் எத்தனையோ விருதுகளையும், பட்டங்களையும் பெற்றிருந்தாலும், இன்று அவர் பெற்றுள்ள ‘ஷெவாலியே’ விருது, அவரது சாதனை மணிமகுடத்தில் பதிக்கப்பட்ட மிகப் பிரகாசமான வைரக்கல் என்பதில் ஐயமில்லை.

நடிப்புக் கலையின் அத்தனைப் பரிமாணங்களையும், தனது ஒப்புயர்வற்ற நடிப்பாற்றலால், வெள்ளித்திரையில் கொண்டு வந்தவர், வெற்றி நாயகன் டாக்டர் சிவாஜி



‘செவாலியே விருது’

கணேசன் அவர்கள். அவர் ஏற்று நடிக்காத பாத்திரங்களே இல்லை. எல்லாப் பாத்திரங்களிலும் அவர் நடித்துவிட்டார் என்றே சொல்லலாம்.

அவர் நடிப்புத் துறையின் அட்சயப் பாத்திரம், கலை உலகின் பீஷ்மர்.

வரலாற்று நாயகர்கள் ஆனாலும், சமகாலத்துக் கதாபாத்திரங்கள் ஆனாலும், அத்தகைய உயிர்த் துடிப்புள்ள கதாபாத்திரங்களாகவே, மாறி விடுகின்ற திறமை படைத்தவர் ஒருவர் உண்டென்றால், அது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களாகத்தான் இருக்க முடியும்.

கர்ணன், வீரபாண்டிய கட்டபொம்மன், ராஜராஜசோழன், கப்பலோட்டிய தமிழன், போன்ற புராண, சரித்திர காலத்துப் பாத்திரங்களை, நாம் கற்பனை செய்து பார்க்கும்போது, நம் மனக் கண் முன் தோன்றுவது அப்பாத்திரங்களில் தோன்றி நடித்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் உருவம்தான்.

உலக அளவில் புகழ் பெற்ற நடிகர்களான மார்லன் பிராண்டோ, ரிச்சர்டு பர்டன், லாரன்ஸ் ஆலிவர் போன்றவர்களின்

வரிசையில் வைத்துப் போற்றத்தக்க ஒரு தலைசிறந்த நடிகர் நமது நடிகர் திலகம் என்பதைச் சுட்டிக் காட்டுவதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

**பிரான்ஸ் முந்திக் கொண்டது!**

தமிழகத்திற்கு மட்டுமின்றி, இந்தியாவிற்கே கிடைத்த ஓர் அரிய கலைப் பொக்கிஷம் அவர். இன்றைய் புதிய தலைமுறை நடிக, நடிகையர்கள் நடிப்பைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நடித்த படங்களைப் பார்த்தாலே போதும், ஒரு பல்கலைக் கழகத்தில் பயின்றது போன்ற ஒரு உணர்வு ஏற்படும்.

இந்த மகிழ்ச்சிகரமான நேரத்தில் ஒரு விஷயம் மட்டும் என் மனதை நெருடுவதை நான் உணர்கிறேன்.

பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள பிரான்ஸ் நாட்டினர், டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின் கலைத் திறமைக்கு, அங்கீகாரம் கொடுத்துள்ள சூழ்நிலையில், இந்திய அரசாங்கம் அவரது திறமையை, அங்கீகரிக்கும் வண்ணம் சிறந்த நடிகருக்கான "பாரத்" விருதினைக் கூட, இது வரை அவருக்கு வழங்கவில்லையே என்ற ஆதங்கம் என் மனதில் எழுகின்றது. மத்திய அரசு "பாரத்" விருதினை நடிகர் திலகத்திற்கு எப்போதோ வழங்கியிருக்க வேண்டும்.

டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு 'ஷெவாலியே' விருதை வழங்கி, பிரான்ஸ் நாடு முந்திக் கொண்டது. இனியாவது நமது மத்திய அரசு டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்குத் தகுந்த விருதினைக் கொடுத்துக் கௌரவப்படுத்த வேண்டுமென்று, கலையுலகத்தின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன்.

**'பால்கே' விருது வழங்குக!**

இந்தியத் திரையுலகில் Life Time Achievemement-க்காக வழங்கப்படும் Dada Saheb Phalke Award-ஐ, டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று, நான் மத்திய அரசை, இந்த விழாவின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

Better Late than Never என்பார்கள். இனியாவது மத்திய அரசு, தனது கடமையை உணர்ந்து, Dada Saheb Phalke Award-ஐ, டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு வழங்க வேண்டு மென்று, மீண்டும் ஒருமுறை வற்புறுத்த விரும்புகிறேன்.

நான் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுடன், கலைத்துறையில் பணியாற்றிய அனுபவத்தை நினைவு கூர்வதில், மகிழ்ச்சியடைகிறேன். அவர் ஒரு multifaceted versatile genius, கடுமையான உழைப்பாளி, Strict disciplinarian, Punctuality-க்கு அவர் ஒரு இலக்கணம்.

இதய தெய்வம் புரட்சித்தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மட்டும், இன்று நம்மிடையே இருந்திருந்தால், எத்தகைய மகிழ்ச்சியையும், ஆனந்தந்தையும், அடைந்து இருப்பார் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

இந்த விழாவிற்கு, அவரே தலைமையேற்று நடத்தியிருப்பார். ஏனென்றால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், அவர்களைத் தனது உடன்பிறவாத தம்பியாகத் தனது வாழ்நாள் முழுவதும் கருதி வந்தார்.

நடிகர் திலகம் அவர்களும், புரட்சித்தலைவர் அவர்களை, "அண்ணா" என்றுதான் எப்போதும் அழைப்பார்.

கலையுலகில் பிரவேசித்த ஆரம்ப காலத்தில், இருவரும். ஒரே தட்டில் உணவு உட்கொண்ட உடன்பிறவாச் சகோதரர்களாக வாழ்ந்தார்கள் என்பதைப் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களே, பலமுறை என்னிடம் கூறி மகிழ்ந்திருக்கிறார்.

**சிவாஜி கணேசன் சாலை!**

சற்று முன் பேசிய சகோதரர் சிவகுமார் அவர்கள், போக் சாலைக்கு டாக்டர் சிவாஜி



# வெள்ளிமலை

மலைகள் பல அரண் அமைத்து விளங்கும் கோயம் புத்தூர் மாவட்டத்திலேயே மிக உயர்ந்த சிகரம் பெருமாமுடி என்பதாகும். இது மருதமலைக் குத் தென்மேற்கே உள்ளது. இதில் அமைந்துள்ள சிவன் கோயிலொன்று பழம் பெருமை மிக்கது.

இதேபோலக் கோயம்புத் தூருக்குக் கிழக்கே ஏறத்தாழ பதினைந்து கல் தொலைவில் உள்ள வெள்ளிங்கிரி என்ற மலையும் இந்த மாவட்டத்திற் குப் புகழ் சேர்ப்பதாக உள்ளது. இதன் அடிவாரத்திலேதான் பிரசித்திபெற்ற பூண்டி சின் மயானந்தா குருகுலம் அமைந் திருக்கிறது.

சுமார் ஏழாயிரம் அடி உய ரம் கொண்டதான வெள்ளிங் கிரி, மலைமேல் உள்ள சிவன்கோயிலுக்கு இந்தக் கோடையில்தான் பக்தர்கள் கூட்டம் படையெடுக்கும். அப் படிச் செல்வோர், கையில் ஒவ்வொரு மூங்கில் கழி கொண்டுபோவது வழக்கமா யிருக்கிறது. கரடுமுரடான மலை முகடுகள், கொடிய வனவிலங்குகள் ஆகியவற்றுக் காக இந்த வழக்கம் ஏற்பட்டிருக் கக்கூடும் என்று தெரிகிறது.

வழியில், பலகார மேடை என்றோர் சமமான பெருஞ்-சிகரம் இருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் இங்கேதான் ஓய் வெடுத்துக்கொள்ளுவார்கள்.

வெள்ளியங்கிரி மலை உச்சியில் மூன்று நெடுந்தூண் போன்ற பாறைகள் அருகருகே உயர்ந்து நிற்கும்; அதன் மேல் கூறைபோல் இன்னொரு பாறை திகழும். அவற்றினி டையே இயற்கையிலேயே ஆலயம் போன்ற அமைப்பில் சிவன் கோயில் உள்ளது.

மேகங்கள் உலா வருதலால், எப்போதும் சில்லென்ற குளிர் இருக்கும் பகுதி இது. பாறைகள் வெள்ளை வெளேர் என்றிருப் பதால் வெள்ளயங்கிரி என்ற பெயர் வந்திருக்கலாம் போலும்.

இம் மலையின் மீதுள்ள நீருற்றிலிருந்து சிறுவாணிக்கும் தண்ணீர் வருகிறது.

நடந்துதான் மேலே போய் வர வேண்டும்;

இதன் நினைவாகவே கோவை மாவட்டத்தில் பலரும் - வெள்ளிங்கிரி, வெள்ளியங்கிரி, வெள்ளிமலை என்றெல்லாம் பெயர் வைத்திருப்பதைக் காண லாம்.

---

கணேசன் அவர்கள் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை என் முன் வைத்தார்கள். அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, நடிகர் திலகம் அவர்களுக்கு 'ஷெவாலியே' விருது வழங்கப்பட்டதை நினைவுகூரும் வண்ணம், போக் சாலை பெயர் மாற்றம் செய்யப்பட்டு 'ஷெவாலியே சிவாஜி கணேசன் சாலை' என்று அழைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான ஆணைகள் வெகு விரைவில் வழங்கப்படும்.


**சிவாஜி விருது !**

தென்னிந்தியத் தொழிலாளர்கள் சம்மேள னத்தின் தலைவர் மோகன் காந்திராமன் அவர்கள், நடிகர் திலகம் அவர்களின் பெயரில் மாநிலத் திரைப்பட விருது ஒன்றினை ஏற் படுத்த வேண்டும் என்ற கோரிக்கையைத் தெரிவித்தார். அவரது கோரிக்கையை இந்த விழா மேடையிலே ஏற்றுக் கொண்டு 'ஷெவாலியே' சிவாஜி கணேசன் அவர்கள் பெயரில் மாநிலத் திரைப்பட விருது State Film Award ஒன்று நிறுவப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விருது 'சிவாஜி விருது' என்ற பெயரில் கலைத்துறைக்கு அருந்தொண்டு ஆற்றியவர் களுக்கு வழங்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடிகர் திலகம் அவர்கள் நல்ல ஆரோக் கியத்தோடு, இன்னும் பல ஆண்டுக் காலம் நீடூழி வாழ்ந்து, கலை உலகத்திற்குத் தொடர்ந்து சேவைபுரிந்து தமிழக மக்களை மகிழ்விக்க வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈடுஇணையற்ற கலைச் செல்வமான, ஷெவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து தொடர்ந்து கலைச் சேவையை ஆற்ற வேண்டும்."

**நிகழ்ச்சித் தொகுப்பு: அ. மதிமாறன்.**




# ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம்

நெல்வயல்களில் நெற்பயிர் மட்டும் பயிர் செய்வதோடு, நின்றுவிடாமல் பலவகையான பயறு வகைகளையும், சாகுபடி செய்து நல்ல மகசூல் பெறலாம். இதன்கூடவே வெவ்வேறான உணவுப் பழக்கங்களைக் கொண்ட மீன்வகைகளையும் நீர்க்குட்டைகள் அமைத்து வளர்க்கலாம். குட்டையின் மேல் கோழிக் கூடுகள் அமைத்துக் கோழிகளும் வளர்க்க முடியும். இந்த ஒருங்கிணைந்த பண்ணைத்திட்டத்தின் மூலம் ஒரே நேரத்தில் கோழியும், மீனும் வளர்ப்பதால் நல்ல வருமானமும் கிடைக்கும். அதாவது ஆண்டுக்கு ரூ.5000 வரை வருவாய் பெறலாம், என்று கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சோதனைமுறையில் செய்து காட்டியுள்ளது.

பத்து செண்ட் பரப்புள்ள நீர்க்குட்டையில் 400 மீன்குஞ்சுகளை இட்டு, குட்டையின் மேல்பரப்பில் 20 அடுக்குகள் கொண்ட கோழிப்பண்ணை அமைக்கப்பட்டது. பல இனக்கோழிகளும் இதில் வளர்க்கப்பட்டன.

மீனினத்தைப் பொருத்தவரை, தோப்பாக் கெண்டை, வெள்ளிக்கெண்டை மற்றும் புல்லுண்ணும் கெண்டை போன்றவை நீரின் மேல்மட்டத்திலும், மிரிகால் கெண்டை, சாதாக் கெண்டை, கல்பாக் கெண்டை மற்றும் காவேரிக் கெண்டை போன்றவை நீரின் அடிமட்டத்திலும், ரோகுக்கெண்டை போன்றவை நீரின் இடைமட்டத்திலும் வாழக்கூடியவை. எனவே இந்த வகைக் கெண்டைகளை வளர்த்தால் பலன் மிகுதியாகக் கிடைக்கும்.


சராசரியாகத் தினமும் 2 கிலோ அளவுக்குக் கிடைக்கும் கோழிகளின் எச்சம், மீன்களுக்கு நேரடியாக உணவாகவும், நீர்க் குட்டையின் அடியில் படிந்து நல்ல அடியுரமாகவும் பயன் படுகிறது.

இந்தப் புதியவகை ஒருங்கிணைந்த பண்ணைத்திட்டத்தை விவசாயிகள் கையாளுவதன் மூலம், தனிப்பட்ட முறையில் நல்ல வருமானம் பெறுவதோடு நாட்டின் பொருளாதாரத்திற்கும் நல்ல முறையில் உதவலாம்.



★ எப்படிப்பட்ட கலையானாலும் சரி ஒழுக்கக் குறைவுக்கும் மூடநம்பிக்கைக்கும் சிறிதும் பயன்படக் கூடாததாக இருக்க வேண்டும்.

தந்தை பெரியார்



# Raw material at our back door.

# Global markets at our threshold.

## Possible only if... you're always ahead of time.

Manali, Madras. A petrochemical landmark on the map of India. It's going to become even more renowned with TPL's futuristic blueprint. For a state-of-the-art EPICHLOROHYDRIN plant. A plant that's twice blessed. One, with rich raw material resources from the neighbouring plants of Madras Refineries Ltd and SPIC Heavy Chemicals Division. And two, with a market that's virtually global. Needless to say, EPICHLOROHYDRIN from the 10,000 MT capacity plant will be in demand from Day One, and will meet the needs of the entire Indian industry and more. It's an important ingredient in epoxy resins which find application in many consumer goods and industries. And also in pesticides and pharmaceuticals. Substituting imports completely while enhancing exports considerably. It will be our sequel to the earlier success story: Linear Alkyl Benzene - SUPERLAB. **TPL.** This is really where we're poised. On the shores where India meets the world.

**TAMILNADU PETROPRODUCTS LIMITED**

6, Nungambakkam High Road, Madras – 600 034 Tel: 8254545, 8252568/69 Fax: 044-8255798

***AHEAD OF ITS TIME***

HTA.7161.95

*With best compliments from*

- **Sangeetha Theatre**
- **Ramlakshman Theatre**
- **Usha Theatre**
- **Pushpa Talkies**

**Tirupur**

கொங்கு நாட்டில் - பேரூர் அருள்மிகு ஈசுவரன் திருக்கோயில், பொள்ளாச்சிக்கருகே உள்ள அருள்மிகு மாசானத்தம்மன் திருக்கோயில், அருள்மிகு ஈச்சனாரி விநாயகர் திருக்கோயில், எனப் பல திருக்கோயில்கள் பரவலாகப் புகழோடு பொலிவுற்றிருக்கின்றன.

தமிழ்நாடு அரசு அறநிலையத் துறையானது, அத்தனைத் திருக்கோயில்களும் அணிபெறச் செய்வதில் முனைப்போடுள்ளது; இதோ, மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஒன்றுபற்றி மட்டும் இங்கே பாருங்களேன்!

பழமையும் பெருமையும் மிக்க கொங்கு மண்டலத்தின் தலைநகர் கோவை மாநகருக்கு 15 கி.மீ. தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலையில் முப்புறமும் மலைகளால் சூழப்பட்டு, எழில் கொஞ்சும் இயற்கைச் சூழலில் உள்ளது மருதமலை.

முருகப்பெருமானின் ஏழாவது படைவீடு எனப் போற்றப்படும் வகையில் இங்கே அமைந்துள்ளது அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில். இக்கோயில் தமிழகத்தின் தலைசிறந்த திருத்தலங்களில் ஒன்றாகவும் போற்றப்படுகிறது.



## பாடல் பெற்ற தலங்கள்

கொங்குநாட்டின் திருப்புகழ்ப் பாட்டுத் தலங்கள் திருச்செங்கோடு, கொல்லிமலை, ஓதிமலை, குடிமலை, தென்சேரி மலை, கொங்கணகிரி, கனககிரி, புகழி மலை, சிவகிரி, கருவூர், வெஞ்சமாக் கூடல், கொடுமுடி, சேலம், ராசிபுரம், விசய மங்கலம், காங்கயம், திருமுருகன் பூண்டி, திருவாவிநன்குடி, பழனி, பேரூர், கீரனூர் ஆகியவை.

இத்திருக்கோயிலின் தோற்றம் கி.பி.12ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகும் எனத் திரு முருகன் பூண்டி, மற்றும் அவினாசி திருக்கோயில்களில் உள்ள கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகிறது. இத்திருக்கோயிலின் சிறப்பு அம்சம் குறித்து, கச்சியப்ப முனிவர் அவர்களால் இயற்றப்பட்ட பேரூர் புராணத்தின் மருதவரைப்படலத்தில், மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் பற்றிய அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் ஒன்றும் உள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க மருதமலை திருக்கோயில் திருப்பணிகள், சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நல்லாசியுடன் துவக்கப்பட்டு- திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## முடிந்த வேலைகள்

இத்திருக்கோயிலைச் சார்ந்த வடவள்ளி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், மாணவர்கள் தங்க, அன்பு இல்லத்திற்கான கட்டடம் ரூ.3 இலட்சம் செலவில் தொழில் அதிபர் திரு.கே.வி.மோகன் மேனன் அவர்களால் அவரது பெற்றோர்கள் நினைவாக 'ரவுண்ட்டேபிள் 20' என்ற அமைப்பின் மூலம் கட்டித் தரப்பட்டுள்ளது. இதில் சுமார் 50 அனாதை மாணவர்கள் தங்கிப் பயின்று வருகிறார்கள். அவர்களுக்கு உண்ண உணவு, தங்க உறைவிடம், உடுக்க உடை, கல்விச்செலவு ஆகியவை இந்தத் திருக்கோயில் மூலமே செய்யப்பட்டுவருகிறது.

## சித்த மருத்துவமனை

வடவள்ளி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் புதியதாக சித்த மருத்துவமனைக் கட்டடம் ரூ.3 இலட்சம் செலவில் கோவை தொழில் அதிபர் திரு. கே. மோகன்மேனன் அவர்களால் இத்திருக்கோயிலுக்கு உபயமாகக் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுதோறும் 40,000 பேருக்கு இலவசமாகச் சித்த மருந்துகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருக்கோயிலைச் சேர்ந்த வடவள்ளியிலுள்ள மேல்நிலைப் பள்ளிக்கு ஏழை எளிய மாணவ மாணவிகள் கல்வி பயிலப் புதிதாகப் பள்ளிக்கட்டடம் முதல் தளம் ரூ.38 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

திருக்கோயிலின் மலைமீது 'மினி-பஸ்' நிற்குமிடத்தில் வழிபடுவோர் வசதிக்காக ஒரு பெரிய நிழற்குடை ரூ.40,000 செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

திருக்கோயிலில் மலைமீது 'கார் பார்க்' அருகில் பழுதடைந்திருந்த பொதுக்குளியல் மற்றும் கழிப்பறை ரூ.1.50 இலட்சம் செலவில் சிறப்புப்பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, சுகாதாரமான முறையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மலைமீது பாலாலயத் திருக்கோயில் முன்புறம், சுவாமி தரிசனம் செய்யவரும் பக்தர்களுக்கு வெயில் மற்றும் மழை பாதிக்காவண்ணம் ரூ.25,000 செலவில் நிழற்பந்தல் அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

## கோடையில் நிழற்பந்தல்

மலைமேல் பேருந்து நிற்குமிடத்திலிருந்து கோயிலுக்குச் செல்லும் வழிவரை உள்ள படிக்கட்டுகளில், கோடைகாலத்தில் பக்தர்களுக்கு வெயில் பாதிப்பு ஏற்படாத வகையில் ஆண்டுதோறும் கோடைக்காலப் பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது.

திருக்கோயிலுக்குப் பூம்புகார் நிறுவனத்தால் தங்கரத வேலைகள் செய்யப்பட்டு வரும் இடத்தில் பாதுகாப்பின் பொருட்டு ரூ.95,000/ செலவில் 'ஜி.ஐ.சீட்' கொட்டகையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

## மூலவர் சன்னதி, முகமண்டபம் முக்கியத் திருப்பணிகள் மகாமண்டபம் கட்டும் திருப்பணிகள்:

இப்பணியில் முதற்கட்டத் திருப்பணி ரூ.30 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு, அதனைத் தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் மூலம் கட்டுமானப்பணி செய்யப்பட்டு வருகிறது. தற்போது கருங்கற்களினால் ஆன சிற்ப வேலைப்பாடுகள் கலசம் என்னும் விரிவாக்கம் முடிய செய்யப்பட்டுள்ளது.


## தங்க ரதத் திருப்பணி

இத்திருக்கோயிலில் தங்கரதம் செய்யும் வேலை, பூம்புகார் நிறுவனத்தால் மிக நேர்த்தியாகச் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மரத்தேர் வேலை முடிவுற்று, அதற்குமேல் செப்புத் தகடுகள் போர்த்தும் பணி முடிவுற்று, வெள்ளித் தகடுகள் போர்த்தும் வேலை நடைபெற்று வருகிறது. வெள்ளித் தகடுகள் போர்த்தப்பட்டவுடன் தங்கத் தகடு போர்த்தும் வேலை நடைபெற உள்ளது.

இத்திருக்கோயிலில் தயாராகி வரும் தங்க ரதத்தின் உயரம் 16 '67/8' ஆகும். இதன் மதிப்பு, சுமார் ரூ.125 இலட்சமாகும்.

இத்திருக்கோயிலைச் சேர்ந்த வடவள்ளியிலுள்ள மேல்நிலைப் பள்ளியில் இரண்டாம் தளம் கட்டுமானப்பணி ரூ.38 இலட்சம் செலவில் நடைபெற்றுவருகிறது.

அரசு உதவியால் எழில்பெற்ற அவினாசித் தேர்



இன்னும் ஒருமாத காலத்தில் அந்த வேலை முடிவுறக் கூடும்.

திருக்கோயிலுக்கு இதுநாள் வரை ராஜகோபுரம் இல்லை. எனவே, ஒரு இலட்சத்திற்கும் மேலான செலவில், புதிதாக ராஜகோபுரம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ராஜகோபுரத்திற்குச் செல்லும் படிக்கட்டுகளின் அடித்தளத்தில் கடைகள், கட்டடங்கள் ரூ.120 இலட்சத்தில் புதிதாகக் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் உள்ள திருக்கோயில் நிர்வாக வாரியத்தில் அனுமதி பெறப்பட்டு, தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தினரால் விரைவில் பணி துவக்கப்படவுள்ளது.

இத்திருக்கோயிலுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் மின்சாரத்தில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருவதால், பொதுமக்களின் நலன் கருதி, திருக்கோயில் உபயோகத்திற்கெனத் தனியாக ஒரு டிரான்ஸ்பார்மர் நிறுவ இத்துறை ஆணையர் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த வேலைகளைத் தமிழ்நாடு மின்வாரியம் மேற்கொள்ள விருக்கிறது.

## தங்கத்தேர் கூடாரம்

திருக்கோயிலில், பூம்புகார் நிறுவனத்தால் செய்யப்பட்டு வரும் தங்கரதம் வேலை முடிந்தவுடன் அற்புதமான அந்தத் தங்க ரதத்தைப் பாதுகாக்கத் தேர்நிலைக் கட்டிடம் ஒன்று தனிப்பட ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளது.

## சன்னதிகள் கட்டும் பணி

ஒவ்வொன்றும் ரூ.13.50 இலட்சம் செலவில் கருங்கற்

**நல்வாழ்த்துக்களுடன்............**

கோவை மாநகரை ஒட்டி பேரூர்செட்டிபாளையம் ஊராட்சி போஸ்டல் காலனி அருகில் நகரமைப்புத் துறையினரின் ஒப்புதலுடன் 'ஏ' மற்றும் 'பி' டைப் தனித்தனி வீடுகளாகக் கட்டடம், வங்கிக் கடன், அல்லது ரொக்கத்திற்குக் கட்டி விற்பனை செய்கிறோம்.

**அணுக வேண்டிய முகவரி :**
**ஆர். முத்துசாமிகவுண்டர்**
**கட்டட ஒப்பந்ததாரர்**
**45, பழைய போஸ்டாபீஸ் சாலை,**
**மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக எதிர்ப்புறம்**
**கோவை.**

களினால் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய பட்டீசுவரர் மற்றும் மரகதாம்பிகை சன்னதிகள் விரைவில் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

மருதமலை அடிவாரத்தில், பொதுமக்களின் வசதிக்காக ரூ.2.20 இலட்சம் செலவில் நிழற்குடை அமைக்கும் பணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வேலையைச் செய்ய உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மருதமலை அடிவாரத்தில், திருக்கோயிலுக்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில், பக்தர்களுக்காக இளைப்பாறும் மண்டபம், குளியலறை, கழிவறை மற்றும் திருமண மண்டபம் ஆகியவை கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

வடவள்ளியில், இத்திருக்கோயில் சார்பில் நடைபெற்று வரும் பள்ளி வளாகத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கழிப்பறை ரூ.1.30 இலட்சம் செலவில் கட்டிக் கொடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு இதற்கான பணி விரைவில் ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்படும்.

திருக்கோயிலுக்குச் சொந்தமாக, வடவள்ளியில் மேல்நிலைப்பள்ளியின் முன்பகுதியில் சாலையின் ஓரம், திருக்கோயிலுக்கு நிரந்தர வருமானம் பெறும் வகையிலும் பொது மக்களின் நலன் கருதியும், வர்த்தக அங்காடியொன்று கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலின் துணைக் கோயிலாக, வடவள்ளி அருள்மிகு கரிவரதராஜபெருமாள் திருக்கோயில் அமைந்துள்ளது. அக்கோயில் குடமுழுக்கு நடைபெற்று 40 ஆண்டுகளுக்கு மேலாகிறது, எனவே அத் திருக்கோயிலைப் புதுப்பித்து, குடமுழுக்குச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் திருப்பணி வேலையுடன், திருமதில் கட்டும் பணியும் ரூ.2.5 இலட்சம் செலவில் செய்யப்பட வேண்டியுள்ளது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

# கோவை மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மத்திய அரசின் 80 சதவிகிதப் பங்கும், மாநில அரசின் 20 சதவிகிதப் பங்குத் தொகையும் கொண்டு கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கி, அதன்மூலம் அவர்களுக்கு வருமானம் பெருக்கவும், வாழ்க்கைத்தரம் உயரவும், மேலும் மக்களுக்கு அத்தியாவசியக் கோரிக்கைகள் நிறைவேற்றிடவும், அதன் மூலம் அரசுக்குச் சொத்துக்கள் உருவாக்கிடவும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது:

கோவை மாவட்டத்தில் 1994-95-ஆம் ஆண்டில் 1600 தொகுப்பு வீடுகள் ரூ.350.40 இலட்சத்தில் கட்ட இலக்கு நிர்ணயித்து, இது வரை 1410 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. இதில் 1,334 வீடுகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

64 பள்ளிக் கட்டடங்கள் ரூ.102.50 இலட்சம் மதிப்பீட்டிலும், 12 சத்துணவு மையக் கட்டடங்கள் ரூ.9.60 இலட்சம் மதிப்பிலும், 21 நியாயவிலைக் கடைகளுக்கான கட்டடங்கள் ரூ.14.80 இலட்சம் மதிப்பிலும், 75 சாலைகள் 99 கி.மீ. நீளத்திற்கு ரூ.151.00 இலட்சத்திற்கு இரண்டடுக்குக் கப்பிச் சாலைகளாக அமைத்து, சாலை மேம்பாடு செய்தும் கொடுக்கப்பட்டுள்ளன.

29 புதிய கசிவு நீர்க்குட்டைகள் அமைத்து 4 கோயில் குளங்கள் பராமரித்துப் புதுப்பித்தும், பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான ஒரு குளம், ஊராட்சி ஒன்றியக் குளம் ஆகியவை அபிவிருத்தி செய்தும் ரூ.43.50 இலட்சத்தில் நீர்ப்பாசனப் பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

கோவை மாவட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் 5 சமுதாய நலக்கூடங்கள், (திருமண மண்டபங்கள்) ஒவ்வொன்றும் தலா ரூ.2.50 இலட்சம் மதிப்பில் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுப் பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன. இதில் ஒவ்வொரு ஒன்றியத்திலும், குறைந்தது 3 கட்டடங்கள் ஆதிதிராவிடர் காலனியில் கட்டவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

இதனைத்தவிர ஆதிதிராவிடர் மக்களுக்கான பல்வேறு சிறப்பு ஒதுக்கீடுகள் வழங்கி ஆதிதிராவிடர் காலனியில் அடிப்படை வசதிகள் இணைப்புச் சாலைகள் அமைத்தல், அபிவிருத்தி செய்தும், மயானச் சாலைகள் அமைத்தல், அபிவிருத்தி செய்தும், பாலங்கள் கட்டுதல் குடிநீர் வசதிகளுக்காகக் குழாய்க் கிணறு, தரைமட்டத் தொட்டி, குழாய்கள் போடுதல், தெரு விளக்குகள் அமைத்தல், சாக்கடை வசதி செய்தல், கழிப்பிடங்கள் கட்டுதல், ஆகிய பல்வேறு பணிகளுக்காக ரூ.162.80 இலட்சம் ஒதுக்கீடு செய்து பணிகள் முடிக்கப்பட்டு வருகின்றன.

சமுதாய மேம்பாட்டிற்கு, சமுதாயக் காடுகள் அபிவிருத்தி செய்து நாட்டின் வளர்ச்சிக்கு உதவிட, சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ், இவ்வாண்டில் 13.89 இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, 1000 எக்டேர் நிலப்பரப்பில், தோப்பு நடவாகவும், நிறுவன நடவாகவும், தொகுப்பு வீடுகளிலும் நடப்பட்டன.



இதற்காக ரூ.33.35 இலட்சம் அரசு நிதியாக வழங்கி, தொகை மேற்காண் பணிகளுக்குச் செலவிடப்பட்டது.

### மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம்

1993- 94-ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு தனது நிதியினைக் கொண்டு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற கொள்கை யுடன் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம் என்று அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1993 -94-ஆம் ஆண்டில், ரூ.109.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு தமிழக அரசினால் வழங்கப்பட்டு இதற்காக 72 பணிகள் எடுக்கப்பட்டு அனைத்துப் பணி களும் முடிக்கப்பட்டு விட்டன.

1994- 95-ஆம் ஆண்டு மாவட்டப் பரவ லாக்கப்பட்ட திட்டத்தின்கீழ், இம்மாவட்டத் திற்கு அரசு நிதி ஒதுக்கீடு ரூ.239.50 இலட்சம் வழங்கியது. இதற்கு 308 பணிகள் எடுக் கப்பட்டு உள்ளது. இதுவரை 68 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.82.00 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறப்பினமாக ஊரகக் கப்பிச்சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்று வதும், மலைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகளுடன் மலைப்பகுதியில் உள்ள அவர்களது வீடுகளுக்குத் தகரக் கூரைகள் போட்டுக் கொடுத்ததும் இதில் குறிப்பிடத் தக்கவையாகும்.

இத்திட்டத்தில், ஆதிதிராவிட மக்களுக்குப் பல்வேறு அடிப்படை வசதிகள் முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்கப்பட்டு உள்ளன.

### பாராளுமன்ற உறுப்பினரின் தொகுதி வளர்ச்சித் திட்டம்: 1993-94

இத்திட்டம் 1993 -94-ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது. ஒரு தொகுதிக்கு ரூ.5 இலட்சம் வீதம் கீழ்க்கண்டவாறு தொகை பெறப்பட்டு வேலைகள் செய்து முடிக்கப் பட்டன. விவ்ரங்கள் வருமாறு.

| நாடாளுமன்ற உறுப்பினரின் பெயர் | எடுத்துச் செய்யப் பட்ட வேலைகள் | ஒதுக்கீடு செய்யப் பட்ட தொகை |
|---|---|---|
| லோக் சபா | | |
| திரு .சி.கே.குப்புசாமி எம்.பி. (கோவைத் தொகுதி) | 5 | 5.00 |
| திரு. பா.ராஜாரவிவர்மா, எம்.பி., (பொள்ளாசித் தொகுதி) | 7 | 5.00 |
| திரு. ஆர்.பிரபு, எம்.பி., (நீலகிரித் தொகுதி) | 7 | 2.50 |
| ராஜ்ய சபா | | |
| திரு.எஸ்.விடுதலை விரும்பி, எம்.பி. | 1 | 5.00 |
| | 20 | 17.50 |

### பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டம்: 1994-95

இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டிற்குக் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தொகை விடுவிக் கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன:

| பாராளுமன்ற உறுப்பினரின் பெயர் | செய்யப்படும் வேலைகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| லோக் சபா | | |
| திரு .சி.கே.குப்புசாமி எம்.பி. (கோவைத் தொகுதி) | 43 | 100 |
| திரு. பா.ராஜாரவிவர்மா, எம்.பி., (பொள்ளாசித் தொகுதி) | 40 | 83.50 |
| திரு. ஆர்.பிரபு, எம்.பி., (நீலகிரித் தொகுதி) | 74 | 50.00 |
| ராஜ்ய சபா | | |
| திரு.எஸ்.விடுதலை விரும்பி, எம்.பி. | 32 | 100.00 |
| திரு. டாக்டர் மு.அறம், எம்.பி. | 9 | 120.00 |
| | 198 | 433.50 |

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித்திட்டப் பணிகள் அனைத்தும்,



கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள

திரு சந்திரபிரகாஷ் சிங், இ.ஆ.ப.,

கிராம மக்கள் அத்தியாவசியத் தேவைகளை அடிப்படையில் கொண்டு மக்கள் பயன்பெறும் வகையில் செய்யப்பட்டு வருகின்றது.

**வேலைக்கு உறுதியளிக்கும் திட்டம்**

இத்திட்டம் வேலையில்லாத ஏழை எளிய மக்களுக்கு ஒரு குடும்பத்தில் வயது வந்த 2 பேருக்கு வேலை வாய்ப்பினை ஒரு ஆண்டில் 100 நாட்களுக்கு உறுதி செய்யும் திட்டமாகும். அத்துடன் நிரந்தரச் சொத்துக்கள் உருவாக்கப்படும். இத்திட்டம் மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தப்படும் திட்டம். தேர்வு செய்யப்பட்ட பின்தங்கிய வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். அதன்படி 1994-95-ஆம் ஆண்டு முதல் கோவை மாவட்டத்தில், அன்னூர், அவினாசி, பல்லடம் மற்றும் சூலூர் வட்டாரங்கள் தேர்வு செய்யப்பட்டு, பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன. இத்திட்டத்திற்



காக 1994- 95-ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு பங்குத்தொகை ரூ.120/ இலட்சமும், மாநில அரசு பங்குத்தொகை ரூ.30/ இலட்சமும் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பணிகள் சத்துணவுக்கூடங்கள் பள்ளிக் கட்டடங்கள், சாலைகள், சமுதாயக் கூடங்கள், குளங்கள், கசிவுநீர்க்குட்டைகள், நிலத்தடிநீர் பெருக, பல்வேறு திட்டங்கள் செயலாக்கப் படவுள்ளன.

பணிகள் தொடங்கிட ஆண்டு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, விரைவில் செயலாக்கப்படவுள்ளது.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

1994- 95-ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புற ஏழைமக்கள் தம் வாழ்வில் முன்னேற்றமடைய, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ், 8381 பேர்களுக்கு அரசு மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்க வேண்டும் எனக் கோவை மாவட்டத்திற்கு அரசால் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. நிதி இலக்கு ரூ.419.200 இலட்சங்கள் எய்தவேண்டும் எனவும் அரசால் குறியீடு வழங்கப்பட்டது.

இந்நிதியாண்டில் 31.3.95 முடிய 14,345 பேர்களுக்கு இத்திட்டத்தில் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டது. அரசு கொடுத்த இலக்கை விஞ்சி, 5964 நபர்களுக்குக் கூடுதலாகக் கடன் வழங்கப்பட்டது. கடன் வழங்கப்பட்டதில் அரசு மானியம் ரூ.371.29 இலட்சங்களும், வங்கிக்கடன் ரூ.556.000 இலட்சங்களும் ஆக மொத்தம் 927.290 இலட்சங்கள் மானியக்கடன் கூடிய கடனாக வழங்கப்பட்டது. இந்தத்திட்டத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் ஆக 20 வங்கிகள் பங்கெடுத்துள்ளன.

இத்திட்டத்தில 5059 ஆதி திராவிடர்களுக்கும், 215 பழங்குடியினருக்கும், 135 உடல் ஊனமுற்றோர்களுக்கும் 8936 மற்ற வகுப்பினருக்கும் ஆக 14,345 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். இதில் 7852 பேர் மகளிர் ஆவர். இது ஒரு சாதனை அளவாகும்.

ஒருங்கிணைநத ஊரக வளர்ச்சித் திட்டத்தில், 10% நிதி ஒதுக்கீடு, அதாவது ரூ.41.92 இலட்சங்கள் உள்கட்டமைப்பு வசதிகளுக்காகச் செலவிட வேண்டும் என அரசால் தெரிவிக்கபபட்டது. கோவை மாவட்டத்தில் இதுவரை இவ்வினத்தில் போக்ரா தொழிற்கூடங்களுக்கு 12 பணிகளுக்கு ரூ.5.80 இலட்சங்களும், கால்நடை பராமரிப்புக்கு 25 பணிகளுக்கு ரூ.35.28 இலட்சங்களும் ஆக மொத்தம் 37 பணிக்கு ரூ.41.08 இலட்சங்கள ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் ஓர் அங்கமாகும். கிராமப்புறத்தில் வசிக்கும் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, அவரவர்களுக்கு எந்தத் தொழில் செய்வதற்குத் தெரியுமோ

அந்தத் தொழில் செய்வதற்கும், மற்றும் கிராமப்புறங்களில் கச்சாப் பொருட்கள் கிடைப்பது, விற்பனை வசதி ஆகியவற்றைப் பொருத்தும் புதிய தொழில் தொடங்கவும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 50% மானியத்துடன் கூடிய கடனும் வங்கியின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் இத்திட்டம் கோவை மாவட்டத்தில் துவங்க 1991- 92-ஆம் ஆண்டில் மார்ச் மாதம் அரசின் உத்தரவு பெறப்பட்டு 1992 -93-ஆம் ஆண்டு முதல் முழுமையாகச் செயல்பட்டு வருகின்றது.

1994 -95-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வட்டாரத்திலும் தலா 10 டோக்ரா குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் எனக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, 160 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 567 தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களும், 16 பழங்குடியினத்தவர்களும் மற்றும் 1322 மற்ற வகுப்பினர்களும் ஆக மொத்தம் 1905 பெண்கள் பயனடைந்துள்ளனர் இவர்களுக்கு தொழில்கள் துவங்கக்கடன் தொகை ரூ.63,75,400/ உடன் மானியத் தொகை ரூ.55,26,211/ வங்கியின் மூலம் அனுமதிக் கப்பட்டுள்ளது.

## கிராமப்புற சுயவேலைவாய்ப்புத்திட்டம்

'டிரைசம்' ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் துணைத்திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 1994- 95-ஆம் ஆண்டு 1300 கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப் பட்டு, பல்வேறு தொழில் துறைகளில் 1300 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. 31.3.1995 முடிய ரூ.49.28 இலட்சம் இத்திட்டத்திற்கெனச் செலவிடப்பட்டுள்ளது.

பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ.350/ வழங்கப்படுகிறது. பயிற்சியாளர்களுக்கு அவர்கள் சுயமாகத் தொழில் செய்ய பயிற்சியளிக்கும் நிறுவனங்களுக்கு ஒரு நபருக்கு மாதம் ரூ.200 மற்றும் கச்சாப்பொருட்களுக்கு ரூ.600 மிகைப் படாமல் வழங்கப்படுகிறது.

பயிற்சி முடித்தவர்களுக்குப்பயிற்சி முடித் ததற்கான 'டிரைசம்' சான்றிதழ்கள் மற்றும் பயிற்சிக்காலத்தில் உற்பத்தி செய்த பொருட் களின் ஏலத்தொகையில் 50% வழங்கப் படுகிறது.

## சாண எரிவாயுத் திட்டம்

சாண எரிவாயுக் கலன் அமைப்பதில் முதலில் எந்தக் கொள்ளளவு கலன் சரியானது என்பதைத்தேர்வு செய்தல் முக்கியமானதாகும். கால்நடைகளின் எண் ணிக்கை, வீட்டில் உள்ள நபர்கள், பயன்படுத்தும் நோக்கம் போன்றவைகள் கலன் தேர்வு செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

4 க.மீ.தீனபந்து கலன் அமைக்க ரூ.9800 -ம் 4 க.மீ.கே.வி.ஐ.சி.கலன் அமைக்க ரூ.16,000-ம் செலவாகிறது. மானியம் அதிகபட்சமாக ரூ.2600 4 க.மீ. 3 க.மீ., அளவுள் கலன்களுக்கும் ரூ.2400-2000/ 2 க.மீ., 1 க.மீ., கலன்களுக்கும் வழங்கப்படுகிறது.

## சாண எரிவாயுவின் பிற உபயோகம்

சாண எரிவாயுக் கலன் மூலம் ஆயில் என்ஜின்கள் இயக்கி விசைத்தறி ஓட்டுதல், அவினாசி வட்டாரத்தில் நம்பியாம்பாளை யத்திலும், மதுக்கரை வட்டாரத்திலுள்ள நவக்கரையில், பால் பதனிடுதலும், பல்லடத் தில் ஐட்ராலிக் ஜாக்கி மூலம் கார் சர்வீஸ் செய்தலும் நடைபெறுகின்றன.

## சாதனை விவரம்

கோவை மாவட்டத்தில் 12,857 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கிவருகின்றன. நடப்பு, ஆண்டில் கட்டும் 635 கலன்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. கோவை மாவட்டத்தில் அவிநாசி வட்டாரத் தில் மட்டும் 3000 கலன்கள் அமைக்கப்பட்டு அகில இந்திய அளவில் சிறந்த வட்டாரத்திற்கான பரிசு ரூ.1 இலட்சம் பெற்றுள்ளது.

## புகையில்லா அடுப்பு (சூளா)

1983-ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் நமது மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், நிரந்தர அடுப்பினை அமைக்கும் சுய வேலை வாய்ப்பு முகவர்களுக்கு அடுப்பு அமைக்கவும், பராமரிக்கவும் ரூ.20 வழங்கப்படுகிறது.

**'தமிழரசு' அடுத்த இதழில்....**

**கோயம்புத்தூர் மாவட்டம் தொடர்பான சிறப்புக் கட்டுரைகள், சுவைமிகுந்த துணுக்குகள், அம்மாவட்டத்தினர் எழுத்தோவியங்கள், விளம்பரங்கள் அடுத்த 'தமிழரசு' இதழிலும் அழகுறத் தொடரும்!**

**—ஆசிரியர்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா
அவர்கள் பங்கேற்ற...

★தமிழகக்கேபிள் டி.வி. உரிமையாளர்கள் சங்க மாநில நன்றி அறிவிப்பு மாநாடு.

★திரைப்படத் தொழிலாளர்கள் குடியிருப்பு அடிக்கல் நாட்டு விழா.



